திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
3 - FEB 1962
MADRAS

திரிவிக்கிரம அவதாரம்
இராமசாமி கோயில், கும்பகோணம்

மாலை 4] பிலவ தை-பிப்ரவரி 1962 [மணி 5

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 4] பிலவ தை - பிப்ரவரி 1962 [மணி 5

திருஅம்பர் மாகாளம்

**கொந்தண் பொழிற்சோலைக் கோல வரிவண்டு
மந்தம் மலியம்பர் மாகா ளம்மேய
கந்தம் கமழ்கொன்றை கமழ்புன் சடைவைத்த
எந்தை கழலேத்த இடர்வந் தடையாவே.**

—திருஞானசம்பந்தர்.

திருஅம்பர் மாகாளம் என்னும் பாடல் பெற்ற சிவப்பதி தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் பகுதியிலிருக்கிறது. மாயூரம்—அறந்தாங்கி இருப்புப் பாதையில் பூந்தோட்டம் என்னும் நிலையத்திலிருந்து கிழக்கே ஒருகல் தொலைவிலிருக்கிறது. அரிசிலாற்றின் வடகரையிலிருக்கிறது. ஊரில் தங்குவதற்குப் பல சத்திரங்களும், தேவஸ்தான விடுதியும் இருக்கின்றன. இத்தலத்தை, **கோயில் திருமாகாளம்**, என்றும் கூறுவர். சாதாரணமாக **திருமாளம்** என்று மக்கள் வழங்கி வருகின்றனர். காளி பூசித்துப் பேறுபெற்ற தலமாகையால் **மாகாளம்** என்ற பெயர் ஏற்பட்டது. காளம் அல்லது பாம்பு—நாககன்னிகை வழிபட்டதால் இப்பெயர் உண்டாயிற்றென்றும் கூறப்படுகிறது. கோயிலுக்குள், காளி பூசிக்கும் வரலாற்றைக் காட்டும் சிற்பங்களும், நாககன்னிகை வழிபடுவதைக் காட்டும் சிற்பங்களும் இருக்கின்றன.

கோயில் நாற்புறமும் அழகிய மதில்களையுடையது; கிழக்கு நோக்கியது; கிழக்கு வாயிலில் ஒரு கோபுரம் உள்ளது; அதன் எதிரில் திருக்குளம் இருக்கிறது. கோபுரத்தைத் தாண்டி உள்நுழைந்ததும் வலது புறத்தில் கல்யாண மண்டபம் இருக்கிறது. நந்தி, பலிபீடம் இவைகளைக் கடந்ததும் துவார விநாயகர் காட்சியளிக்கிறார். இங்கு இரண்டாவது கோபுர வாயிலைக் கடக்கவேண்டும். அதிகார நந்தி எழுந்தருளியிருக்கும் இடமாதலின் அதிகாரநந்தி கோபுரம் என்று வழங்குவர். இரண்டாம் கோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்று மகாமண்டபத்தையடைகிறோம். அங்கே நாகநாதர், அம்பிகை, நாககன்னிகை முதலியவர்கள் எழுந்தருளியுள்ளார்கள். இதுவே நாககன்னிகை வழிபட்ட ஐதிகத்தைக் குறிக்கும் திருஉருவங்கள். இதற்குச் சற்று வடக்கில் காட்சி கொடுத்த நாயகரும், நடராஜப்பெருமானும் எழுந்தருளியிருக்கிறார்கள். காட்சி கொடுத்த நாயகரின் திருவுருவம் கண்கவர் வனப்பினையுடையது. சிறிது மேற்கே மூலஸ்தானமூர்த்தியான **மகாகாளநாதர்** சந்நிதியிருக்கிறது. சந்நிதியின் வலப்பக்கத்தில் துவார கணபதியும், விசுவேசலிங்கமும் எழுந்தருளியுள்ளனர். மூலஸ்தானத்திற்குத் தெற்கே **தியாகேசப்பெருமான்** சந்நிதியிருக்கிறது. தம்பிரான் தோழராக சோமாசிமாற நாயனாருடைய யாகச் சிறப்பை உலகறியச்செய்த மூர்த்தி இவரே. கர்ப்பக் கிரகத்தைச் சுற்றி அறுபத்துமூவர், தட்சிணாமூர்த்தி, சிங்காரவேலர், சண்டேசர், உதங்கர் மதங்

சுந்தரர்—பரவையார்—சோமாசிமாறர்

கர் என்ற முனிவர்கள் சந்நிதிகள் இருக் இருக்கின்றன.

வெளிப் பிரகாரம் வந்தால் தென்மேற்கு மூலையில் **காளிகோயில்** இருக்கிறது. இங்குள்ள தேவி அம்பாசுரனைக்கொன்ற வீரஹத்திதோஷம் நீங்க மாகாளநாதரை வழிபட்டதாகத் தலபுராணம் கூறுகிறது. வென்ற அசுரர்களின் இருதலைகளை அம்மைத் தலையில் வைத்து முடித்திருக்கிருர்.

இந்த கோயிலுக்கும் சிறிது தென்கிழக்கே அம்பிகையின் **தனிக்கோயில்** அமைந்திருக்கிறது. அம்பாளின் திருநாமம் **பயட்சயாம்பிகை.** அடியவர்களின் அச்சத்தைப் போக்கும் அம்மையாதலின் அப்பெயர் ஏற்பட்டது. மக்கள் பொதுவாக **பட்சநாயகி** என்றும் வழங்கிவந்தனராம். அன்புடையார் மாட்டு அன்பு செய்யும் அம்பிகையாதலின் அப்பெயரும் பொருத்தமானதே. வடகிழக்குப் பிரகாரத்தில் சோழமன்னன்பூசித்த இலிங்கமூர்த்தியின் சந்நிதி மேற்கு நோக்கியிருக்கிறது.

இத்தலத்தின் தீர்த்தம், **மகாகான தீர்த்தம்** அல்லது அம்ச **தீர்த்தம்.** அது கோயிலுக்கு எதிரிலுள்ள திருக்குளம். கோயிலுக்குத்தெற்கே ஓடுகிற **அரிசிலாறும்** ஒரு தீர்த்தமே. கோயிலில் ஐந்துகால பூசை நடைபெறுகிறது. வைகாசி மாதம் ஆயிலிய நட்சத்திரத்தில் சோமாசிமாறநாயனுர் யாக உற்சவம் வெகு சிறப்பாக நிகழும். திரளான மக்கள் வந்து கூடுவர். அரனும் உமையும், புலையன் புலைச்சி உருவில் யாக சாலைக்கு எழுந்தருளி அவிர்ப்பாகம் ஏற்கும் முறையில் திருவிழா மிகப் பிரபலமாக நடக்கும். இந்த நிகழ்ச்சியைக் கோயிலில் அழகிய ஓவியங்களாகத் தீட்டப் பெற்றிருக்கிறது.

இந்த தலத்துக்குக்கிழக்கே சுமார் 1½ கல் தொலைவில் **அம்பல்** என்று வழங்கும் **அம்பர் பெருந்திருக்கோயில்** என்ற பாடல் பெற்ற பதி இருக்கிறது. இவ்விரண்டிற்குமிடையே சோமாசிமாற நாயனுர் யாகம் செய்த இடம் உள்ளது, அங்கே **அச்சந்தீர்த்த விநாயகர்** கோயில் ஒன்றும் இருக்கிறது. **வீற்றிருந்த பெருமாள்** கோயில் ஒன்றில், **மோகினியம்மையின்** அழகிய திரு

சோமாசிமாறருக்கு இறைவன் காட்சி கொடுத்தல்



நாககன்னிகை வழிபடல்

வுருவம் காணப்படும். அதை அருச்சகர் தீண்டிப் பூசை செய்வதில்லை. தூரத்திலிருந்து கொண்டு, ஆடை மாலை முதலியவற்றைக் கோலால் களைவதும் சாத்துவதும் செய்கின்றனர். மிகவும் தூய்மையாக பூசை வழிபாடு செய்யாவிடில் இன்னல் உண்டாகும் என்று அஞ்சுகின்றனர்.

இத்தலத்து இறைவன் மீது திருஞானசம்பந்தர் மூன்று திருப்பதிகங்கள் பாடியருளியிருக்கின்றனர். குறிஞ்சிப் பண்ணில் பாடியுள்ள பதிகத்தில் மாகாளநாதரை வழிபடுவோரை வினைசாரா, அல்லல் அடையா, இடர் சேரா, குற்றம் குறுகா என்றும், அப்பெருமான் கழலை நினைப்பவர் இன்பம் எய்துவர், உயர்வான் அடைவர் என்றும் கூறுகிறார். நட்டராகப் பண்ணிலான பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் "அரிசிலின் வடகரைவருபுனல் மாகாளம்" என்று அரிசிலாற்றின் வடகரையில் தலம் அமைந்திருப்பதைக் குறிக்கிறார். இந்த ஆற்றை மக்கள் அரசலாறு என்று வழங்குகின்றனர். மேலும் இப்பதிகத்தில் மாகாளத்தை பரவிப் பணிபவர், வழிபடுபவர், பெருமையைப் பேசுபவர் முதலியவர்களை வல்வினை அடையாது, உலகில் பெருமையடைவர், அவலமும் பிணியும் கவலையும் களைவர் என்று கூறுகின்றார். சாதாரிப்பண் பதிகத்தின் ஒரு பாடலில் "காளியேத்தும் அழகனார் அரிவையோடிருப்பிடம் அம்பர்மாகாளந்தானே" என்று இறைவனைக் காளி வழிபட்டதைக் குறிக்கிறார்.

அருணகிரிநாதர் இத்தலத்திற்கு, "காதோடு தோடிகலியாட" என்று தொடங்கும் ஒரு திருப்புகழ்ப் பாடலைப் பாடியிருக்கிறார். அதை

வானோர்க ளீசன்மயி
லோடுகுற மாதுமண
வாளாகு காகுமர
மாமயிலின் மீதுதிரு
மாகாள மாநகரில்
மாலொடடி யார்பரவு
பெருமாளே

என்று முடிக்கிறார்.

மகாவித்துவான்-மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், அம்பர் புராணம் என்ற சிறந்த நூலை இயற்றியிருக்கின்றார்கள். அது இன்னும் அச்சாகவில்லை, அன்னவடிவில் இறைவன் திருமுடியைத் தேடிக் காணமுடியாமற்போன பின்னர் பிரமன் இத்தலத்தில் தீர்த்தத்தில் படிந்து பெருமானை வழிபட்டுப் பேறுபெற்றான் என்பதையும், இந்திரன் தன் நகரை இழந்து இத்தலத்தில் அடைக்கலம் புகுந்து இறைவனை வணங்கிப் பின்னர் அதை மீளப்பெற்றான்

உதங்கமதங்க முனிவர் வழிபடல்



சோமாசிமாறரும் சுந்தரரும்

என்பதையும், மன்மதன் விசுவாமித்திரனுல் இடப்பட்ட சாபத்தை இங்கு நீங்கப் பெற்ருன் என்பதையும், விமலன் என்பவன் மக்கட் பேறடைந்தான் என்பதையும், நந்தன் என்ற மன்னன் பிரமஹத்தி நீங்கப்பெற்ருன் என்படதையும் அம்பராசுரனைக்கொன்ற வீரஹத்தி நீங்க, காளி இங்கு வழிபட்டாள் என்பதையும், சோமாசி மாறர் வரலாற்றையும் இத்தல புராணம் விரிவாகக் கூறுகிறது.

சோமாசிமாறர், அம்பரில் பிறந்த அந்தணர்; மனைவி சுசிலா தேவியார். சோமயாகம் செய்ய விரும்பினர். இறைவனே நேரில் தோன்றி அவிர்ப்பாகத்தைப் பெறவேண்டும் என்ற பேரவாகக் கொண்டார். திருவாரூரில் பரவையாருடன் வாழ்ந்த சுந்தரருக்கு தூதுவிளங்கீரை விருப்பமுண்டென்று தெரிந்து நாள்தோறும் அக்கீரையை அவர் மனையில் சேர்ப்பித்தார். பின் அவருடைய நட்பையும் பெற்ருர். சோமாசிமாறரின் எண்ணத்தை யறிந்த சுந்தரர் தியாகராசப் பெருமானிடம் விண்ணப்பித்தார். அவரும் சோமாசி மாறர் செய்யும் யாகத்தில் அவிபெறுவதாக அருள்புரிந்தார். அம்பரில் யாகம் தொடங்கிற்று. வைகாசி ஆயிலிய நன்னுள்; அவிபெறவேண்டிய காலம். தியாகப்பெருமான் நீசத் திருக்கோலத்துடன், அம்மை புலைச்சியாகவும், சிவ குமாரர்கள் பள்ளச் சிறுவர்களாகவும், நான்கு வேதங்களும் நாய்களாகவும் உடன்வர யாகசாலைக்கு வந்தார். சோமாசிமாறர் நீசன் வருவதைக் கண்டு பயந்தார். அங்கிருந்த அந்தணர்கள் யாகம் பழுதுபட்டது என்று ஓடிவிட்டனர். யானை முகப்பெருமான் தமது சுட்டு விரலால் 'இவரே தியாகேசர்' என்று சோமாசி மாறருக்குக் குறிப்பால் உணர்த்தினர். அவரும் நீசவேடப் பெருமானுக்கு அவிர்ப்பாகத்தையளித்தார். உடனே, அவர் காட்சி கொடுத்த நாயகராக—விடையூறும் விமலனுகத் தோன்றி சோமாசி மாறருக்குத் திருவருள் புரிந்தார். அஞ்சி ஓடிய அந்தணர்களும் வந்து வணங்கினர். 'வேதம் ஓதியும் உண்மை உணரும் ஆற்றல் உங்களுக்கு இல்லாமல் போனபடியால், **மத்தியான காலத்து மட்டும் நீங்கள் சண்டாளர்கள் ஆகுக''** என்று இறைவன் பணித்தருளினர். இத்தகைய வரலாறு பெரிய புராணத்தில் கூறப்பெறவில்லை. சேக்கிழார், 'அம்பரில் பிறந்த அந்தணர்; எத்தன்மையராயினும் ஈசனுக்கன்பர் என்ருல் அத்தன்மையர் தாம் நமையாள்பவர் என்று கொள்வார்; சித்தந் தெளியச் சிவன் அஞ்செழுத்தோதும் வாய்மை நித்தநியமம் எனப் போற்றும் நெறியில் நின்ருர்; திருவாரூர் வன்ருெண்டர்பால் பெரு நட்பு கொண்டார்'' என்பனவற்றையே இந்த நாயனர் புராணத்தில் கூறியிருக்கிருர்.

திருமாகாளம் கோயிலிலிருந்து 25 தமிழ்க் கல்வெட்டுக்களைப் படியெடுத்து, *1910*—ஆண்டில் *93—117* எண்களாக அரசாங்கத்தினர் பதிவு செய்திருக்கின்றனர். இந்த கல்வெட்டுக்கள் கோயில் கர்ப்பக் கிரகச் சுவர்கள், கிழக்கு, தெற்கு முதற்பிரகாரச் சுவர்கள், நான்கு கற்கள் இவைகளில் காணப்படுகின்றன. இவை, குலோத்துங்கன் I (கி.பி. *1070-1118*), குலோத்துங்கன் II (கி.பி. *1123-46*), விக்கிரமசோழன் (கி.பி.*1118-35*), குலோத்துங்கன் III (கி.பி

1186-1216) முதலிய சோழமன்னர்கள் காலத்தவை. பூபாலகுலவல்லி வளநாடு, உய்யக் கொண்ட வளநாடு இவற்றிலுள்ள அம்பர் நாட்டிலுள்ள அம்பர் என்று கூறுகின்றன. அம்பர் ஸ்ரீ மாகாளம், திருமாகாளம், அம்பர் நகரம் என்று ஊரின் பெயர்களாகவும், மாகாளத்து மகாதேவர், அம்பர் திருமாகாளம் உடையார், ஆட்கொண்டநாயகர் என்பவை இறைவன் பெயர்களாகவும் அவை அறிவிக்கின்றன. அம்பிகையை உமாபரமேசுவரி என்று ஒரு கல்வெட்டுக் குறிக்கிறது. புறவுவரி விளாகம், வாதண்டூர், எயினிகுடி இந்தகிராமங்களைத் தானம் செய்தது, ஆட்கொண்ட நாயகர் (காட்சி கொடுத்த நாயகர்) அம்பிகை திருவுருவங்களை எடுப்பித்து பூசனைக்கு நிவந்தங்கள் ஏற்படுத்தியது, அம்பாள் கோயிலுக்கு நிலதானம் செய்தது, விளக்குகளுக்காக நிலம், பணம், ஆடுகள் கொடுத்தது, ஆட்கொண்ட நாதர் பூசைவழிபாட்டிற்காக நெல் அளித்தது, கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் பற்றிய வழக்கில் வெற்றி பெற்று அவைகளைக் குத்தகைக்கு விட்டது, குன்றக் கூற்றத்துப் பழுவூரினரான காரிபுலியன் என்ற சோழமாராயன் இறைவனுக்கு முத்துமாலையும் வயிர முடியும் வழங்கியது முதலிய அரியசெய்திகளை இக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. சிறுவேளூர், எயினிகுடி (ஏனங்குடி), மாத்தூர், செம்பங்குடி, பழுவூர், அன்னியூர், பெரும்பற்றப் புலியூர் அநங்க வல்லவப்பாடி முதலிய ஊர்களின் பெயர்களையும் அவைகள் குறிக்கின்றன.



காளி இறைவனைப் பூசித்தல்

செம்பொன்மா மணிகொழித் தெழுதிரை
வருபுனல் அரிசில் சூழ்ந்த
அம்பர்மா காளமே கோயிலா
அணங்கினோ டிருந்தகோனைக்
கம்பினுர் நெடுமதிற் காழியுள்
ஞானசம் பந்தன் சொன்ன
நம்பிநாள் மொழிபவர்க் கில்லையாம்
வினைநலம் பெறுவர்தாமே

—திருஞானசம்பந்தர்.

திருவாரூர் : தியாகராசசுவாமி கோயிலில் 8—1—62-ல் முசுகுந்த சகஸ்ரநாம அர்ச்சனையும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சமயச் சொற்பொழிவும் நடைபெற்றன.

தோகூர்: மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலில் 5—1—62 வெள்ளிக்கிழமை டாக்டர் திரு. வி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் முன்னிலையில் தமிழ் அர்ச்சனை துவக்கப்பட்டிருக்கிறது. திரு. திருஞானசம்பந்த ஓதுவா மூர்த்தியால் திருவெம்பாவை திருப்பாவை கோளறு பதிகம் ஒலிபெருக்கி மூலம் பாடப்பட்டன.

திருமண்டங்குடி : தொண்டரடிப்பொடியாழ்வார் திருநட்சத்திர உற்சவம் ஷை கோயிலில் 4—1—62-ல் நடைபெற்றது.

பழனி : தண்டாயுதபாணிசுவாமி கோயிலில் தைப்பூசத்திருவிழா 15—1—62 முதல் 24—1—62 வரை நடைபெற்றது.

இராமேஸ்வரம் : இராமநாதசுவாமி கோயில் இரண்டாம் பிரகாரம் திருப்பணி வேலை 16—9—61-ல் துவக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

நாகப்பட்டினம் : சௌந்திரராஜப்பெருமாள் கோயிலில் 30—12—61-ல் திரு. ஏ. இராமச்சந்திர நாயுடு, பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையில், அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. டி. இராமலிங்க ரெட்டியார், எம்.ஏ.,பி.எல்., அவர்கள் 'திருப்பாவைச் சிறப்பு' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

செய்திகள்

பேரூர் : பட்டீசுவரர் கோயிலில் 16—12—61 காலை 7-15 மணிக்கு நவக்கிரகங்கட்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகளுடன் கோளறுபதிக பாராயணம் துவக்கப்பெற்றது. பாராயணத்தில் கலந்துகொண்ட மாணவிகட்கு தேவஸ்தானத்திலிருந்து பட்டுப்பாவாடைகள் வழங்கப்பெற்றன. 14—12—61 முதல் மார்கழித் திருவாதிரைத் திருவிழா திருவெம்பாவை பாராயணத்துடன் நடைபெற்று முடிந்தது.

திருப்புனவாயில்: விருத்தபுரீசுவரசுவாமி கோயிலில் கார்த்திகை மாதத்தில் நான்கு சோமவாரங்களிலும் 1008 சங்காபிஷேகங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

திருப்புனவாயில்: குடவறைகாளியம்மனுக்கு இலட்சார்ச்சனை 27—12—61 முதல் நடைபெற்று வருகிறது.

உடையார்கோயில் : கரவந்திசுவரர் கோயிலில் தர்மவல்லி அம்பாளுக்கு 12-12-61 முதல் 20—12—61 வரை இலட்சார்ச்சனை நடைபெற்றது.

பூவனூர் : சதுரங்கவல்லபநாத சுவாமி கோயிலில் கிருத்திகை நான்கு சோமவாரங்களிலும் சிறப்பாக சங்கு அபிஷேக அலங்காரங்களுடன் நடைபெற்றது.

சென்னை: கன்னியாபரமேசுவரி கோயிலில் 15—12—61 முதல் 14—1—62 வரை திருவெம்பாவை—திருக்கோளறுபதிகம்—திருப்பாவை பெருவிழா நடைபெற்றது. திரு. கே. வரதாச்சாரியார் அவர்களால் பிரதிதினமும் மாலை 6-30 மணிமுதல் திருப்பாவைச் சொற்பொழிவு நடைபெற்றது.

சிதம்பரம் : இளமையாக்கினார் கோயிலில் 8-ஆவது ஆண்டு மார்கழித்திங்கள் திருவெம்பாவை—திருப்பள்ளியெழுச்சி—திருப்பாவை தினசரி பாராயணமும், 16—12—61 முதல் 13—1—62 வரை தினம் காலை 7 மணிமுதல் 8 மணிவரை ஒவ்வொரு பாசுரத்தின் விரிவுரை திருவாளர்கள் வி. கண்ணுயிரதேசிகர், எஸ். அரங்காச்சாரியார் இருவராலும் நிகழ்த்தப்பெற்றன.

சென்னை : சென்னமல்லீசுவரர் சென்னகேசவப்பெருமாள் கோயிலில் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி விரிவுரை கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் 16-12-61 முதல் 13-1-62 வரை காலை 7 மணிமுதல் 8 மணிவரை நடைபெற்றது.

ஆத்தூர்கோட்டை ; காயநிர்மலேசுவரர் கோயிலில் மார்கழித் திருவாதிரை திருவெம்பாவைத் திருவிழா 14—12—61 முதல் 24—12—61 வரை நடைபெற்றது.

சென்னை : திருமயிலை—கபாலீசுவரர் கோயிலில் திருவெம்பாவை—திருப்பள்ளியெழுச்சி சொற்பொழிவு 16—12—61 முதல் 14—1—61 வரை திரு. அழகரடிகள் (இளவழகனார்) அவர்களால் மாலை 6-30 மணிமுதல் 8-30 மணிவரை நிகழ்த்தப்பெற்றது.

திருவாரூர் : கமலாம்பாளுக்கு 4—10—61 முதல் கால்கோடி அர்ச்சனை நடைபெற்று வருகிறது.

சென்னை : இராயப்பேட்டை—சுந்தரேசுவரர் கோயிலில் கோளறுபதிகப் பாராயணத் துவக்கவிழா 16—12—61-ல் திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை, பி.ஏ., எல்.டி., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தர்மபுரி : பிரசன்னவெங்கட்ரமணசுவாமி கோயிலில் 16—12—61 முதல் திருப்பாவை பாராயணம் காலை 7 மணிமுதல் 9 மணிவரை நடைபெற்றது.

அம்பாசமுத்திரம் : கிருஷ்ணசுவாமி வகையறுக் கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா 18—12—61 முதல் 27—12—61 நடைபெற்றது.

தென்காசி : காசிவிசுவநாதசுவாமி கோயிலில் திருவாதிரைத் திருநாளும், திருவெம்பாவை விழாவும் 14—12—61 முதல் 23—12—61 வரை நடைபெற்றன. சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

இரங்கூன் : காலாபஸ்தி—போலேன்—சுந்தரவிநாயகர் ஆலயத்தில் தனுர்மாதத்திய திருப்பள்ளியெழுச்சி காலை பூஜைவிழா 16-12-61 முதல் 13-1-62 வரை நடைபெற்றது.

திருநீடூர்

குற்ற மொன்றடி யாரில ராறுற் கூடு
மாறத னைக்கொடுப் பானைக்
கற்ற கல்வியிலும்மினி யானைக் காணப்
பேணும வர்க்கெளி யானை
முற்ற வைஞ்சுந்துறந்திருப் பானை மூவ
ரின்முத லாயவன் றன்னைச்
சுற்று நீள்வயல் சூழ்திரு நீடூர்த்
தோன்ற லைப்பணி யாவிட லாமே
—சுந்தரர்.

சோழ நாட்டில் காவிரிக்கு வடக்கி லுள்ள பாடல் பெற்ற சிவத்தலங்களில் ஒன்று **திருநீடூர்**. இது தஞ்சை மாவட்டத் தில் மாயூரம் பகுதியிலிருக்கிறது. மாயூரம் இருப்புப்பாதை நிலையத்திற்கு அடுத்த வடக்கி லுள்ள நீடூர் என்னும் நிலையத்திலிருந்து இப்பதி ஒரு கல்தொலைவிலிருக்கிறது.மாயூரத் திலிருந்து நகர பஸ்கள் இவ்வூருக்கு அடிக்கடி வந்து போகின்றன.

எக்காலத்தினும் உலவாது நீடித்திருக் குந்தலமாதலின் இதற்கு நீடூர் என்ற பெயர் உண்டாயிற்றென்பர். வகுளாரணியம், மகிழாரணியம், மகிழவனம் என்ற பெயர் களும் உண்டு. நீர்வளம், நிலவளம் நிறைந்த ஊர். இயற்கை எழில் நலம் கனிந்த இடம். இங்கு சிவபெருமான் எழுந்தருளியுள்ள கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. தெற்கு, வடக்கு, கிழக்கு இந்த மூன்று பக்கங்களிலும் வாயில்கள் உள்ளன. இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன. உட்பிரகாரத்தில் தெற்கே முனையடுவார் நாயனர், மேற்கே சின்மயானந்த கணபதி, முருகன், கஜலட்சுமி, தெற்கே சண்டேசர், நடராஜர், கிழக்கே முனையாடு வார் (புதிய திருவுருவம்) சந்நிதிகள் இருக் கின்றன. மூலஸ்தானத்தில் சிவலிங்கமூர்த்தி கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். **அருட் சோம நாதர்** என்பது இறைவனின் திருப் பெயர்; கானநிர்த்தன சங்கரர், பாடியாடிய தேவர், கற்கடேசுவரர் என்ற வேறுபெயர் களும் சொல்லப்படுகிறது. வெளிப்பிரகாரத் தில் தெற்கு நோக்கி அம்பிகை சந்நிதியிருக் கிறது. அம்பாளின் திருநாமம் **வேயுறு தோளி யம்மை** என்பது. அதிகாந்தியம்மை, வேத நாயகி, ஆதித்தபயாம்பிகை என்ற வேறு பெயர்களும் கூறப்படுகிறது.

இத்தல விருட்சம் மகிழமரம். அம்பிகை சந்நிதிக் கெதிரிலிருக்கிறது. அதனால் மகிழ வனம் என்ற பெயரும் இத்தலத்திற்கு ஏற் பட்டது. கோயிலுக்கு வடபால் திருக்குளம் இருக்கிறது. சூரியதீர்த்தம், சந்திர தீர்த்தம், வருணதீர்த்தம், இந்திர தீர்த்தம், முனிவரர் தீர்த்தம், பத்திரகாளி தீர்த்தம், ஆனந்த தீர்த்தம் (காவிரியாறு), செங்கழு நீரோடை முதலியன இத்தலத்தின் தீர்த்தங்கள் என்று கூறப்படுகிறது. கோயிலில் மூன்று கால பூசை நடைபெறுகிறது. திருவிழாக்கள் இல்லை.

இந்திரன், சந்திரன், சூரியன், காளி, கற் கடகம் (நண்டு) முதலியவர்கள் இத்தலத்துப் பெருமானை வழிபட்டுப் பேறு பெற்றனர் என்று சொல்லப்படுகிறது. இத்தலத்திற் தான் அறுபான் மும்மை நாயன்மார்களில் ஒருவரான **முனையடுவார் நாயனர்** அவதரித்து, தொண்டுபுரிந்து சிவன்சேவடி சேர்ந்தார். அவருடைய குருபூசை மடம் ஒன்று இங்கு இருக்கிறது.

இக்கோயில் மிகவும் பழமையானதே. சுவாமி சந்நிதிநகரத்தார்களால் திருப் பணி செய்யப்பெற்றது. அம்பிகையின் கோயில் பழமையாகவே இருக்கிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்து இறைவன் மீது ஒரு திருப்பதிகம் பணித்த ருளியுள்ளார். "நீரில் வாளைவரால் குதி கொள்ளும் நிறைபுனல் கழனிச் செல்வ நீடூர்" "புன்னை மாதவி போதலர் நீடூர்," "கட்டி யின் கரும்போங்கிய நீடூர்," "சுற்று நீள் வயல் சூழ்திரு நீடூர்" என்றெல்லாம் இயற்கை வளத்தைப் புகழ்ந்து பாடியிருக்கிறார். அதை இன்றும் காணலாம். ஒரு பாட்டில் 'பாடியாடும் பரிசே புரிந்தான்' என்று இறை வனின் திருப்பெயர்களில் ஒன்றான பாடி யாடிய தேவர் என்பதையும், மற்றொரு செய்யுளில் "வேய்கொள் தோளுமை" என்று அம்பிகை திருநாமமான வேயுறுதோளி யம்மை என்பதையும் குறிக்கின்றார். "கோடி தேவர்கள் கும்பிடு நீடூர்க் கூத்தன்,, "கற்ற கல்வியிலும் இனியான்," "நல்லவர்க் கணி

யானவன்" பண்டை வல்வினைகள் கெடுப்பான்" "அடைந்தவர்க்கு அமுதாயிடுவான்,', "மாயமாயமனங்கெடுப்பான்," என்று பல வாறுகப் பெருமானைப் போற்றிப் புகழ்கின்ருர்.

அப்பர் சுவாமிகள் திருப்புன்கூரையும் திருநீடூரையும் சேர்த்து ஒரு திருத்தாண்டகப் பதிகம் ஓதியருளியிருக்கின்ருர். "நெல்லால் விளைகழனி நீடூர்," "மலையார் மணிமாடநீடூர்" "நீக்காத பேரொளி சேர் நீடூர்," "நெய்தல் வாய்ப்புனற் படப்பை நீடூர்" என்று இப்பதியின் இயற்கை யழகைப் புனைந்து பாடுகிருர். "நீடூரானை நீதனேன் என்னே நான் நினையாவாறே" என்று ஆராமையுடன் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் கூறுகிருர்.

சேக்கிழார் பெரியபுராணத்தில் முனையடுவார் நாயனர் புராணத்தில் அந்த நாயனர் இத்தலத்தில் தொண்டுபுரிந்து பேறு பெற்ற வரலாற்றை ஏழுபாடல்களில் கூறியிருக்கின்ருர்.

முதற்பாடல்

மாறுகடிந்து மண்காத்த வளவர்
  பொன்னித் திருநாட்டு
நாறுவிரைப் பூஞ்சோலைகளின் நனை
  வாய் திறந்து பொழி செழுந்தேன்
ஆறு பெருகி வெள்ளமிடும் அள்ளல்
  வயலின் மள்ளருழுஞ்
சேறுநறுவா சங்கமழுஞ்
  செல்வநீடூர் திருநீடூர்

என்பது. இதில் செல்வம் நீடுகின்ற ஊர் திருநீடூர் என்று ஊர்ப்பெயர் விளக்கம் கூறுவது கண்டின்புறத்தக்கது. மாற்ருர்களுடன் சமரில் வென்று அவ்வகையால் பெற்ற நிதியெல்லாம் ஈசனடியார் சொன்னபடி நிரம்பக் கொடுத்து, அறுசுவை உண ஆட்டித் தொண்டாற்றினர். "யாவரெனினும் இகலெறிந்தே ஈசனடியார் தமக்கு இன்பம் மேவ அளிக்கும் முனையடுவார்" என்று அவர் தொண்டின் பெருமையைப் பாராட்டுகிருர்.

வடமலையப்பன் பிள்ளை என்பவர் இயற்றிய **நீடூர்த்தல புராணம்** என்னும் அரிய நூலும் அச்சிடப்பெற்றிருக்கிறது. அதில் ஒரு பாடல் பின்வருவது :—

விருப்பமுறு காமியற்குக்
  காமமு மெய்ப் புண்ணி
யத்தை வேண்டினேர்க்குக்
கருத்தினயந்த புண்ணி யமுங்
  கதியினை வேட்டோர்க்கு
நல்ல கதியுமுற்றும்
உருப்பொலிந்த நித்தியத்தை
  விரும்பினர்க்கு நித்தியமு
முதவு மேருப்
பொருப்பு வில்லான் குடி
  யிருக்கு மகிழ வனப்
பெருமை யெவர் புகழவல்லார்.

இந்தக் கோயிலின் பிரகாரச் சுவர்களின் உள்ளிலும் புறத்திலும் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

கலைஞானங் கல்லாமே கற்பித்
  தானைக் கடுநரகஞ் சாராமே
காப்பான் தன்னைப்
பலவாய வேடங்கள் தானே
  யாகிப் பணிவார்கட்கங்
கங்கே பற்று ஞனைச்
சிலையாற் புரமெரித்த தீயாடி
  யைத் திருப்புன்கூர்
மேவிய சிவலோகனை
நிலையார் மணிமாட
  நீடூரானை நீதனே னென்னே
நான் நினையாவாறே

—திருநாவுக்கரசர்.

சேலம்; பிரம்மஞான சபையில் 16-12-61 முதல் 14-1-62 வரை திரு. கோவிந்த நரசிம்மாச்சாரியார் சுவாமிகள் அவர்களால் திருப்பாவை காலட்சேபம் பிரதிதினமும் காலை 7-30 மணிமுதல் 8-45 மணிவரை நடைபெற்றது.

சேலம்; சுகவனேசுவரர்சுவாமி கோயிலில் அதிருத்ர மகா யாகம் 21—1—62 முதல் 31—1—62 வரை நடைபெற்றது.

சேலம்: சுகவனேசுவரர் கோயிலில் ஆருத்திரா தரிசனப்பெருவிழா 23-12-61ல் நடைபெற்றது.

சிவஞானபோதம்

திரு. K. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.

முன் தொடர்ச்சி:—

மும்மல காரியம்

உயிரின் அறிவாற்றலையும் செயலாற்றலையும் மறைத்தும் வரம்பு செய்தும் நிற்கும் பகைப்பொருள்கள் ஆணவம், மாயை, கன்மம் என மூவகைப்படும்; அவை என்றும் உள்ள பொருள்கள்; ஆயினும் அவை முதல்வனது நினைவாற்றலால்தான் செயற்படும் என்னும் இக்கருத்துக்கள் முன்னர்த் தெரிவிக்கப்பட்டன. இனி அவை எவ்வாறு செயற்படுகின்றன என்பது விளக்கப்படும்:

ஆகாயத்தில் இருளும் வெளியும் காணப்படுதல்போல, நம் உணர்வில் அறியாமையும் அறிவும் விரவி நிற்றலை நாம் உணரலாம்; அறியாமை, அறிவு என்னும் இரண்டில் நமது இயல்பு அறிவே ஆகும் என்பதையும், அவ்வறிவு நமக்குப் படிமுறையான் வளர்ந்து வருகிறது என்பதையும் நாம் ஒப்புக்கொள்வோம். நாம் நன்ருக அறிந்ததையும் பல சமயங்களில் மறந்துவிடுகின்ருேம். இங்ஙனம் நம் இயற்கை உருவாகிய அறிவை மறைத்து அறியாமையில் அழுந்தச் செய்வதும், அறிந்ததை மறக்கவைப்பதுமாக உள்ள ஒரு பொருளையே பெரியோர்கள் மூலமலம் எனவும், அகஇருள் எனவும், ஆணவம் எனவும் குறியிட்டு வழங்கி வந்துள்ளனர்.

நாம் உடுக்கும் உடையிலும், நம் உடம்பிலும் அழுக்கு உளதாக, அதனைச் சோப்பும் நீரும்கொண்டு கழுவுகிருேம்; அதுபோல, நமது செந்நீரில் (இரத்தத்தில்) நச்சுப்பொருளாகிய அழுக்குக்கலந்து உடல் நலம் குன்றும்போது பெனிசிலின் என்னும் மருந்தை ஊசிமூலம் உடம்பிற் செலுத்தி நோயினீங்க முயல்கின்ருேம். இவற்றைப்போல நம் உயிரிற் கலந்துள்ள நச்சுப்பொருள் மலம் எனப்படும்; மலம்—அழுக்கு, மாசு. இம்மலசத்தியினின்றும் உயிர்களை மீட்டற்பொருட்டு, மலநோய்க்கு மருந்தாக முதல்வனுல் கொடுக்கப்பட்ட பொருள்களே உடம்பு, உலகு, நுகர்ச்சிப்பொருள் என்பவை. இவை மாயையினின்றும் ஆக்கப்பட்ட பொருள்களாம். மருந்துண்ட நோயாளியின் நெஞ்சின் துடிப்பு, உணவின் வேட்கை முதலியன நோயின் தன்மைக்கு ஏற்றபடி வேறுபடும்; அவற்றை அளந்து உணர்ந்தே பின்னர் வேறு வேறு மருந்துகள் தருவன் மருத்துவன். இங்ஙனமே, முதல்வனுல் தரப்பட்ட உடம்பைப்பெற்ற உயிர்கள் உலக நுகர்ச்சியை மேற்கொள்ளும்போது, அவற்றைப் பிணித்துள்ள மலசத்திகளுக்கு ஏற்றபடியே நினைவும், பேச்சும், செயலும் உடையவையாக நிகழும். இந்நினைவும் பேச்சும் செயலுமே கன்மம் (வினை) எனப்பட்டது. இக்கருத்துப்பற்றியே திருவள்ளுவர் இருவினையை "இருள்சேர் இருவினை" என்ருர்.

இதனுல், உயிர்க்கு நேர்ப்பகைப் பொருளாக உள்ளது மூலமலம் ஆகிய ஆணவமாம் என்பதும், ஏனை மாயையும் இருவினையும் தளைகளேயாயினும், நோய் நீக்கத்தின் பொருட்டுப் பின்னர்த்தரப்படும் மருந்துபோல, மலசத்திகளை மெலிவித்தற் பொருட்டுப் பின்னர் முதல்வனுல் சேர்ப்பிக்கப்பட்டவை என்பதும் விளங்கும். உயிர்க்கு இயற்கைக் குற்றமாக உள்ள மூலமலம் புத்தாடையில் உள்ள இயற்கை அழுக்குப்போன்றது; மாயையும் இருவினையும் அவ்வழுக்கு நீக்குதற்பொருட்டு ஆடையிற் சேர்த்தப்படும் உவர்மண், சாணி முதலியவை போன்றவை. இக்கருத்தைப் பின்வரும் செய்யுள் இனிது விளக்கும்;—

இந்த மாயையும் கருமமும் பந்தமே; இவற்றைத்
தந்த தாருயிர்க் கென்எனில், சாற்றுதும் கேண்மோ
முந்தும் ஆணவ முரண்கெட மூட்டின: மாசு
சிந்த வேறுமா(சு) அறுவையிற் செறித்திடு
மாபோல்.

—திரு ஆனைக்காப் புராணம்,

இக்காரணம்பற்றி ஆணவம் சகசமலம் எனவும், மாயை கன்மங்கள் ஆகந்துகமலம்

எனவும் வழங்கப்படும். இயற்கை சகசம்; செயற்கை ஆகந்துகம்.

மூலமலத்தின் காரியம்:—

உடம்போடு கூடாதபோது அறிவை மறைப்பதும், உடம்போடு கூடிப் பொருள்களை அறியலுறும்போது அவ்வறிவைத் தன்னை நோக்கவிடாமல் பிற பொருளை நோக்கி ஓடும்படி செய்வதும் ஆணவம் ஆம். அறிவை மறைக்கும் சத்தியை ஆவாரகசத்தி (மறைக்கும் ஆற்றல்) எனவும், புறப் பொருள்மேல் ஓடும்படி அறிவை உய்க்கும் அதன் சத்தியை அதோ நியாமிகா சத்தி (வீழ்க்கும் ஆற்றல்) எனவும் நூல்கள் நுவலும். ஆவாரகம்—மறைப்பது; அத:—கீழே, நியாமிகா—உய்ப்பது.

மேலேகூறிய மூன்று மலங்களுள் ஆணவத்தைப்பற்றிப் பிற சமயத்தவர் பேசுவதே இல்லை; மாயையைப்பற்றிப் பேசுவர்; ஆனால் தெளிவுபடப் பேசார்: கன்மத்தைப்பற்றிப் பெரும்பாலும் தெளியப்பேசுவர். இவ்வேறுபாட்டிற்குக் காரணத்தை ஆராயின், சுவை பயக்கும் ஒரு செய்தி வெளியாகின்றது.

நாம் எல்லோரும் இருளில் செல்ல நேர்ந்தால் விளக்கின் உதவியைத் தேடுகிறோம். ஆனால், அகவிருளை நீக்கும் சாதனம் வேண்டுவார் பலராக இல்லையே! இதற்குக் காரணம் யாது? புறவிருள் பிற பொருள்களைக் காட்டாமல் மறைத்தாலும், தன்னைக் காட்டாமல் மறைத்துக்கொள்வதில்லை; இருள் உள்ள போது இருளில் இருக்கிறோம் என்பதை அறிவோம்; ஆதலால், அதனை நீக்கிப் பொருள்களைக் காட்டும் விளக்கின் உதவியை நாடுகிறோம். அகவிருளோ பிற பொருள்களைக் காட்டாமை மட்டும் அன்று; தன்னையும்காட்டுவதில்லை. அறியாமையை உடையவையே எல்லா உயிர்களும்; ஆயினும் தம் குறையை அறிவதில்லை. அவை தம்மையும் அறியா; தலைவனையும் அறியா; மெய்யுணர்ந்த அருளாசிரியனது அருமை பெருமைகளையும் அறியா. அவற்றோடு, தம் அறியாமையினையும் அறியமாட்டா. இது புறவிருளுக்கும் அகவிருளுக்கும் உள்ள வேற்றுமை. "ஒருபொருளுங் காட்டாதிருள் உருவம் காட்டும்; இருபொருளுங் காட்டாதிது"—திருவருட் பயன். இது என்றது மூலமலமாகிய அகவிருளை. இதனால், ஆணவத்தைப்பற்றிச் சமயவாதிகள் பேசாததில் வியப்பில்லை அல்லவா?

மேலும், அறியாததை அறிந்துவிட்டதாக எண்ணவைப்பதும் மலமே ஆகும். காஞ்சிப் புராணத்தில் ஓரிடத்து வேதவியாசர் தம்மை வேதங்களின் முடிந்த முடிபு யாது என வினவிய முனிவர்களுக்குத் தாம் முன் கூறிய தவறான முடிபையே பின்னும் கூறுகிறார்; அப்பொழுது அவரைப்பற்றி அப் புராணம் "அறிவுபோல் அடர்த்தெழும் அறியாமையின் வலியால்—பொறியிலான் இதுகூறலும்" என விவரிக்கின்றது. இதனால், மூலமலம் விபரீத உணர்வைப் பயந்து, அதனை விடாது பற்றும்படி செய்யும் என்பதும் விளங்கும். இன்னும், யான், எனது என நம்பால் நிகழும் மயக்க உணர்வுக்கு மூலம் ஆணவமே ஆகும் என்பது அறியத்தக்கது.

மூல மலத்தின் காரியங்களை மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என ஏழுவகைப்படுத்துக் கூறுகின்றது பௌட்கரம் என்னும் ஆகமம்:

மோகமாவது கொள்ளத்தக்கது இது, நீக்கத்தக்கது இது எனத் தெளிந்த பின்னும், கொள்ளத்தக்கதைப் பற்றாமல் நீக்கத்தக்கதைப்பற்றி மயங்குதற்கு ஏதுவாவது. இது ஏனைய ஆறு காரியங்கட்கும் ஏதுவாய்க் கட்டு நீங்கும்வரை உயிர்களோடு உடனாய் நிற்பது.

மதமாவது தான் பற்றிய பொருள் இழிந்ததாயினும் அதனின் மேம்பட்டது உலகத்தில்லை என மதிப்பது.

அராகம் அப்பொருளின்பால் மேன்மேலும் ஆசைமிகுதல்.

கவலை ஊழ்வலியால் அப்பொருளை இழந்தபோது கவலுதல்.

தாபம் அக்கவலையால் உள் வெதும்பித்தபித்தல்.

வாட்டம் அதனால் உள்ளமும் உடம்பும் வாடுதல்.

விசித்திரம் தான் பெற்ற உலக வாழ்க்கையைத் தானே தன் தனி முயற்சியால் அமைத்துக்கொண்டதாக எண்ணித்தான் இல்லையானால் இந்த உலகமே போய்விடும் என்றாற் போலப் பலபடச் சிந்தித்தல்.

பின்வரும் "இருபா இருபஃதி"ன் பகுதி இங்குப் புடைபடவைத்து ஒப்பு நோக்கத் தக்கது:

"கூறிய மூன்று மலத்தின் குணங்குறி
வேறு கிளக்கின் விகற்பம் கற்பம்
குரோதம் மோகம் கொலைஅனுர் மதம்நகை
விராய்எண் குணனும் ஆணவம்என
விளம்பினை;
அஞ்ஞா னம்பொய் அயர்வே மோகம்
பைசால் அநூநியம் மாற்சரி யம்பயம்
ஆயஏழ் குணனும் மாயைக்(கு) அருளினை;
இருத்தலும் கிடத்தலும் இருவினை இயற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவலென் றெடுத்த
அறுவகைக் குணனும் கருமக் கருளினை"

எனவரும்.

மும்மலங்களின் குறிகளாகிய குணங்களைத் தனித் தனிக் கூறப்புகின், ஆணவத்தின் குறியாகிய ஒருவன் அறிவின்கண் நிகழும் குணங்கள் தன்னை ஏகதேசமாகப் பிற பொருள்களின் வேறுபடக் காண்டலும், தன் உடைமைகளைப் பலபடப் பாராட்டிப் புனைந்து கருதுதலும், பிறரைச் சினத்தலும், வேண்டத்தகாத பொருள்களின் வேட்கையும், பிறரைத் துன்புறுத்தக் கருதுதலும், தான் துன்புறுதலும், தன்னை உயர்வாக மதித்தலும், தன் வாழ்க்கையைக் குறித்து மகிழ்தலும் என எட்டாம்; அம்மலத்தோடு விரவியுள்ள மாயை ஏதுவாக ஒருவன் அறிவின்கண் தோன்றும் குறிகள் தான் அல்லாத உடம்பு கரணம் முதலியவற்றைத்தான் எனக் கருதும் திரிபுணர்ச்சியும், நிலையாத பொருளை நிலையுள்ளதாகக் கொள்ளுதலும், மறதியும், உலகப்பொருள்களையே பெருஞ் செல்வமாம் என மயங்குதலும், அவற்றைப் பொருட்படுத்தி அவாவுதலும், அழுக்காறும், அச்சமும் என ஏழாம்; இருத்தலும், கிடத்தலும், நல்வினை தீவினைகளைச் செய்தலும், அவற்றைச் செய்யாது விடுத்தலும், பிறரை இகழ்தலும், அவரை விரும்பி அணைதலும் என்னும் ஆறும் கன்மத்துக்கு உரிய பண்புகள்-என மெய்கண்ட தேவர் தமக்கு அருளிச் செய்ததாக அருணந்தி சிவனுர் கூறுகின்றுர். பைசா சூநியம்—என்பது பாடமாயின் புறங்கூறுதல் எனப்பொருள் கொள்க. பைசுந்யம்-குறளை, புறங்கூறுதல்.

உண்மையான் நுணுகி நோக்கும்போது உயிர்க்கு மயக்கத்தைச் செய்வது ஆணவ மலமே ஆகும்; மாயையும் கன்மமும்உயிர்க்கு ஆணவ சம்பந்தம் உள்ளவரைதான் மயக்கும்: உயிர் ஆணவ வலியின் நீங்கித் திருவருள் வயப்படும்போது மாயை கன்மங்கள் மயக்கஞ் செய்யாமல் அருள் மயமாயே நிற்கும்—என்பதும் சிந்திக்கத்தக்கது. இக் கருத்தை,

"அல்ல தூஉம்இருள் ஆணவம்
மயக்குவ; அதனுல்
நல்ல மாயையும் கருமமும்
நாடிய உயிரை
வல்ல வாறெலாம் மயக்கும்;ஆ
ணவந்தேய்ந்(து)
இல்லையேல் அவை உயிரையும்
மயக்குவ தில்லையே"

என்னும் திருவானைக்காப் புராணச் செய்யுளால் உணரல் ஆகும்.

இனி, வினையின் காரியமாவது இன்பம், துன்பம், மயக்கம் என மூவகைப்படும் நுகர்ச்சி.

மாயையின் காரியம் உடம்பு, அதன் கண் உள்ள கருவிகள், உலகம், நுகர்ச்சிப் பொருள்கள் என நால்வகைப்படும். இவற்றை வடநூலார் தநுகரண புவனபோகம் என்பர். மாயையின் காரியம் மாயேயம் எனப் படும்.

முதல்வனது திருவருள், உயிர்களின் பிறப்பு நிலையில், ஆணவமலம் தன் சத்தி மெலிந்து நீங்கும் செவ்வியை அடைதற் பொருட்டு, அதனைக் காரியப்படும்படி செய்யும். இந்நிலையில் இஃது உயிர்களால் உணரப்படாமல் மலத்தின் வழிநின்று உபகரித்தல்பற்றி இதனைத் திரோதானசத்தி (மறைக்குஞ்சத்தி) எனப் பெயரிட்டு, மலம் என உபசரித்துக் கூறுவர். இது திரோதாயி, ஆதி எனவும் கூறப்படும்.

மலங்கள் ஐந்து எனப் பேசப்படும் போது ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதான சத்தி என்னும் ஐந்தும் கருதப்படுவன என்று உணர்தல் வேண்டும்.

மாயையின் வகையும் அதன் காரியங்களும்

உயிர்களின் தநுகரண புவன போகங்களுக்கு முதற் காரணமாக, நித்தமாய், அருவாய், வியாபகமாய், சத்திருபமாய் உள்ள பொருள் மாயை எனப்பட்டது. மாயா என்

னும் வடசொல் மாயை எனத் தமிழில் வழங்குகின்றது. மா—ஒடுங்குதல்; யா—வருதல். அறிவில்லாதனவாக உள்ள பொருள்கள் எல்லாம் புலப்படாத ஆற்றல் வடிவில் எங்கே ஒடுங்கி நின்று, பின் புலப்படும் உருநிலையில் வெளிப்பட்டுத் தோன்றுமோ, அது மாயா எனப்பட்டது. மாயா என்னுஞ் சொல் இப்பொருளில்தான் உபநிடதங்களில் ஆளப்படுகிறது என்பதை "மாயையைப் பிரகிருதி (முதற்காரணம், Procreatrix) என அறிக; மாயையை உடையவனை மகேசன் என அறிக;" என்னும் சுவேதாசுவதர உரையால் தெளியலாம்.

மாயை சுத்தமாயை, அசுத்த மாயை என இருவகைப்படும். மாயை எனப்படும் சடசத்தி (ஆற்றலுருவ அறிவில் பொருள்) ஒன்றேயாயினும், அது மலகன்மங்களோடு விரவாது, தன்னைச்சார்ந்த உயிர்களுக்கு மயக்கத்தையும் துன்பத்தையும் தராமல் இன்பம் ஒன்றே தரும் நிலையில் சுத்தமாயை எனப்படும்; மலகன்மங்களோடு விரவி உயிர்களை மயக்கி இன்பத்துன்பங்களைக் கலந்து தருவதாக, சுத்தமாயையின் கீழ் அதனால் வியாபிக்கப்பட்டு நிற்கும் நிலையில் அசுத்தமாயை எனப்படும். பொதுவாக மாயை எனப்படும்போது அசுத்த மாயையே கருதப்படுவதாகும். விந்து, குண்டலி, ஊர்த்துவமாயை, மாமாயை என்பன சுத்தமாயையின் பரியாயப் பெயர்கள். மோகினி, அதோமாயை என்பவை அசுத்தமாயையின் பரியாயங்களாம்.

சுத்தமாயையின் காரியம் சொல்லும் பொருளும் என இருவகைப்படும். சொல் என்பது உயிர்கள் உலகத்துப் பொருள்களை, இன்னது, இன்னது எனச்சுட்டி அறிதற்கு ஏதுவாக மொழிவடிவில் விளங்கக்கூடிய நாதசத்தி அல்லது ஒலியாற்றல். அது சூக்குமை, பைசந்தி, மத்தியமை, வைகரி என நான்குவகையில் வைத்து உணரப்படும். "சிவபிரான் உலக முதல்வர்; யாம் எல்லோரும் அவர் தம் மீளா அடிமைகள்" என்றாற்போல உள்ள சொற்றொடர்களை வாயைவிட்டுக் கிளக்கும்போது, அவ்வொலி வைகரிவாக்கு எனப்படும்; இஃது ஒருவன் நினைந்த கருத்தை பிறன் ஒருவனுக்கு உணர்த்துதற்கு வாயிலாக, எழுத்தொடு புணர்ந்த சொல்லாக இருப்பது. இனி, இதுபோன்ற கருத்தைப் பிறருக்குக் கூறாமல், ஒருவன் தன் நெஞ்சில் நினைக்கும்போது, அவன் நெஞ்சில், உள்ளே உணரப்படும் ஓசையாக, அவன் தான் மட்டும் பொருட்பெற்றியை நினைத்தற்கு வாயிலாக உள்ளது மத்தியமை வாக்கு எனப்படும். எப்பொழுதும் ஒரு பொருளைப் பொதுவாக நினைவிற் கொண்டுவந்த பின்தான், அதைப்பற்றி "இஃது இப்படிப்பட்டது" எனப் பின்னர்ச் சிறப்பாக அறிந்து உணர்வோம். பொதுப்பட நினைவிற்கொள்ளும் உணர்வை நிருவிகற்ப உணர்வு (பொதுப்பட, உளது என்ற மட்டில் உணர்வது) என்பர்; 'இஃது இப்படிப்பட்டது' எனச் சிறப்பித்து உணரும் உணர்வு சவிகற்ப உணர்வு எனப்படும். சவிகற்ப உணர்வை ஒருவனுக்கு உள்ளே பயப்பதாகிய வாக்கிய ரூபமே மத்தியமைவாக்கு எனப்பட்டது; அவ்வுணர்வைப் பிறருக்கு உண்டு பண்ணவேண்டி, அவன் தான் நினைந்த வாக்கியத்தை வாய்விட்டுக் கூறும்போது அவ்வாய்மொழி வைகரிவாக்கு எனப்பட்டது. மத்தியமைவாக்கு செங்காய் போன்றது; அதன் விளைவாக வெளிவரும் வைகரிவாக்கு கனி போன்றது.

ஒருவன் தனக்குள்ளே ஒரு பொருளை நிருவிகற்பமாகச் சித்தத்தே சிந்திக்கும்(நினையும்)போது எழுத்துக்களாகப் பிரிந்து தோன்றாது அந்நினைவு; அவன் அறிவு ஒரு பொருள் மேல் செல்வதாக மட்டும் அமையும். அந்நினைவு ரூபத்தையே பைசந்தி வாக்கு என்பர். இதன் அடுத்த விளைவு மத்தியமைவாக்கு ஆகும் என உய்த்துணர்ந்து கொள்க! பைசந்தி மலர்போன்றது; மத்தியமை மலரிற்றோன்றும் காய்போன்றது.

இனி, மலரின் முதனிலை அரும்பாதல் போல, பைசந்தி வாக்கின் முற்பட்ட நிலை சூக்குமை எனப்படும்; இது உயிர்களின் ஞானமாத்திரைக்கு ஏதுவாக, மலரின் எழும் மணம்போலச் சுத்த மாயையிற்றோன்றும் நாதமாத்திரையாக, அவற்றின் பர சரீரத்தைப்பற்றி நிற்கும்; பர சரீரத்தை உபநிடதங்கள் விஞ்ஞான மயகோசம் எனவும், சைவாகமங்கள் கஞ்சுக சரீரம் எனவும் கூறும். சூக்குமையைப் பரை எனவும் கூறுவர்.

முதற்குறளில் "எழுத்தெல்லாம் (ஆதி) அகர முதல்" எனக்காட்டிய எடுத்துக்காட்டில் வரும் ஆதி அகரம் என்பது சூக்குமை எனப்பட்ட நாதத்தையே குறிக்கும்.

நம்மையும் நம்மைச் சூழ்ந்துள்ள உலகத்தையும் எண்ணிப்பார்த்தால், உலகம் எதிர் தோன்றும் பொருளாக (Presentation) உள்ளது; நாம் அதன் தோற்றங்களின் (Of the presantation) பதிவை எடுத்துக் கொள்ளும் ஒலிப்பதிவு ஏடுபோல உள்ளோம். நம் அறிவிற்பதியும் பதிவுகள் (Impression or representation சொல் வடிவில் உள்ளன. அறியப்படும் எல்லாப் பொருளுக்கும் சொல்லும், பேசப்படும் எல்லாச் சொற்களுக்கும் பொருளும் உள்ளன. பொருளுக்கும் சொல்லுக்கும் தோற்றமும், படித்தோற்றமும் (Presentation and representation) ஆகிய தொடர்பு அமைந்திருத்தல் கருதத்தக்கது. "சொற் பிரபஞ்சத்திற்கு அருவாய் உணர்வாய் உள்ள (ஆதி) அகரம் முதல் ஆனாற்போல, பொருட் பிரபஞ்சத்திற்கு அருவாய் உணர்வாயுள்ள ஆதி பகவன் முதல்வன் ஆவன்"—என்பது முதற் குறளின் பரமதாற்பரியம் ஆகும்.

இங்கு விளக்கப்பட்ட நாத சத்தியால் தான் உயிர்களெல்லாம் உலகை அறிந்து அதிற்பந்தமுற்று வருகின்றன. நாதத்தைத் தெளிய உணர்ந்து அதன் சத்தியினின்றும் விடுபட்டுத் திருவருளைப்பற்றி உணரும் நிலை வாய்க்கப்பெற்றோரேமுத்தர் ஆவர். நாதசத்தியால் விளங்கும் ஞானம் எல்லாம் பாச ஞானம் எனப்படும். இதனைச் சிறிதும் அறியாது நாதத்தைப் பிரமம் எனக் கூறி மயங்குவாரும் உளர். அத்தகையோரைக் கருதி அருணந்திசிவனார், "மகிழ்ந்திடும் பிரமம் அன்று; மாமாயை என்பர் நல்லோர்" என்றருளிச் செய்வார் ஆயினர்.

இனிப் பொருள்வடிவில் உள்ள சுத்த மாயா காரியம் கலை எனவும் தத்துவம் எனவும் இருவகைப்படும். அவற்றுள் கலை சாந்தியதீத கலை, சாந்திகலை, வித்தியாகலை, பிரதிட்டா கலை, நிவிருத்திகலை என ஐந்தாம்; தத்துவம் நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என ஐந்தாம். நாதத்தைச் சிவம் எனவும், விந்துவைச் சத்தி எனவும் வழங்குவதும் உண்டு.

'நம் அறிவு நமது தலையைப்பற்றி அதை இடமாகக்கொண்டு அதன் அம்சமாக உள்ள நாடி நரம்புகளால் உடம்பு முழுவதும் நிறைந்து அறிந்தும் தொழிற்படுத்தியும் வரும்; அதுபோல, முதல்வனது திருவருள் எனப்படும் திரோதானசத்தி சுத்தமாயையை நேரே பற்றி, அதனை இடமாகக்கொண்டு அதன் காரியங்களாகிய ஐந்து கலைகளால் எல்லாத் தத்துவங்களையும் வியாபித்துத் தொழிற்படுத்தும். உலகத்தை முதல்வனுக்கு உடம்பு எனக்கொண்டால், சுத்தமாயை அவன்றன் தலை (Brain) ஆகும். மேலே கூறிய ஐந்து கலைகளும் தலையினின்று இறங்கி எல்லா உறுப்புக்களையும் பற்றி இணைத்து நிற்கும் நாடிகள் அல்லது நரம்புகள் போன்றவை. மேலேகூறிய தத்துவம் ஐந்தும் அறிவு நரம்புகளும் செயல் நரம்புகளும் கூடும் தலைமையங்கள் (Brain centres where sensory & motar nerves meet) போன்றவை.

முதல்வன் திருவருள் இச்சை ஞானம் கிரியை என மூவகைப்பட விளங்கித் தொழிற்படும். அவற்றுள் இச்சை யாண்டும் ஒரே வகையாக நிகழ, ஏனை ஞானம், கிரியை என்பவை தனித்தும், ஒத்துக்கூடியும், ஏற்றக்குறைவாகக் கூடியும் உயிர்களை அறிவித்தும் செலுத்தியும் நிற்கும். இங்ஙனம் நிகழ்கையில் முதல்வனது ஞானசத்தி தனித்து நின்று நோக்குதற்கு ஆதாரமாக உள்ள சுத்தமாயையின் பகுதி சிவம் அல்லது நாதம் எனப்பட்டது; கிரியை தனித்துச் சங்கற்பித்தற்கு ஆதாரமாக உள்ள பகுதி சத்தி அல்லது விந்து எனப்பட்டது. ஞானமும் கிரியையும் ஒத்து நிகழும் அவதரத்துக்கு ஆதாரம் சாதாக்கியம்; தொழில் மிக்கு ஞானங் குறைந்த அவதரத்திற்கு ஆதாரம் ஈசுரம்; ஞானமிக்க அவதரத்துக்கு ஆதாரம் சுத்த வித்தை—என உய்த்துணர்ந்துகொள்க.

(தொடரும்)

அய்யம்பாளையம் : வாழைத்தோட்டத்து அய்யன் குருபூஜை விழா 22—12—61 23-12-61 தேதிகளில் நடைபெற்றது.

மன்னார்குடி : செயங்கொண்ட நாதர் கோயிலில் 23-12-61-ல் ஆருத்ரா தரிசனமும், சமயச்சொற்பொழிவும் நடைபெற்றன.

தாராபுரம் : கனகசபாபதிக்கு திருவாதிரை விழா 22,23—12—61 தேதிகளில் நடைபெற்றது.

ஆநந்தஸாகரஸ்தவம் அல்லது இன்பமாகடல்

நூல் வரலாறு:—

'ஆநந்த ஸாகரஸ்தவம்' என்னும் இனிய தோத்திரப் பனுவல் மஹாகவி ஸ்ரீ நீலகண்ட தீட்சிதர் அவர்களால் அருளிச் செய்யப் பட்டதாகும். அவர் பதினேழாம் நூற்றாண்டில் மதுரையிலிருந்து அரசாண்ட திருமலைநாயக்க ருடைய அமைச்சர்களில் ஒருவர். மதுரைப் புதுமண்டபச் சிற்ப வேலைகள் அவரது மேற் பார்வையில் நடைபெற்றன. அச்சிற் பங்களில் ஒன்றான, திருமலை நாயக்கரின் மூத்தமனைவியின் உருவத்தைச் சிற்பி செய்து முடிக்குந்தறுவாயில்,"அதன் இடது தொடை யில் ஒரு சில்லுப் பெயர்ந்துவிட்டது. அதனைக் கழித்து, மீண்டும் ஒரு சிலையைச் செதுக்க சில்பி முயலும்போது ஸ்ரீ தீட்சிதர் அங்கு வந்தார். செய்தியை அறிந்த தீட்சிதர், "வேறுசிலை வேண்டாம்: இதனையே நிறுவுக" எனப்பணித்தார். சிற்பியும் சிலையை நிறு வினன். நாயகர் மண்டபப் பணிகளைப் பார்த்துக்கொண்டு வருகையில் அந்தச் சிலையை நோக்கிய பின், சில்லுப் பெயர்ந்த இதனை நிறுவியதேன் எனச் சிற்பியை வினவ, அவன் தீட்சிதரின் கட்டளைப்படி நிறுவிய தாகக் கூறினன். நம் முதல் மனைவியின் தொடையில் உள்ள ஒரு மச்சத்தின் உண் மையை தீட்சிதர் எவ்வாறு அறிந்தார் எனத் தீய ஐயம் கொண்டார் நாயக்கர். எனவே தீட்சிதரது கண்களைப் பறித்துவிடக் கருதி, அவரை அழைத்து வருமாறு ஆட்களை ஏவினர். ஆட்கள் வந்த வேளையில் ஸ்ரீ மீனாட்சியம்மையின் வழிபாட்டிலீடுபட்டி ருந்த தீட்சிதர், தேவியின் அருளால் அரச னது நோக்கத்தை உணர்ந்து, அவர் செய்வ தன் முன் தாமேசெய்துகொள்ளத் தீர் மானித்து, கற்பூர நெருப்பால் தன்கண்களைக் கொளுத்திக் குருடாக்கிக் கொண்டார். செய்தியை அறிந்த அரசர், தம் குற்றத்தை உணர்ந்து தீட்சிதர்பால் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

பின், தீட்சிதர் இந்த "ஆநந்த ஸாகரஸ் தவம்" என்னும் தோத்திரப் பனுவலைப்பாடி, அங்கயற்கண்ணமையருளால் மீண்டும் கண் பெற்றார். அம்மையின் திருவுருவக் காட்சியும் பெற்றார்.

நூலின் பெயர்க்காரணம்

இந்நூலின் 53வது பாட்டில், தேவியின் கேசாதிபாதமான திரு உறுப்புக்களைத் தியானித்து, அதனால் பொங்கியெழும் ஆநந்த ஸாகரத்தில் (இன்பமாகடலில்) தம் உள்ளம் அலையூசலாடி, நாட்கழிவு தெரியா மல் வாழ்வதாகக் கூறியுள்ளார். தேவியின் திருவுருவ, தியான இன்பத்தைக் கடலாகக் கூறி, அவளைப் புகழ்வது இந்நூலின் முதன் மையான கருத்தாகையால் இது **'ஆநந்த ஸாக ரஸ்தவம்'** எனப்பெயர் பெற்றது. அதற்குச் சரியான தமிழ் **'இன்பமாகடல்'**

நூலின் அமைப்பு:—

இந்நூல் நூற்றெட்டுப் பாடல்களை யுடையது. நூலின் முதற்பாதியில் மனிதர் பெறும் பேறுகளில் சிறந்ததாகிய பேரின்பம் அடைவதற்குரிய வழிகள் எண்ணிறந்தன உள்ளன. எனினும், தற்போதமற்று அம்மை யின் திருவருளுக்குத் தன்னை அடைக்கல மாக அளித்துவிடுதலாகிய ஆன்மார்ப்பணமே சிறந்த வழியென்பதைப் பல சிறந்த ஏதுக் களைக்கொண்டு, மிகச்சாதுரியமாக நிறுவு கின்றார் நூலாசிரியர். பிற்பாதியிலே தேவி யின் திருவுருவச் சிறப்பைக்கூறி அவள் பெருமையைப் பாராட்டி **இன்பமாகடலில்** திளைக்கின்றார். இவற்றின்கண் ஆசிரியரது வாதத்திறமையும், சொற்சாதுரியமும், கற் பனைத்திறனும், திருத்தொண்டின் உறைப்பும் கண்டின்புறுதற்குரியன.

மொழிபெயர்ப்பு:—

கோவை, கவியரசு திரு. கு. நடேச கவுண்டரவர்களின் சீரிய புலமையும், அருட் கவிபாடும் திறமையையும் அவர்கள் இயற்றி யுள்ள, **"எட்டிக்குடி முருகன் பிள்ளைத்தமிழ்," 'பழனியாண்டவர் மயில்விடுதூது'** 'மங்கையர்க் கரசியார்பிள்ளைத்தமிழ்' நூல்களிலிருந்து நாம் அறிந்துள்ளோம். வடமொழியிலும் வல்லுனர். இவர், 'ஆதிசங்கரர் இயற்றிய திருச்செந்தூர் புஜங்கம்' என்னும் தோத்திரப்பனுவலை, அப்படியே கருத்துப்பிசகாமல் தமிழில் பாடலாகப் பாடியுள்ளார்.

தமிழ்ப்பெரியார், காலஞ்சென்ற நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் **அவர்கள்**

"நடேசன் செந்நாவலனே" என இவர்களை வாழ்த்திப் பாடியுள்ளார். இலைமறை காயா யுள்ள கவியரசு நடேசகவுண்டரவர்கள், **ஆநந்தஸாகரஸ்தவம்** என்னும் இவ்வடமொழி நூலையும் தமிழில் கவியாகப் பாடியுள்ளார் கள்; தாம் பெற்ற இன்பம், இவ்வையகம் பெற அருமை தெரிந்து புலவரவர்களை ஆதரித்து, அவர்கள் நூலை வெளியிட்டால் சமயத்துக்கும், தமிழுக்கும் ஆற்றும் ஓர் அரும்பணியாகும்.

அப்பனுவல்களில் சிலவற்றை ஈண்டு ஆராய்வோம்.

(38வது செய்யுள்)

அனைத்துமுன்செயல் அடியேன்மேற் பிழையில்லை

காண்பதுவு முயிர்ப்பதுவும்
முதலெவையுமுன் செயலாக்
கருதா நின்றேன்
பூண்பதினி எத்தவற்றை
என்னுடைய தெனத்தாயே
புசிப்பாயென்ன
ஊண்பரிந்துதாய் கொடுத்ததுண்ட
சிறுகுழந்தையின்பால்
மீதூண் குற்றம்
காண்பவர்யார் இவ்வுலகிற்
கடம்பவன பவனமமர்
கயற்கண்ணுளே.

இச்செய்யுளின் கருத்து :

காண்பது, மூச்சுவிடுவது முதலியவாகிய என்செயல் அனைத்தும், சக்தியாகிய உன் உதவியினால் நடைபெறுவனவே. ஆதலால் என்னுடையது என, எக்குற்றத்தை யான் ஏற்றுக்கொள்ளுவது? தாய் அன்போடு கொடுத்த உணவையே உண்ட குழந்தை மேல் 'அதிகம் உண்டது' என்ற குற்றம் சாற்றவழியுண்டோ ?

[இதன்கண் 'அவனன்றியோரணுவும் அசையாது' என்ற பழமொழிக் கருத்தும், தன்மேல் குற்றமில்லை என்பதற்கு ஆசிரியர் கூறும் சாதுரிய மொழியும், உவமையழகும் போற்றற் குரியன]

[56வதுபாட்டு]

மலரடிச் சிறப்பு

நெற்றிவிழியான் மதனை
நீறுக்கல் இருவிருக்கும்
பொதுவேயான
வெற்றியெனினும் பாதிக்குரியு
வுன்றன்பதி முழுதும்
விரும்பிற்கொள்க
எற்றிமறலியை உதைத்தவெற்றி
யிடத்தாளேயீட்
டியதன்றேபின்
முற்றுமுனக்கேயுரித்தாம்
அதனையுமவ்வரன் கவர்தல்
முறையோ தாயே.

(கருத்து) இறைவனும் இறைவியும் ஒருடலில் இருவடிவமாயுள்ளனர். அதனால் நெற்றிவிழி இருவருக்கும் பொது. அதனா லடைந்த மன்மததகன வெற்றியில் அம்மைக் கும் சரிபாதி பங்குண்டு. ஆனால் இறை வனுக்கே அவ்வெற்றியை உலகோர் கூறுவர். அதுநிற்க. இயமனை உதைத்தது இடது பாதமாகையால் அவ்வெற்றி அம்மைக்கே தனியுரிமையாயிருந்தும், சிவனுக்கே உரிய தாகக் கூறுவது போரநியாயம் என்பது.

(58வது பாட்டு)

பதுமைரேகையாய்ப்பதிகவென்மனனே

கொழுமையழ கொழுகொளியாற்
குலவுமுன தகவடியைக்
கூடிநன்கு
கழுமியெனதிதயபதுமம்
பதிந்து காண்பதனால்
கயற்கண்ணுளே
செழுமைமிகு புவனமிரு
நூற்றிருபானுன் கினிலும்
செங்கோ லோச்சும்
விழுமியசீர்ச் செல்வத்தை
விளக்குமறிகுறி வரையாய்
விளங்குந்தேவீ.

(கருத்து)

மினுமினுப்பும், அழகும் பேரொளியும் பொருந்திய உன் திருவடியின் உட்புறத்தை என்மனமாகிய தாமரை நன்கு சேர்ந்து அழுந்திப்பதிந்து விட்டது. அதனால் உன் அகவடி, பதுமரேகை உடையதாகக் காணப் படுகிறது. அதனை நீக்கி விடாதே. நீக்கினால் 214 புவனங்களையும் ஆளுதற்குரிய சாமுத் திரிகா லக்ஷணம் உன்திருவடியை விட்டு நீங்கிவிடும். [திருவடியை மறவாத மனம் தமக்கு வேண்டும் என்பதைத்தான் ஆசிரியர் எத்தனை சாதுரியமாக் கூறுகின்றார்]

(72வது பாட்டு)

முத்துமாலை

எங்கொழிந்தா னென
நெடுநாளறிவதனுக் கியலாமல்
ஏகியிந்நாள்

இங்கு வந்து கிடைத்தனன்
நம்குதலைமொழி மதலையென
எழுந்த அன்பால்
பொங்குமுலைப் பால்சுரந்து
பிலிற்று துளிநிரையன்றே
புவனமீன்ற
மங்கலமீனாட்சி திருமார்பின்
மிசையசைமுத்து
மாலைதானே.
(கருத்து)

நெடுநாட் பிரிந்து காணாதுபோன ஆண் மகவைக் கண்டதாய், அக்குழந்தை திரும்பி வரக்கண்டால், அன்பால் அவளுக்கு பால் சுரப்பது இயல்பு. அவளை அகன்று அலைந்த யான், மீண்டும் அவள்பால் அடைக்கலம் புகவே, அவள் என்மேல் கொண்ட அன்பால் சுரந்தபால் துளியெனவே கருதுகின்றேன், அவளது மார்பில் அணிந்த முத்துமாலையை. [73வது பாட்டு)

கைக்கரும்பின் அடிக்கணுவாவேனே.

அரும்பு பெரும் புவனமுள
ஆருயிர்தம் மனமயமர்ய்
அமைந்துன்கைக்
கரும்புருவ நெடுஞ்சிலையென்
றுரைப்பரது கட்டுரையேல்
கயற்கண்ணம்மே
விரும்புவதிவ் வடியேனவ்
வில்லினடி யென் மனமாய்
விளங்கவேண்டும்
பொரும்புரி நாண் ஏற்று
கின்ற பொழுதிலுன்
அடிக்கொழுந்து பொருந்தலாமே.
(கருத்து)

அம்பிகையின் கையிலேகரும்புவில் உண்டு அது உயிர்களின் மனத்தால் ஆகியது என்பர். அப்படியானால் என் மனத்திற்கு அவ்வில்லில் உயர்ந்த இடம்வேண்டாம். தாழ்வான இடமாகிய அடிப்பாகமாகவே இருக்கவேண்டும். அப்போதுதான் அந்தவில்லை வளைக்கையில் அவளது திருவடியில் என்மனம் தீண்டப் பெறும் என்கிறார் சாதுரியமாக.
(104வது பாட்டு)

பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

அம்மா நின்திருக்கோயிலில்
லாத நாட்டினில்யான்
அமரவேண்டா
எம்மோயுன் மெய்ம்மையினை
யுணர்த்தாத கலையெதுவும்
எனக்கு வேண்டா
விம்மார்வத்தாலுனது தாள்
பரவாக் கிளையெனக்கு
மேவவேண்டா
இம்மாய உலகிலுனை
நினையாத நாளொன்றும்
ஈயவேண்டா.
இதன் பொருள் வெளிப்படை.
[குமரகுருபரன் 1958 ஆண்டு மலரினின்றும் வெளியிடப் பெறுகிறது]

திருவெம்பாவை திருப்பாவை மாநாடுகள்

18-12-61	திருக்கோஷ்டியூர்	—	சௌமியநாராயணப்பெருமாள் கோயில்
20-12-61	சோளபுரம்	—	அருள்மொழிநாத சுவாமி கோயில்
21-12-61	கல்லல்	—	பாகசாலை விநாயகர் கோயில்
,,			சோமசுந்தரேசுவரர் கோயில்
22-12-61	நாட்டரசங்கோட்டை	—	கண்ணுடையநாயகி அம்மன் கோயில்
23-12-61	காத்தப்பேட்டை	—	திருக்கண்ணன்குடி நாயனார் கோயில்
24-12-61	கண்டதேவி	—	சுவர்ணமூர்த்தீசுவரர் கோயில்
25-12-61	காளையார் கோயில்	—	சுவர்ணகாளீசுவரர் கோயில்
26-12-61	இளையாங்குடி	—	இராசேந்திரசோளீசுவரர் கோயில்
27-12-61	சிவகங்கை	—	விசுவநாதசுவாமி கோயில்
28-12-61	சிங்கம்புணரி	—	சேவுகப்பெருமாள் ஐயனார் கோயில்
29-12-61	பட்டமங்கலம்	—	மரியாதைகண்ட விநாயகர்,
,,			அழகியசுந்தரி அம்மன் கோயில்
30-12-61	அழகாபுரி(கொல்லங்குடி)		அழகிய நாச்சியம்மன் கோயில்
10-12-61	நெட்டூர்	—	சுவர்ணவரசீசுவர சுவாமி கோயில்
17-12-61	திருவாரூர்	—	தியாகராஜ சுவாமி கோயில்
24-12-61	ஆத்தூர்கோட்டை	—	காயநிர்மலேசுவரர் கோயில்
20-12-61	திருக்காட்டுப்பள்ளி	—	அக்கினீசுவர சுவாமி கோயில்

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A. B.L., திருநெல்வேலி]

(முன் தொடர்ச்சி)

இப்படி நாதமுனிகள் குருகூரிலேதங்கி, தாம் ஆழ்வார் திருவருளால் பெற்ற திராவிட வேதங்களை மனனம் செய்துகொண்டு வாழ்ந்துவரும் காலத்தே ஒருநாள் கனவிலே வீரநாராயணபுரம் மன்னனார் தோன்றி "நீர் நம் ஊருக்கே வந்து இவ்வேதங்களை நம் திரு முன்பே ஓதலாகாதோ?" என்று கேட்டார். அவ்விறையாணையைச் சிரமேலேற்று நாத முனிகள் பொலிந்து நின்ற பிரானிடத்திலும், ஸ்ரீ சடகோபரிடத்திலும் ப்ரியா விடைபெற் றுப் புறப்பட்டார். அவ்விதம் புறப்படுங் கால் ஆழ்வாரருளால் அவருக்குக் கிடைத்த வருங்கால இராமாநுஜ விக்கிரகத்தையும் தம்முடனே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு நாதமுனிகள் வழியிலுள்ள திவ்விய தேசங் களையெல்லாம் சேவித்து செல்லுமிடங்களி லெல்லாம், பவிஷ்யத் ராமாநுஜ விக்கிர கத்தை ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கெல்லாம் ஸேவை ஸாதிக்கப்பண்ணி இறுதியில் வீர நாராயணபுரம் வந்து அவ்விக்கிரகத்தை அதி கோலாகலத்துடனே எழுந்தருளப்பண்ணி னார்.

இசையில் வல்லுநராதலின் திராவிட வேதங்கள் முழுவதையும் பண்ணிலும் இரா கங்களிலும் அமைத்து தினமும் மன்னனார் ஸந்நிதியிலே இசைத்து ஓதிவந்தார். ஒருநாள் மன்னனார் இவர் கனவிலே தோன்றி "உல கோர் உய்யவென்றே சரணகளேபரங்களை யும் உய்த்துணர் அறிவையும் கொடுத்தோம். நம்மையறிந்துகொள்வதற் குறுப்பாக வேத சாஸ்திரங்களை அருளினோம். நாமே பன் முறை அவதரித்து அறியாதன அறிவித் தோம். செய்யாதனவெல்லாம் செய்து காட்டி னோம். அவை கார்யகர மாகாமையாலே ஆழ் வார்களை அவதரிப்பித்து திவ்யப்ரபந்தங்களை அவர்கள் வாயிலாக வெளியிட்டோம். பலன் கிடைக்கும் போன்றிருந்தது. ஆனால் அதைத் தீய சக்திகள் தடுத்து விட்டன. நாம் கொடுத்த அறிவுகொண்டே பிரபந்தங்களை மறைத்தன. காரணம் அவ்வறிவை ஒரு சிலர் தம் ஏகபோக உரிமையாகக்கொண்டு விட்டனர். அவ்வறிவும் ஒரு சிலர் மட்டும் தான் கற்கலாம் என்று வரையறுத்து விட் டனர். யாவரும் நம்மை வழிபடும் அதிகாரி களாம் வண்ணம் இப்பிரபந்தங்கள் தோற்று விக்கப்பட்டமையின் இவற்றை யாவரும் பயில வழி செய்யும். அப்படிச் செய்யுங் கால் முன்னம் நாம் அருளிய அறிவுடன் மோதுதல் இன்றிச் செய்யும். நாம் முன் ஒரு மொழிப் போர்வையில் அருளிய அறிவே வேறொரு மொழிப் போர்வையில் இப்பிரபந் தங்களாக அவதரித்துள்ளன. இதனை இரு மொழி யறிஞர்களும் உணரச்செய்வது உம் மையும் உம்மை அடுத்துவரும் பரம்பரையை யும் சாரும்" என்று உணர்த்தி மறைந்தார். இவ்வாணையை மனங்கொண்ட நாதமுனிகள், யாவருக்கும் இசை நுணுக்கங்கள் தெரிய முடியாதென்பதை உணர்ந்தவராதலின் சக லரும் இத்திராவிட வேதங்களை ஓதிப் பயன் பெறவேண்டும் என்ற பரந்த பரோபகார நோக்கோடு அப்பாசுரங்களை இயலாக ஓது வதற்கு வழி வகுத்து அவ்வியல் முறையி லேயே யாவரும் கோஷ்டியாக பிரபந்தங்களை ஓதுமாறு திட்டமிட்டார்.

முதலிலே நாதமுனிகள், தம் மருமக்க ளான மேலையகத் தாழ்வான் கீழையகத் தாழ் வான் இருவரையும், திருக்கண்ணமங்கை யாண்டான் என்பவரையும் அழைத்தருளி அவர்களுக்கு இப்பிரபந்தங்களை மனனம் செய்வித்து ஓதும்படி செய்தார். அவர்கள் பலருக்குக் கற்பிக்க அப்படியே பிரபந்தம் விரைவிலே பரவலாயிற்று. படிப்படியாகப் பலர் பிரபந்த ஸ்ரீ கோசங்களை (ஏடுகளை)ப் பிரதி செய்துகொண்டுபோய்த் தத்தம் திவ்ய தேசங்களிலே பரப்பினர். திவ்யப்ரபந்தம் தேசவுடைமையாயிற்று. நாதமுனிகளும் திரு வுள்ளம் மகிழ்ந்தவராய் எழுந்தருளியிருந் தார்.

இவர் இங்ஙனே எழுந்தருளியிருக்க சோழன் அவையிலே ஒரு நாள் இரண்டு பாடகிகள் தோன்றினர். ஒருத்தி தேவகா

னத்தில் வல்லவள். மற்றையவள் மானுட கானத்தில் சிறந்தவள். இருவரும் தத்தம் கானமே சிறந்தது என்று வாதிட்டனர். அரசன் இசைவல்லுநரை எல்லாம் அழைத்து ஒரு அவை கூட்டி அப்பாடகிகள் இருவரையும் பாடச்செய்தான். சபை மனித்த இசையறிவார்மட்டும் கூடியதொன்ருதலின் அவர்களுக்கு மனித்த இசை பாடியவளின் கானத்தைச் சுவைத்தறிய முடிந்தது. தேவகானம் வல்லவள் தன் முழுத்திறனையும் காட்டியும் அவ்விசை அவ்வவையிலுள்ளார் செவியுணர்வுக்குப் புறம்பாதலின் அவர்களால் அதனைத் துய்த்து மகிழ இயலவில்லை. அதனுல் அவர்கள் அனைவரும் முன்னையவள் இசையே மேலானது என்று ஒரு முகமாக முடிவு கூறினர். அரசனும் அவர்கள் முடிவை ஏற்று மானுடகானம் பாடியவளுக்கு வெகுவாகப் பரிசுகள் வழங்கி கவுரவித்தான். தேவகானம் வல்லுனளோ மிக வருத்தத்தோடு வெளியேறியவள் இனி தன் இசையை மனிதர்களிடம் பாடி அவ்விசைக்கு இழுக்குண்டாக்கலாகாது என்று உறுதிபூண்டு கோயில்கள் தோறும் சென்று இறைவன் திருமுன்பே தன் கானத்தை இசைத்து வருவாளாயினள். அப்படித் தலங்கள்தோறும் செல்பவள் ஒரு நாள் வீரநாராயணபுரம் வந்து மன்னனுர் ஸன்னிதியிலே பாடிக்கொண்டிருந்தாள். அங்கு வந்த நாதமுனிகள் அவ்விசையைக் கேட்டு அப்படியே பரவசமாய் நின்ருர். அவள் பாடி முடிந்ததும் நாதமுனிகள் அவள் கானத்தை மிகப் பாராட்டி இத்தெய்வகானம் அவளுக்கு எத்திருவருளால் கிட்டியதென்று வியந்தார். அவளுக்கு பெருமாளுடைய தீர்த்தப்ரசாதம், பரியட்டம் முதலியவையெல்லாம் விசேஷமாக அளிக்கச்செய்து சன்மானித்தார். அந்நங்கையும் இந்த கானத்தை ரசிக்கவல்ல ஒரு பெரியாரைக் காணப்பெற்ருேமே என்று உளம் பூரித்தவளாய் நாதமுனிகளை வணங்கி விடைகொண்டாள். அங்ஙனம் சென்றவள் நேராக சோழன் முன் சென்று பணிந்து நின்ருள். தன் சபையைவிட்டு வெளியேறியபோது இறங்கிய முகத்தோடு சென்ற அவள் வதனத்தே ஒரு புதிய செருக்கு ஒளிர்வதைக் கண்ட சோழன் "ஏனம்மா மீண்டும் இங்கு வந்தாய்?" என்று மெல்ல வினவினன். அவள் தலை நிமிர்ந்து "அரசே! என் இசையின் நுணுக்கங்களை அறியவல்லார் ஒரு பெரியவரைக் கண்டுகொண்டேன். அவர் திருமுன்பே என் இசையைத் தாங்கள் செவிமடுத்தால் அவர் மூலம் இத்தெய்வகானத்தின் நுணுக்கங்களையும் இதற்கும் மனித்த இசைக்கும் உள்ள தார தம்மியங்களையும் தாங்கள் தெரிந்துகொள்ளலாம்" என்று பதிலிறுத்தாள். அரசன் நீதிமானுகையாலே அம்மங்கை கூறுவதில் உண்மையிருக்கவேண்டும் என்று ஊகித்து அதை ஆராய்ந்துவிடவேண்டும் என்று தீர்மானம் செய்தவனுய் அவளை நோக்கி "அப்பெரியவர் யாரம்மா? எவ்விடத்தில் இருக்கிருர்?" என்று வினவ, அவளும் "இதோ அண்மையில் வீரநாராயணபுரம் மன்னனுர் ஸன்னிதியிலே யாழ்வாசித்துக் கொண்டிருக்கிருர் ஒருமஹான். நாதமுனிகள் என்பது அன்னுர் திருநாமம்" என்று கூறினுள். அரசனும் நாதமுனிகளை உரிய சிறப்போடு, தன் சபைக்கு எழுந்தருளுமாறு அழைப்பனுப்ப நாதமுனிகளும் திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களைத் தேவகானத்தில் அடைத்து தான் இசைத்திருப்பதை உலகறியச் செய்ய விரும்பியிருந்தாராதலாலே அரசன் அழைப்பை உவப்புடன் ஏற்றுச் சென்ருர். அரசன் அவரை அன்போடேற்று உபசரித்து உரிய ஆதனத்திருத்தி "ஸ்வாமீ! தேவகானம் மனுஷ்யகானம் இரண்டிற்கும் உள்ள தாரதம்மியம் தேவரீர் அறிவீர்என்று இந்நங்கை அறிவித்தாள். அது உண்மையா? எம்போலியருக்கு அது விளங்காமையின் இவளை அடியேன் முன்னே ஸன்மானிக்காது விட்டேன். அவ்விசையின் நுணுக்கங்களை அறியவே தேவரீரை இங்கே வரும்படி பிரார்த்தித்தேன்" என்று விண்ணப்பித்தான். நாதமுனியும் மீண்டும் இசைவல்லாரைக் கூட்டுவித்து அவ்வவையிலே மீண்டும் தேவகானம் வல்லாளையும் மனுஷ்யகானம் வல்லாளையும் பாடச்செய்து அரசனை நோக்கி "இத்தேவகானம் பாடினவள் இசையின் பெருமையை யானும் என்போன்றவர்களும் தேவர்களுமே அறிவார்கள், அறிய இயலும். அம்மனுஷ்யகானம் வல்லாள் இசையை மட்டுமே நீங்கள் அறிவீர்கள்" என்று முடிவு கூறினுர். அரசன் "தேவரீர் சொல்லுவது சரி என்று நாங்கள் தெரிவது எப்படி?என்று வினவினன். நாதமுனிகள் பல்வேறு எடையுள்ள நூற்றுறு தாளங்களை அரசன் சபைத்

குக் கொணரச்செய்து அவற்றை ஒவ்வொன்ருக ஒலிக்கச் செய்து சபையிலிருந்தவரை நோக்கி "இத்தாளங்களின் ஒலி ஒன்றுபோல் ஒன்றில்லை என்பதைக் கேட்டீர்கள். இவ்வொலியை வைத்து ஒவ்வொரு தாளத்தின் எடையையும் சொல்லவல்லீரோ?" என்று வினவ, அவர்கள் "அது எப்படி சாத்தியம் எடையைத் தராசில் நிறுத்துத்தானே அறிய இயலும்?" என்ன நாதமுனிகள் மீண்டும் ஒவ்வொரு தாளமாக இசைக்கச்செய்து அத்தாளத்தின் எடையை அவ்வப்போது கூறிக் குறிக்கச் செய்து யாவும் இசைத்து முடித்தவாறே அவற்றைத் தராசிலிட்டு எடைபோட்டுப் பார்க்கச்சொன்னுர். அரசனும் அவ்வாறே சோதிக்க நாதமுனிகள் கூறியது இம்மியும் ஏற்றத் தாழ்வின்றியிருந்தது கண்டு தன் ஆதனத்திறங்கி அவர் திருவடிகளிலே வணங்கி "ஸ்வாமீ. எங்கள் அறியாமை காரணமாக இத்தேவகான நங்கையின் இசையை நாங்கள் அவமதித்துவிட்டோம். பொறுக்கவேண்டும்" என்று வேண்டி அந்நங்கைக்கு வேண்டிய பரிசில்கள் வழங்கி ஏராளமான பொருள்களை நாதமுனி திருவடிகளில் காணிக்கையாக ஸமர்ப்பித்தான். நாதமுனிகள் "நாம் இப்பொருள்களென்ன! சதுர்முக, பசுபதி, சதமக பதவிகள் பெறினும் வேண்டோம்" என்று அவற்றைப் பெற மறுத்து மீண்டும் வீரநாராயணபுரத்தே வந்து எம்பெருமானுக்கு நித்திய கைங்கர்யம் செய்து வந்தார்.

இவர் ஸ்ரீ பாதத்தை அண்மி இவரை ஆசார்யராகப்பற்றிப் பலர் உய்ந்தனர். அவர்களுள் மிக முக்கியமானவர்கள், உய்யக்கொண்டார், குருகை காவலப்பன், நம்பி கருணுகர தாஸர், ஏறுதிருவுடையார், வானமாமலை தெய்வநாயக ஆண்டான், உருப்பட்டூராச்சான் பிள்ளை, சொக்கத்தூராழ்வான் பிள்ளை, கருணுகரதாசர், மேலையகத்தாழ்வான், கீழையகத்தாழ்வான் என்பவர்கள். நாதமுனிகள் இவர்களனைவர்க்கும் முதலில் "த்வயத்"தின் அர்த்த விசேஷங்களைக் கூறி, திவ்யப் பிரபந்தங்களை ஓதுவித்து, வேத சாஸ்திரங்களையும் போதித்து, ரகஸ்யத்ரய ஸாரார்த்தமாக ஜகத்காரண பூதமான ஸ்ரீ புருஷ நிர்ணயத்தையும் ந்யாஸ தத்வத்தையும் அருளிச்செய்து நம்மாழ்வாரின் கரிய கோலத்திருவுருவை ஸதாமனத்திலே எழுந்தருளப்பண்ணி யோகத்திலே எழுந்தருளியிருந்தார்.

சிலகாலம் சென்றவாறே திவ்யப்ரபந்தங்கள் நாடெங்கும் பரவின. இப்பிரபந்தங்கள் திருமங்கையாழ்வார் காலத்தே திருவரங்கம் பெரிய கோயிலிலே ஓதப்பெற்று வந்தன. அதற்கென்று திருமங்கைமன்னன் சில திட்டங்கள் ஏற்படுத்தியிருந்தார். அவையெல்லாம் பின்புள்ளாரராலே விடப்பட்டு பிரபந்த ஸேவை பெரிய பெருமாள் ஸன்னிதியிலே நின்றுபோயிற்று. பெரிய கோயிலிலேயே நின்ருல் மற்றக் கோயில்களைக்கேட்பானேன். அவைகளிலும் அதே நிலைமை ஏற்பட்டு பிரபந்தச் சுவடேயன்றி மறைந்துபோயிருந்த நிலைமையை முன்னே பார்த்தோம். நாதமுனிகள் மீண்டும் அவ்வழக்கத்தை நடைமுறைக்குக் கொணரத் திருவுள்ளம் பற்றினுர். அவர் பெரிய கோயிலுக்கு எழுந்தருளி அங்கும் எங்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கூட்டிப் பெருமாளுக்கும், ஆழ்வார்களுக்கும், திராவிட வேதங்களுக்கும் எத்தகைய அபசாரம் விளைவிக்கப்பட்டிருந்ததென்பதைக் காட்டி திருமங்கைமன்னன் காலம்போல மீண்டும் திராவிட வேதங்கள் பெருமாள் ஸன்னிதிகளிலெல்லாம் ஓதப்பெற ஒருவழி வகுத்தார். இது விஷயமாக பன்னீராயிரப்படி குருபரம்பரையிலே ஒரு குறிப்பு காணப்பெறுகின்றது. அக்குறிப்பின் சாரமாவது:—

"நம்மாழ்வாரது அத்யயன உற்சவாதிகளை முன்போல நடைபெறச் செய்தார். அவ்வுற்சவத்திலே ஆழ்வார் கோயிலேற எழுந்தருளும்படியும், அத்யயன உற்சவத்திலே வேதபாராயணமும், பிரபந்த ஸேவையும் நடக்கும்படி பண்ணினுர். இப்பிரபந்தங்கள் வேதங்களுக்கு ஒப்பானவை என்று பெரிய பெருமாள் அநுக்ரகித்த படியினுல் வேதங்களைப் போல தொடக்க காலம், ஓதல்விடுபடு காலம் இவைகளை இத்திராவிட வேதங்களுக்கும் அமைத்தார். திராவிட வேதமான திருவாய்மொழிக்கும் திருக்கார்த்திகைத் திருநாளிலே அந்நாள் தொடங்கி ஓதல் விடுபடு காலம் என்றும் மார்கழி மாதத்தில் அத்யயன உத்ஸவ ஆரம்பத்தில் மீண்டும் ஓதுதல் தொடங்கு காலம் என்றும் நிர்ணயம் செய்தார். இந்நாட்களுக்கிடையே ஸ்ரீ வைஷ்ணவர்கள் திராவிட வேதங்களை வாயினுல் ஓதுகை தவிர்க்கவேண்டும் என்றும் திட்டம்

செய்தார். அத்யயன உத்ஸவ ஆரம்பத்திலே பெரிய பெருமாள் ஆழ்வாருக்குத் திருமுகப் பட்டயம் பிரஸாதிக்கும்படியும், திருக்கார்த்திகைத் திருநாளிலே பெரிய பெருமாள் சாத்திக்கொண்ட எண்ணெய்க்காப்பு மீதத்தைத் திருமங்கை மன்னன் திருமிடற்றிலே சாத்துவித்துத்தம்மை அவர் பாடிய இளைப்பையெல்லாம் தீர்த்தருளின ஐதிஹ்யத்தை நினைந்து பிரதி வருஷமும் அவ்வெண்ணெய்க்காப்பு மீதத்தை முதலிலே ஆழ்வார் திருமிடற்றிலே சாத்துவித்து அப்பால் அத்தைலக்காப்பை ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருமிடற்றிலே சாத்திக் கொள்ள வேணுமென்றும் நியமித்தார். வியாசர் வேத சாஸ்திரங்களைப் பாகுபடுத்தியதுபோல நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்ற நான்கு பிரபந்தங்களும் ஸாம, யசுர், இருக்கு, அதர்வண வேதங்கள் போன்றவை என்றும், திருமங்கையாழ்வார் அருளிச்செய்த ஆறு பிரபந்தங்களும் அவ்வேதங்களின் அங்கங்கள் என்றும், ஏனைய ஆழ்வார்கள் அருளிச்செய்துள்ள பிரபந்தங்கள் உபாங்கங்கள் என்றும் பாகுபடுத்தியருளினர். திருவாய்மொழி த்வயத்தின் விவரணமென்றும், திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி, திருப்பாவை, நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி, திருச்சந்த விருத்தம், திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனுதிப்பிரான் இப்பிரபந்தங்கள் பிரணவத்தின் அர்த்த விளக்கம் என்றும், கண்ணிநுண் சிறுத்தாம்பு என்ற மதுரகவிகளின் பிரபந்தம் "நம" சப்தப் பொருள் விரிவென்றும், பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், நான்கு திருவந்தாதிகள், திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் இவை திருமந்திர விசேட விவரணம் என்றும், திருவாய்மொழி தவிர மேலே சொன்ன இருபத்து மூன்று பிரபந்தங்களும் திருமந்த்ரார்த்த விவரணம் என்றும் நிச்சயித்து விளக்கினர். ஆழ்வார்கள் அநுபவத்துக்கு விஷயமான தலங்கள் நூற்றெட்டு என்பதை அறுதியிட்டுக்காட்டினர். பிராம்மணனாகப் பிறந்தவனுக்கு எப்படி வேத வேதாந்த இதிஹாஸ புராணங்கள் கற்கவேண்டி நியமம் உள்ளது போலவே, பிரபந்நனான ஸ்ரீ வைஷ்ணவர் யாவரும் இப்பிரபந்தங்களை அறியக்கற்று வல்லராதல் அவசியம் என்பதை வலியுறுத்தினர்: இப்பிரபந்தங்களில் திருப்பள்ளியெழுச்சியும், திருப்பாவையும் எம்பெருமானைத் துயிலெழுப்பும் பாசுரங்களாகையாலே இவையிரண்டும் தினமும் காலையில் ஸேவிக்கவேண்டியவை என்று திட்டம் செய்தார். திவ்வியப் பிரபந்த அநுஸந்தானத்துக்கு முன்பு மங்களாசாஸனம் முக்கியமாகையாலே, திருப்பல்லாண்டு ஸேவித்து தொடங்கவேண்டும் என்று நிச்சயித்தார். திருவாய்மொழி தொடங்கு முன் நம்மாழ்வார் விஷயமாக ஸ்ரீ மதுரகவிகள் அருளிய கண்ணிநுண் சிறுத்தாம்பு என்ற பதிகம் சொல்லியே தொடங்கல் வேண்டும் என்று அறுதியிட்டார். இப்படிப்பட்ட பல வைஷ்ணவ ஸம்பிரதாயத்தின் நியதிகளை வரையறுத்து ஸன்னிதிகள் தோறும் பிரபந்த அநுஸந்தானத்துக்கு வழி வகுத்தருளிய பெருமை நாதமுனிகளையே சாரும். அநேகமாக எல்லா வைஷ்ணவ ஸ்தலங்களிலும் இந்த ஸம்பிரதாய ஒழுங்கே இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகின்றமை கண்கூடு.

நாதமுனிகள் யோகத்திலும் வல்லவராகையாலே திவ்யப் பிரபந்தங்களில் ஆழ்வார்கள் பாசுரங்களில் வரும் பாவங்களை எல்லாம் அவர் தாமே பெற்று ஆழ்வார்களின் அநுபவங்களை அனுபவிக்க முடிந்தது. அப்படி அநுபவித்து அவ்வனுபவ வாயிலாக உணர்ந்த அர்த்தங்களை எல்லாம் தம் சிஷ்யர்களுக்கு அவர் கூறி வந்தார். அவர் வாழ்க்கையே எம்பெருமானோடு ஒட்டிய வாழ்க்கையாயிற்று. உலகில் சாதாரணமாக நம்போலியர் காணும் நிகழ்ச்சிகளிலெல்லாம் அவர் இறைவன் உலவி வருவதாகக் காணும் ஒரு மனப்பக்குவம் பெற்றிருந்தார். எப்போதும் எம்பெருமான் நினைவாகவே யிருக்கும் இவரை ஸேவிக்க வேணுமென்று அரசன் தன் தேவிமாரோடு வந்து இவர் திருவடிகளிலே தெண்டனிட்டுச் சென்றார்கள். அப்போது நாதமுனிகள் திருவுள்ளத்திலே நம்மாழ்வார் அருளிய "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்றும்" என்ற பாசுர அடி நினைவுக்கு வந்தது. அவ்வளவுதான். நாதமுனிகள் கண்களினின்றும் அரசனும் தேவியருமாக வந்தவர்கள்

மறைந்துவிட்டனர். கிருஷ்ணனும் கோபியரும் தன் முன்னே ஸேவை ஸாதிப்பதாக நாதமுனிகளுக்குப்பட்டது. அரசனையும் தேவிமாரையும் பின் தொடர்ந்து கங்கைகொண்ட சோழபுரத்தளவும் சென்றுவிட்டார் முனிகள். இதையறிந்த உய்யக்கொண்டார். குருகை காவலப்பன் முதலியோர் அங்கு சென்று "தேவரீர் இப்படிச் செய்ய அடுக்குமோ?" என்று நாதமுனிகளை வினவ அவர் கிருஷ்ணனும் கோபியரும் என்று பட்டது. வந்தேன்" என்றார். சீடர்கள் அவருடைய பாவனுதியத்தை வியந்து அவரை மிகவும் சிரமத்தோடு "வந்தது அரசனும் தேவிமாரும்" என்றுணரப்பண்ணி மீள அழைத்து வந்தார்கள். மற்றொருகால் அரசன் சிற்றரசர் சூழவந்து மன்னனுரை ஸேவித்துத் திரும்பும் போது, தன் பட்டத்து யானைமீது ஏறச்செல்கையில் ஒருசாமந்தன் (சிற்றரசன்) பணிந்து தன் தலையைக்காட்ட அரசன் அவன் தலையிலே அடிவைத்துயானைமீதேறினான்.இதைப் பார்த்து நின்ற நாதமுனிகள் கண்மூடிக் கை கூப்பித் தியானித்து நிற்கக்கண்ட சிஷ்யர்கள் அரசன் யானைமீதேற தேவரீர் கைகூப்புவானேன் என்று கேட்க நாதமுனிகள் "ஸர்வேச்வரன் பிரம்மாதி தேவர்கள் தலையிலே அடியிட்டுப் பெரிய திருவடி மேற்கொள்ளும்படி இது வாகாதோ" என்று அருளிச்செய்து அந்த மன நிலையிலேயே மோகித்து நின்றார் என்பர்.

தன்சீடர்களுள் குருகை காவலப்பனுக்கு யோகக்கிரமத்தை அருளிச்செய்தார் நாதமுனிகள். அதுபோல உய்யக்கொண்டாரை அழைப்பித்து அவரையும் அவ்வாறே யோகத்தைக் கற்கச்சொல்ல அவர் ஆசாரியனின் கிருபையை வியந்தாராயினும், பொறுப்புகள் மிக உள்ளவராதலின் ஆசார்யனைப் பணிந்து "ஸ்வாமீ! பிணம் கிடக்க மணம் புணரலாமோ. அடியேனுக்கு இப்போது இந்த யோகதசை அடுக்காது. இச்சரீரம் விடும் காலத்தே ஏறிட்டுக்கொள்வதே ஏற்புடையது என்று அடியேன் கருதுகிறேன்" என்று விண்ணப்பித்தார். முனிகளும் அவர் சொன்னதை ஒப்பி, "ஆகில் நீர் சாஸ்திரங்களையும், திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களையும் பரப்பி ஒளிவிடச் செய்யும்" என்று ஆஞ்ஞாபித்தார். நாட்கள் செல்லவே நாதமுனிகள் திருவுள்ளத்திலே தான் ஆக்கைவிடும் நாள் அண்மையிலுள்ளது என்று உணர்ந்தார் போலும். ஒருநாள் அவர் தன் குமாரராகிய ஈச்வரமுனியை அருகழைத்து "உமக்கு ஒரு குமாரர் ஜனிக்கப்போகிறார். அவருக்கு யமுனைத்துறைவர் என்று திருநாமமிடும்" என்று அருளினார். பின் உய்யக்கொண்டாரை அழைத்து ஆழ்வார் தமக்கு அருளிய பவிஷ்யதாசார்ய (வருங்கால ஆசார்யர்) விக்கிரகத்தை காட்டி, "இதை ஈச்வரமுனிக்குப் பிறக்கும் மைந்தருக்குக்காட்டி, இது நாம் உகந்த விஷயம் என்று அறிவித்து இதுவே ஸ்ரீ வைஷ்ணவத்துக்குத் தஞ்சமாவது என்று தெரிவியும்" என்று கட்டளையிட்டார். அப்பால் குருகை காவலப்பனை அழைத்து "நாம் உங்களுக்கு உபதேசித்துள்ள நம் தர்சனதாத்பர்ய யோகரகசிய அர்த்த விசேஷங்களை யமுனைத்துறைவருக்கு உபதேசியுங்கள் என்று அருளிச்செய்து முன்போலவே யோகத்திலமர்ந்தார்.

ஒருநாள் அரசன் முன்போலவே தன் பரிவாரங்களுடன் வேட்டையாட வந்தவன் நாதமுனிகளையும் ஸேவித்துப் போனான். அவன் போன சில நேரம் கழித்து நாதமுனிகளின் திருமாளிகையிலிருந்து ஒரு பெண் வந்து நாதமுனிகளைத் தெண்டனிட்டு "ஸ்வாமீ! நம் மகத்தருகே இரண்டு வில்லிகளும், ஒரு அழகிய பெண்ணும் ஒரு குரங்கோடு வந்தார்கள். நாதமுனிகள் எழுந்தருளியிருக்கிறாரா என்று கேட்டுப் போனார்கள். அவர்கள் இங்கு வந்து தேவரீரைக் கண்டார்களா?" என்று கேட்டாள். நாதமுனிகள் வியப்புடன் "என்ன வில்லிகளும் பெண்ணும் குரங்குமா! ஐயோ! நான் பாக்கிய மற்றவனாய் விட்டேனே. வந்தவர் பெருமாளும், இளையபெருமாளும், பிராட்டியும், திருவடியுமாகத்தான் இருக்கவேண்டும்! இனி எங்கே காண்பேன். தேடிவந்த திருவருள் கிட்டாது போயிற்றே!" என்று மிகவும் கலங்கினர். பின்னர் ஒருவாறு தேறி அவர்கள் போன திசையை அப்பெண்ணிடம் கேட்டு அத்திசை வழியே அவ்வில்லிகளைத் தேடிப் போனார். போம் வழியில் எதிர்ப்பட்டாரை எல்லாம் இவ்வழியே வில்லிகளும் பெண்ணும் குரங்கும் போகக் கண்டீர்களா என்று வினவி அவர்கள் ஆம் என்று கூறிப்போன வழி காட்ட அவ்வழியே போய்க்கொண்டே கங்கைகொண்ட சோழபுரம் அணுகினார்.

அங்கேயும் எதிர்ப்பட்டாரை முன்போல் வினவ அவர்கள் "அப்படி ஒருவரையும் கண்டிலோம்" என்றார்கள். இதுகேட்ட நாதமுனிகள் ஏக்கமுற்றுத் தன்பேறு கிடையாமைக்கு நொந்து தன்னையே புடைத்துக்கொண்டவராய்க் கீழே விழுந்து, அதுவே காரணமாக அங்கே அப்பொழுதே இக்காயத்தைக் கழித்து, புக்கவர் மீண்டும் திரும்பி வாராததும், "படிவங்கள், நெடிய பஞ்சபூதங்கள் விளியும் நாளும் போக்கிலா"ததுமான திருவைகுந்தத் திருநாட்டை அலங்கரித்தருளினார். அப்படி அவர் திருநாடலங்கரிக்கும் போது அவருக்கு வயது முன்னூற்றுமுப்பது என்று குருபரம்பரை கூறும். தினம் தாது வருடம் மாசி மாதம் வளர்பிறை ஏகாதசி என்பர்.

இச்செய்தியைக் கேட்ட உய்யக்கொண்டார் முதலிய சிஷ்யர்கள் ஈச்வர முனிகளோடு அங்கே சென்று நாதமுனிகளின் திவ்ய விக்கிரகத்தை ஸேவித்து ஆருகி இரு தடங்கண் புனல்சோர மிகவும் துக்கித்துப் பின் ஒருவாறுதேறி, ஈச்வர முனிகளைக் கொண்டு அவ்விக்கிரகத்துக்கு ப்ரம்ம மேத சம்ஸ்காரங்கள் செய்வித்து அவ்விக்கிரகத்தைத் திருப்பள்ளி படுத்து வீரநாராயணபுரம் திரும்பினர். அங்கே பின்னால் செய்ய வேண்டிய சடங்குகளனைத்தையும் குறைவற நிறை வேற்றினர்.

ஸ்ரீமந்நாதமுனிகள் யோகத்தில் எழுந்தருளி யிருந்த இடத்தருகே குருகை காவலப்பன் எழுந்தருளி யிருந்தார்.

ஸ்ரீமந் நாதமுனிகளின் வரலாற்றைப் பார்த்தோம். இதைப் பார்த்தபின் முனிகளின் வரலாற்றுக்கு முகப்பாகக் கூறிய "தெருளுற்ற ஆழ்வார்கள்" என்ற பாடல் எத்துணை உண்மையானது என்று தெள்ளத் தெளிய விளங்குகிறதல்லவா. இப்பாடலைப் பாடியவர் தென்னாசார்ய சம்பிரதாயத்திலே தலைசிறந்து விளங்கிய மணவாள மாமுனிகள்.

நாதமுனிகள் காலத்தே தான் தமிழ்த் தாயின் தவப்புதல்வரும் கவிச்சக்ரவர்த்தி என்று போற்றப் பட்டவருமான கம்பரும் திருவவதரித்தார். அவர் தாம் பாடிய 'இராமாவதாரம்' என்ற இராமாயணத்தை திருவரங்கப் பெருநகரிலே பெரிய பெருமாள் ஸன்னிதியிலே நாதமுனிகள் திருமுன்பே அரங்கேற்ற வந்தார். அவர்கவியை வைணவர்களும் மற்றும் வட நூல் பண்டிதரும் வியந்து பாராட்டினராயினும் கம்பர் தம் நூலிலே கூறிய பல புதிய செய்திகளை ஏற்கத்தயங்கினர். கம்பர் இறையருள் பெற்றுத் தம் செவ்விய உணர்வு உணர்த்தியபடி நூலை அமைத்தார் என்பதை அவர்கள் அறிய வழியில்லையன்றோ! உயுத்த காண்டத்திலே இரணியன் வதைப்படலத்தை அவர் அரங்கேற்றும்போது குழுமியிருந்த புலவர்கள் இராம கதையில் நரஸிம்மாவதாரக் கதைக்கு இடமேது என்று தடைகிளப்பினர். நாதமுனிகள் கம்பரை நோக்கி "இப்புலவர்கள் கூறுவது கேட்டீரா? அவர்களுக்கு ஒரு சமாதானம் சொல்லவேண்டாமா?" என்று கேட்டார். கம்பர் நாதமுனிகள் கேள்வியின் குறிப்பை உணர்ந்து "ஸ்வாமீ சமாதானம் சொல்வானேன்? நிரூபணமே செய்துவிடலாம் தேவரீர் அநுக்ரகம் இருந்தால்" என்று விண்ணப்பித்துப் புலவரை நோக்கிப் "புலவீர்! இந்த இரணியன் வதைப்படலத்தை இந்தக் கோயிலிலே எழுந்தருளியிருக்கும் மேட்டழகிய சிங்கர் ஸன்னிதியிலே விண்ணப்பிக்கிறேன். அதை அந்தச் சிங்கப்பெருமானே ஏற்றுக் கொண்டால் அப்புறம் கூறமாட்டீர்களே?" என்று கேட்க அவர்களும் சரி என்று சொன்னார்கள். நாதமுனிகள் தலைமையிலே கோஷ்டி மேட்டழகிய சிங்கர் ஸன்னிதிசென்றது. கம்பரும் இரணியன் வதைப்படலத்தைப் பாடல் பாடலாக அரங்கேற்ற சிங்கப்பிரானும் சிரக்கம்பம் செய்து வந்தார். "இந்தத் தூணில் நாராயணன் உள்ளான்" என்று கூறிய மகனைச்சீறி இரணியன்

"நசைதிறந் திலங்கப் பொங்கி நன்று
நன்றென்ன நக்கு
விசைதிறந்து உருமுவீழ்ந்த தென்ன
வோர்தூணில் வென்றி
இசைபிறந் துயர்ந்த கையால்
எற்றினன் எற்றலோடும்
திசைதிறந் தண்டம் கீறச்
சிரித்தது செங்கட்சீயம்"

என்ற பாடலைக் கம்பர் பாடியதும் உலகம் நடுங்க ஓர் சிரிப்பு மேட்டழகிய சிங்கர் திருவாயினின்றும் கேட்டது: புலவர்கள் வியப்பும் நடுக்கமும் ஒருங்கே தோன்ற சிரமேல்

குவித்த கையராய் செயலற்று நின்றனர். நாதமுனிகள் பெருமாளின் இந்த நிரூபணத்தைக் கண்டு உளம் பூரித்தார். இராமாயணம் அரங்கேற்றம் ஆனதும் பெரிய பெருமாள் திருவாக்காக "கம்பரே! நீர் நம் சடகோபனைப்பாடினையோ?" என்றவாக்கு எழுந்தது. கம்பரும் தன் தவறுக்கு அபராத க்ஷாமணம் செய்துகொண்டு நம்மாழ்வார் விஷயமாக சடகோபரந்தாதி என்ற ஒரு நூலை இயற்றி நாதமுனிகளின் திருமுன்பே அரங்கேற்றி அவரது அங்கீகாரமும் பெற்றார். அதன் காரணமாகவே வைணவக் கோயில்களிலே ஸ்ரீ சடகோபர் உற்சவங்களிலே சடகோபரந்தாதிப் பாடல்களில் சில ஓதப்பெறுகின்றன.

ஆன்ம உய்வுக்கு மிக அவசியமான வைணவம் என்னும் அமுதவல்லி இடைக்காலத்தே நாம் முன்னே பார்த்தபடி பலவித அசுரசக்திகளால் நெருக்குண்டு வாடிவதங்கி, ஊட்டம் பெறாமல் உருமாறி நின்றதை மீண்டும் வெளியுலகிலே செழித்துப் படரவிட்ட பரம கைங்கர்யம் நாதமுனிகளுக்கே உரியது. அந்த நன்றியை நினைந்தே தம் குருபரம்பரையில் நாதமுனிகளை நடுநாயகமாக்கிப் போற்றி வருகின்றனர் வைணவர்கள். அப்பிரபந்தங்கள் மெய்ப்பொருள் விளக்கும் மாணிக்கங்கள் என்பதை ஸ்ரீமந் நாதமுனிகளே முதன் முதல் கண்டு அப்பாடல்கள் கூறும் பொருள்களைக் குறிப்பாகத் தன் சீடர்களுக்குணர்த்தி அவர்கள் தம் சீடருக்குணர்த்த, பின்வந்த வியாக்கியான ஆசிரியர்கள் அக்குறிப்பை வித்தாக வைத்து இன்று தமிழுலகும் பிற சமயிகளும்கூடப் போற்றும் வண்ணம் வியாக்கியானமிட்டார்கள். மொத்தத்தில் தமிழுலகும் சிறப்பாக வைணவ உலகும் நாதமுனிகளுக்கு என்றென்றும் கடமைப்பட்டவை என்பது சொல்லித் தெரியவேண்டிய விஷயமல்ல.

ஸ்ரீமந் நாதமுனிகள் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

(தொடரும்)

சென்னை : ஏகாம்பரேசுவரர் கோயிலில் 16-12-61 முதல் 13-1-62 முடிய பிரதி தினம் காலை 6-மணி முதல் 7-மணி வரை திருவெம்பாவை திருப்பள்ளி யெழுச்சி விரிவுரை நடைபெற்றது. 16-12-61 முதல் 5-2-62 வரை கோளறு பதிகம் பாராயணமும் நடைபெறும்.

சேலம் : பிரம்மஞான சபையில் 16-12-61 முதல் 14-1-62 முடிய பிரதிதினமும் காலை 7-30 மணி முதல் 8-45—மணி வரை திருப்பாவை காலட்சேபம் நடத்தப்பெற்றது.

வேலூர்—செல்வமுத்துக் குமாரசுவாமிக்கு நவரத்தினக் கவசம் அணிவிழா 19-12-61-ல் நடைபெற்றது.

திருவிடைமருதூர்—மகாலிங்கசுவாமி கோயிலில் நான்காவது ஆண்டு பன்னிரு திருமுறைப் பாராயண விழா 14-9-61 முதல் 8-1-62 வரை நடைபெற்றது.

வழுவூர்—வீரட்டேசுவரசுவாமி கோயிலில் திருவாதிரை விழா 22, 23-12-61 தேதிகளில் நடைபெற்றது.

சென்னை—சிதம்பரேசுவரர் கோயிலில் ஆருத்திரா உற்சவம் 13-12-61 முதல் 24-12-61 வரை நடைபெற்றது. 25-12-61 முதல் 31-12-61 வரை பன்னிரு திருமுறைகளின் சொற்பொழிவுகளும், திருமுறை பாராயணமும் நடைபெற்றது.

இறைபணியாளர் மாற்றம்

திரு. P. S. இராமலிங்கம், பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் நகரம் பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் கழனிவாசல், நீலகண்ட பிள்ளையார் கோயில், ஏந்தல் ஆகியவைகளுக்கு இறைபணியாளராக மாற்றப்பட்டிருக்கிறார்.

திரு. K. அரங்கசாமி கரையாளர், சுந்தரேசுவரசுவாமி கோயில் தம்பிக்கோட்டை வரதராஜப்பெருமாள் கோயில் செம்படவன்காடு ஆகியவைகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

திருச்செந்தூர்க் கல்வெட்டுக்கள்

[வித்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

திருச்செந்தூர் என்பது முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்று. இது திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீ வைகுண்டத்துக்குத் தென்கிழக்கே பதினெட்டு மைல் தொலைவில் உள்ளது. (Sewell's list of Antiquities Vol I P. 313)

இத்திருக்கோயிலில் உள்ள பாண்டியன் இரண்டாம் வரகுண மகாராசனின் பதின்மூன்றும் இராச்சிய ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு, பலவகையிலும் மேம்பாடு உடையது. இது வட்டெழுத்து நெடுங்கணக்கில் (Vatteluttu alphabet) தமிழ் மொழியில் (Tamil Language) செதுக்கப்பட்டுள்ளது. இதை மொழி மாற்று முறையில் (Transliteration method) ஆங்கிலத்தில் கல்வெட்டுத்துறையில் நுண்மாண் நுழைபுலம் பெற்றுள்ள உயர்திரு. K. V. சுப்பிரமணிய ஐயர் B. A. அவர்கள் இந்தியா தேசத்துக் கல்வெட்டு, தொகுதி 21, பக்கம் 101-இல் (Epigraphia Indica Vol XXI Page 101) சிறந்த குறிப்புக்களுடன் வெளியிட்டுள்ளனர். அத்தொகுதி கிடைப்பது அரியதாய் இருக்கின்றமையால் தமிழ் மக்களுக்குப் பயன்படுமாறு "திருக்கோயில்" வாயிலாக இக்கல்வெட்டைத் தமிழில் வெளியிடுகின்றேன்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற செய்தி

திருச்செந்தூர்க் கோயிலில் மூலத்தானத்துப் பட்டாரர்க்கு (கடவுளுக்கு) பாண்டியன், இரண்டாம் வரகுண மகாராசன் 1400 காசை, தன்னுடைய அரசியல் அதிகாரிகள் ஆகிய இருப்பைக்குடி கிழவன், சாத்தம் பெருமான், அழற்றூர் நாட்டுக்கோன் இவர்கள் மூவர்களிடம் கொடுத்து வட்டிக்கு விடச் சொல்லி அந்த வட்டியைக்கொண்டு ஒவ்வொரு ஆண்டிற்கும் கோயிலுக்கு வேண்டிய செலவினங்களைச் செய்யுமாறு பணித்துள்ளான்.

செலவினங்கள் ஆவன

திருவமுதினுக்கு அரிசி, வாழைப்பழம், சர்க்கரை, காய்கறிகள், தாளிப்பதற்குக் காயங்கள், கும்மாயத்துக்குப் பச்சைப்பயறு, பொரி, வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு, நுந்தா விளக்குகளுக்கு நெய், திருமஞ்சனத்துக்குப் பால், தயிர், இளநீர், தேன், சந்தனம், மடைப்பள்ளியில் கைதுடைப்பதற்குத் துணிகள், திருமேனிக்கு ஸ்ரீ உடைகள் முதலானவைகளுக்காக விடப்பட்ட வைகள் ஆகும். மார்கழித் திருவாதிரை, மாசிமகம், வைகாசி விசாகம், இவைகளில் இச்செலவினங்கள், இரண்டு மடங்கு அதிகமாகச் செய்தலும் உண்டு.

இக்காசுகளை வட்டிக்குப் பெற்றவர்கள்

(1) குடநாட்டுக் கொற்கை ஊரார் (2) இந்நாட்டு நல்லூர் ஊரார், (3) இந்நாட்டுச் சாலியத்து ஊரார், (4) வழுதிவள நாட்டுப் பிரம்மதேயம் வரகுணமங்கலத்துச் சபையார், (5) இந் நாட்டுத் தேவதானப் பிரம்மதேயம் தியம்பாக்க மங்கலம் இரணவாலி மங்கலத்துச் சபையார், (6) இந்நாட்டுக் கங்கை மங்கலத்துப்படும் ஆலம் பட்டத்து ஊரார், (7) இந்நாட்டு மானவீரப் பட்டினத்து நகரத்தார், (8) ஸ்ரீ வல்லப வளநாட்டுப் பிரமதேயம் கட்டாரை மங்கலத்துச் சவையார், (9) பராந்தக வளநாட்டுப் பிரமதேயம் பரைசு மங்கலத்துத் தென்கிழக்கு திண்ணிச் சபையார், (10) இந்நாட்டுப் பிரமதேயம் மாறமங்கலத்துச் சபையார், (11) இந்நாட்டுப் பிரமதேயம் தென்ரக்கு...... இலூர்ச்சவையார், (12) அமிதகுண வளநாட்டுப் பிரமதேசம் அவனிப சேகரமங்கலத்துச் சபையார், (13) குடநாட்டுப் பிரமதேயம் புளியிடைச் சபையார், (14) இந்நாட்டுப் பிரமதேயம் கீரனூர்ச் சபையார் (15) இந்நாட்டுப் பிரமதேயம் சடங்கவிக்குறிச்சி சபையார், (16) இந்நாட்டுப் பிரமதேயம்

கடுங்கோமங்கலத்துச் சபையார் ஆகியோர் ஆவர்.

இவர்கள் பெற்ற காசுக்கு ஏற்ப ஓராண்டிற்கு ஒரு காசுக்கு வட்டி இரண்டு கல நெல் வீதம் கூடுதலான நெல்லை கோயிலில் கொண்டு வந்து அளந்தார்கள். தவறினால் அபராதத்துடன் அளக்க வேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருந்தது. நெற்கள் நிறைமதி நாராயத்தால் அளக்கப்பட்டு வந்தன. சாதாரண மரக்காலுக்கும் இந்த மரக்காலுக்கும் வேறுபாடு உண்டு. இந்த மரக்கால் ஆறு நாழி கொண்டது ஒரு குறுணி என்றும், பதினைந்து குறுணி கொண்டது ஒரு கலம் என்றும் கணக்குக் கொண்டதாகும். இக்கோயிலுக்கு மேற்கண்ட ஊரார்கள் அளந்து வந்த நெல் மூன்று படியைக் குற்றினால் ஒரு படி அரிசி காணும் தரத்தது. ஆனால் வேற்றுக் கல்வெட்டுக்களில் ஐந்து படி நெல் இரண்டு படி அரிசி கண்டதாகக் குறிக்கப்பெற்றுள்ளன.

காசு, காணம், பொன்

சங்க நூல்களில் காசு, காணம், பொன் இவைகள் குறிக்கப்பெற்றுள்ளன. ஆனால் பொன், காணம் இவைகள், ஒரு காசில் எவ்வளவு பாகமென்று குறிப்பிடப்படவில்லை. நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணி உரையில் காணம் என்பது ஒரு பொற்காசு என்று குறித்துள்ளனர். காணம், பொன் இவை சமமான மதிப்புள்ளன என இக்கல்வெட்டு அறிவிக்கின்றது. காணம் பொன், இவை ஒரு காசில் பத்தில் ஒரு பங்காகும்.

இக்கல்வெட்டுக்களைத் துருவி ஆராய்ந்தால் கீழ்க்கண்ட வாய்பாடுகளைப் பெறலாம்:—

Money

10 பொன் அல்லது 10 காணம் = 1 காசு.

Weight

10 காணம் = 1 கழஞ்சு.
100 பலம் = 1 துலாம்.

Measure

10 செவிடு (அ) 2 ஆழாக்கு = 1 உழக்கு
2 உழக்கு = 1 உரி
2 உரி = 1 நாழி
6 நாழி — 1 குறுணி
15 குறுணி — 1 கலம்.

Number

4 அடுக்கு = 1 பற்று.

இக்கல்வெட்டில் கண்ட ஊர்களுள் சில இருக்கும் இடம்

மாறமங்கலம், திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் தாலூகாவிலும், நல்லூர், கட்டாரைமங்கலம், இவைகள் திருச்செந்தூர் தாலூகாவிலும், வரகுணமங்கலம் திருநெல்வேலிக்கு வடகிழக்கே பதினெட்டு மைல் தூரத்திலும் இருக்கின்றன. இவைகளுள் வரகுணமங்கலம் பாண்டி நாட்டிலுள்ள பதினெட்டு வைணவத் தலங்களுள் ஒன்றாகும். இவ்வூர் நம்மாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்றது.

இக்கல்வெட்டில் கண்ட சில சொற்களுக்குப் பொருள்

போதர = போகும்படி தர. (having given to be taken)

காயம்—இக்காலம் இச்சொல் பெருங்காயத்திற்குவழங்குகிறது. ஆனால்பழங்காலத்தில் மிளகு, மஞ்சள், சீரகம், சிறுகடுகு, கொத்தம்பரி இவை ஐந்துக்கும் பெயராய் வழங்கி வந்துள்ளது.

ஏற்றி—ஆக என்னும் பொருளில் வந்துள்ளது.

நூற்றமிது—சுண்ணாம்பு.

நாராயம்—தானியம் அளக்கப்பெறும் மரக்கால்.

துமிக்கவும் = நறுக்கவும் (அ) வெட்டவும். பெரும்பாணாற்றுப்படை 266-ஆவது அடியில் புன்னைத்துமித்து என்பதற்கு புன்னை மரத்தை வெட்டி என்று நச்சினார்க்கினியர் கூறியவாற்றால் அறியலாம்.

கும்மாயம்—பயற்றுப் பொங்கல்.

சில முக்கியக் குறிப்புக்கள்

இக்காலம் ஆய்தம் (ஃ) மூன்று புள்ளி வடிவினதாய் எழுதப்பட்டு வருகிறது. ஆனால் 9-ஆம் நூற்றாண்டில் ஆய்தம் ஒரு

வகுத்தல் குறிபோல எழுதப்பட்டு வந்ததை நோக்கக் கழிபேறுவகை தருவதாகும்.

இக் கோயிலில் உள்ள வேறு ஒரு கல்வெட்டு, திருச்செந்தூரை திருச்செந்தில் என்று குறிப்பிடுவதோடு இந்தச் சுப்பிரமணியப் பிள்ளையார் கோயிலில் பத்துப் பாட்டில் முதலாவதாக உள்ள திருமுருகாற்றுப்படையைப் பாடிய நக்கீரதேவனாரின் பிரதிமத்தை எழுந்தருளுவிக்கப் பெற்ற செய்தியையும் உணர்த்துகிறது.

(ஸ்வஸ்தி)ஸ்ரீ கோ வரகுண மாராயற்கு யாண்டு......டன் எதிர்பதின்மூன்று இவ்வாண்டு திரு...சுப்பிரமணிய பட்டாரர் உபாசையர்...யின திருமூலத் தானத்துப் பட்டாரர்க்கு முதல் கெடாமை பொலியூட்டாக கொண்டு செலுத்துவதாக உடையார் அடியாராயின போதர இருப்பைக்குடி கிழவனும் சாத்தம் பெருமானும் அளற்றூர்...நாட்டுக் கோனும் ஐயாயிரத் தொன்று நாளாற் கொண்டுவந்த நிறை குறையாப் பழங்காசு ஆயிரத்து நானூறு. இக் காசிற் குடநாட்டுக் கொற்கை ஊரார்கையின் முதல்கெடாமைப் பொலியூட்டுக் கொண்டு செலுத்துவதாக வைத்த நிறை குறையாப் பழங்காசு தொண்ணூற்றுறு. பொன் எட்டு. இக் காசால் ஒரு காசுக்கு ஆண்டுவரை பொலி நிறைமதி நாராயத்தால் இருகலன் நெல்லாக வந்த நெல்லு நூற்றுத் தொண்ணூற்று முக்கலனே ஒன்பதின் குறுணி. இந் நெல்லால் நியதிப்படி இவர்கள் கொண்டுவந்து செலுத்தக் கடவன நாழி அரிசிக்கு முந்நாழி நெல்லாக திருவமிதினுக்கு அரிசி செந்நெற்றீட்டல் ஒருபோதைக்கு நாநாழியாக நான்கு போதைக்கு அரிசி செந்நெல் தீட்டல் பதினறு நாழி. மார்கழித் திருவாதிரையும், மாசிமகமும், வைகாசி விசாகமும், படி இரட்டி செலுத்துவது. இப்பரிசு செலுத்தாது குத்துக்காற்படில் இத் தேவர்க்கே இருபத்தைஞ்சு காசு தண்டமும்பட்டுச் செலுத்தாதுவிட்ட முதல், இரட்டியும் கொடுப்பது.

இந்நாட்டு நல்லூர் ஊரார் கையில் மேற்படி பொலியூட்டாக வைத்த நிறை குறையாப் பழங்காசு நூற்றறுபத்தெட்டும் பொன் ஆறேகால். இக் காசால் ஆண்டுவரை பொலி நெல்லு நிறைமதி நாராயத்தால் முந்நூற்று முப்பத்தேழு கலனே முக்குறுணி நாநாழிஉரி. இந் நெல்லால் நிசதிப்படி திருவமிதினுக்கு இவர்கள் கொண்டுவந்து செலுத்தக் கடவன நாழி நெய் அமிதினுக்கு இருபதின்னாழி நெல்லாக திருவமிது நிவேதிக்க பசுவின் நறுநெய் ஒரு போதைக்கு உழக்காகவும் கறி துமிக்கவும் பொரிக்கவும் ஒருபோதைக்கு ஆழாக்காகவும் நான்கு போதைக்கு நெய்யமிது நாழி உரி. நாழித் தயிர் அமிதினுக்கு இருநாழி நெல்லாக திருவமிது நிவேதிக்க தயிரமிது ஒரு போதைக்கு நாழியாகவும், கூட்டுக்கு தயிரமிது ஒருபோதைக்கு உரியாகவும், நான்கு போதைக்கு பசுவின்றேய் தயிர் அறுநாழி. ஒரு காசுக்கு நிறைமதி நாராயத்தால் பதின் கலநெல் அஃகம் ஆக ஆயிரம் வாழைப் பழத்தினுக்கு ஒரு காசாகவும், எழுதுலாத் தறுபத் தைம்பலச் சர்க்கரைக்கு ஒரு காசாகவும், இருபதின் துலாம் கறியமிதினுக்கு ஒரு காசாகவும், அறுபதின் நாழி காயத்தினுக்கு ஒருகாசாகவும் அஃகம் ஆக திருவமிது நிவேதிக்க வாழைப்பழ அமிது ஒருபோதைக்கு கருவாழைப்பழ அமிது பதினறு. சர்க்கரையமிது ஒருபோதைக்கு ஒருபலமாக, நான்கு போதைக்குச் சர்க்கரையமிது நாற்பலம். கறியமிது காய்கறி ஒன்று, புளியங்கறி ஒன்று, புழுக்குக் கறி ஒன்று, பொரிக்கறி ஒன்று ஏற்றிக் கறியமிது நான்கினுக்கு ஒரு போதைக்குப் பதின்பலமாக நான்கு போதைக்கு கறியமிது நாற்பதின்பலம். காயம் மிளகமிது, மஞ்சளமிது, சீரகஅமிது, சிறுகடுகமிது, கொத்தம்பறி அமிது, ஏற்றிக் காயம் ஐந்து. இவை ஒருபோதைக்கு முச்செவிடாக நான்கு போதைக்குக் காயம் உழக்கே இரு செவிடு. மார்கழித் திருவாதிரையும், மாசிமகமும், வையாசி வியாகமும், படி இரட்டி செலுத்துவது. இப்பரிசு செலுத்தாது குத்துக்காற்படில் இத்தேவர்க்கே ஐம்பதுகாசு தண்டமும் பட்டுச் செலுத்தாது விட்டமுதல் இரட்டியும் குடுப்பது.

இந்நாட்டுச் சாலியத்து ஊரார் கையில் மேற்படி பொலியூட்டாக வைத்த நிறை குறையாப் பழங்காசு இருபத்து நான்கு பொன் ஐந்தேமுக்கால். இக்காசால் ஒரு காசுக்கு ஆண்டுவரை பொலி நிறைமதி நாராயத்தால் இருகல நெல்லாக வந்த நெல்லு நாற்பத்தொன்பதின் கலனே இருகுறுணி நாழி உரி. இந்நெல்லால் நியதிப்படி திருவமிதினுக்கு இவர்களே கொண்டுவந்து

செலுத்துக் கடவ நாழிப்பருப்புக்கு நாழி உழக்கு பயிர் ஆகவும், நாழிப் பயிற்றுக்கு இருநாழி நெல் ஆகவும் கும்மாயத்தினுக்குப் பயிற்றுப் பருப்பு ஒருபோதைக்கு உரி ஆக நான்கு போதைக்குச் சிறுபயிற்றுப் பருப்பு இருநாழி. ஒரு காசுக்கு நிறைமதி நாராயத்தால் பதின்கல நெல் அஃகம் ஆக ஆயிரத் திருநூற்றிருபது பற்று வெற்றிலைக்கு ஒரு காசாகவும் பதினுயிரத் தொருநூறு அடைக்காய் அமிதினுக்கு ஒருகாசு ஆகவும் அஃகம் ஆக இலை அமிது ஒருபோதைக்கு மூவடுக்காக நான்கு போதைக்கு வெள்ளிலை அமிது மூன்று பற்று. அடைக்காய் அமிது ஒரு போதைக்குப் பதினன்காக நான்கு போதைக்கு அடைக்காயமிது ஐம்பத்தாறு. நூற்றமிது வேண்டுவது இடுவது. மார்கழித் திருவாதிரையும், மாசிமகமும். வைகாசி வியாகமும், படி இரட்டி செலுத்துவது. இப்பரிசு செலுத்தாது குத்துக் காற்படில், இத்தேவர்க்கே ஐந்து காசு தண்டமும் பட்டுச் செலுத்தாது விட்டமுதல் இரட்டியுங் குடுப்பது.

வழுதி வளநாட்டுப் பிரமதேயம்

வரகுணமங்கலத்துச் சவையார் கையின் மேற்படி பொலியூட்டாக வைத்த, நிறை குறையாப் பழங்காசு நூற்று ஒருபது. இக் காசால் ஒரு காசுக்கு ஆண்டுவரை, பொலி, நிறைமதி நாராயத்தால் இருகல நெல் ஆக வந்த நெல்லு இருநூற்றிருபதின் கலம். இந் நெல்லால் நியதிப்படி இவர்கள் கொண்டு வந்து செலுத்தக்கடவன நாழி நெய்க்கு இரு பதின் நாழி நெல் ஆகத் திருநந்தா விளக்கு ஒன்றினுக்கு நியதி நெய் உரியாகத் திரு நந்தாவிளக்கு ஐந்தினுக்குப் பசுவின் நறு நெய் நியதி இருநாழி உரிய, அந்நியம்போது திருவமிது செய்கிற்று தீபமாலை கட்டப். பசு வின் நறுநெய் நியதி உழக்கு. இப்பரிசு செலுத்தாது குத்துக்காற்படில் இத்தேவர்க் கேய் பன்னிரண்டரைக்காசு தண்டமும் பட்டுச் செலுத்தாது விட்ட முதல் இரட்டியும் குடுப்பது. இந்நாட்டுத் தேவதானப் பிரமதேயம் தியம்பாக்க மங்கலம் இரணவாலி மங்கலத்துச் சவையார் கையின், மேற்படி பொலியூட்டாக வைத்த நிறைகுறையாப் பழங்காசு முப்பத் திரண்டு. இக்காசால் ஒரு காசுக்கு ஆண்டு வரை பொலி நிறைமதி நாராயத்தால் இருகல நெல் ஆக வந்த நெல்லு அறுபத்து நாற்கலம். இந்நெல்லால் இவர்கள் நியதிப்படி கொண்டு வந்து செலுத்தக்கடவதான நாழிப்பாலுக்கு இருநாழி நெல் ஆகத் திருமஞ்சனம் ஆடி அருளப் பசுவின் தயிர் நியதி நாநாழி. இப் பரிசு செலுத்தாது குத்துக்காற்படில் இத் தேவர்க்கேய் ஐந்து காசு தண்டமும் பட்டுச் செலுத்தாது விட்ட முதல் இரட்டியுங் குடுப்பது.

இந்நாட்டுக் கங்கை மங்கலத்துப்படும் ஆலம் பட்டத்து ஊரார் கையின் மேற்படி பொலியூட் டாக வைத்த நிறைகுறையாப் பழங்காசு பதினாறு. இக்காசால் ஒரு காசுக்கு ஆண்டு வரை பொலி நிறைமதி நாராயத்தால் இரு கல நெல் ஆக வந்த நெல்லு முப்பத்திருகலம்: இந்நெல்லால் இவர்கள் நியதிப்படி கொண்டு வந்து செலுத்தக்கடவன, ஓரிளநீர்க்கு நாழி நெல் ஆகத் திருமஞ்சனம் ஆடி அருள இள நீர்க்கு நாழி நீர் ஆக நியதி இடும் இளநீர் எட்டு இப்பரிசு செலுத்தாது குத்துக்காற் படில் இத்தேவர்க்கேய் ஐந்து காசு தண்டமும் பட்டுச் செலுத்தாது விட்டமுதல் இரட்டியும் குடுப்பது. இந்நாட்டு மானவீரப் பட்டினத்து நகரத்தார் கையில் மேற்படி பொலியூட் டாகவைத்த, நிறைகுறையாப் பழங்காசு நூற்று இருபது. இக்காசு ஒரு காசுக்கு ஆண்டுவரை பொலி நிறைமதி நாராயத்தால் இருகல நெல் ஆக வந்த நெல் இருநூற்று நாற்பதின் கலம். இந்நெல்லால் இவர்கள் நியதிப்படி கொண்டுவந்து செலுத்தக்கடவன: ஒரு காசுக்கு நிறைமதி நாராயத்தால் பதின் கல நெல் அஃகம் ஆக நூற்று ஐம்பதின் நாழி நறும்பூவினுக்கு ஒரு காசு ஆக ஸ்ரீ பள் ளித்தாமத்தினுக்கு நியதி அளக்கக்கடவ நறும்பூப்படி நாழி. இப்பரிசு செலுத்தாது குத்துக்காற்படில் இத்தேவர்க்கேய் இருபத் தைந்து காசு தண்டமும் பட்டுச் செலுத்தாது விட்ட முதல் இரட்டியும் குடுப்பது. ஸ்ரீ வல் லபவளநாட்டுப்பிரமதேயம் கட்டாரமங்கலத்துச் சவையார் கையின் மேற்படி பொலியூட்டாக வைத்த நிறைகுறையாப் பழங்காசு தொண் ணூற்று நான்கு. பொன் ஐந்து. இக்காசால் ஒரு காசுக்கு ஆண்டுவரை பொலி நிறைமதி நாராயத்தால் இருகல நெல் ஆகவந்த நெல்லு நூற்றெண்பத்தொன்பதின் கலம்.

இந்நெல்லால் இவர்கள் கொண்டுவந்து செலுத்தக் கடவதான நாழிச் சிறுபயற்றுப்

பொரிக்கு' நாழி உழக்குப் பயறு ஆகவும், நாழிப் பயற்றுக்கு இருநாழி நெல் ஆகப் பொறி இட நிசதம் சிறுபயற்றுப் பொறி நியதி உரியினுக்கு அளக்கக்கடவ சிறுபயறு உரி ஆழாக்கு. ஒரு காசுக்கு நிறைமதி நாராயத்தால் பதின்கல நெல் அஃகம் ஆக ஒரு காணத்துக்குப் பதினொரு நாழி உழக்கு மஞ்சளாகத் திருமேனி பூசி அருள மேற்றேல் சிரைத்த பற்று மஞ்சள் நியதி மூவுழக்கு ஓவியலும், பாவாடையும் ஓரணை ஒருகாசு பெற்றன ஒருமுறை மூர்த்திகளுக்கு நால் அணையாக ஓராண்டு நான்குமுறைக்கு வெண்கூறை பதினறணை. இப்பரிசு செலுத்தாது குத்துக்காற்படில் இத்தேவர்க்கேய் இருபத்தைய்ந்துகாசு தண்டமும் பட்டுச்செலுத்தாது விட்ட முதல் இரட்டியுங் கொடுப்பது.

பராந்தக வளநாட்டுப் பிரமதேயம் பரைசுமங்கலத்துத் தென்கிழக்கு திண்ணிச் சவையார் கையின் மேற்படி பொலியூட்டாக வைத்த நிறைகுறையாப் பழங்காசு இருபத்தைந்து. இக்காசு ஒரு காசுக்கு ஆண்டுவரை பொலி நிறைமதி நாராயத்தால் இருகல நெல்லாக வந்த நெல்லு ஐம்பதின் கலம். இந்நெல்லால் இவர்கள் கொண்டுவந்து செலுத்தக் கடவதான நாழி அரிசிக்கு மூந்நாழி நெல்லாகத் திருப்பலிக்கு நியதி அரிசி செந்நெற்றீட்டல் ஒரு போதைக்கு நாழியாக இரண்டு போதைக்கு அரிசி செந்நெற்றீட்டல் இருநாழி. ஒரு காசுக்கு நிறைமதி நாராயத்தால் பதின்கல் நெல் அஃகம் ஆக ஸ்ரீ மடைப்பள்ளிகட்டு மேற்கட்டிக்குப்புடைவை இணை இரண்டரைக் காணம் பெற்றன ஒருமுறை அறுதிங்களுக்கு இரு அணையாக ஓராண்டு இரண்டு முறைக்குப் புடைவை நால் அணை. கல்புறைக்குப் புடைவை இணை இரண்டு காணம் பெற்றன. ஒருமுறை முத்திங்களுக்கு ஈர் அணையாக ஓராண்டு நான்கு முறைக்குப் புடைவை எட்டணை. இப்பரிசு செலுத்தாது குத்துக்காற்படில் இத்தேவர்க்கேய் ஐந்து காசு தண்டமும் பட்டுச் செலுத்தாது விட்ட முதல் இரட்டியும் குடுப்பது.

இந்நாட்டு பிரமதேயம் மாறமங்கலத்துச் சவையார் கையின் மேற்படி பொலியூட்டாக வைத்த நிறைகுறையாப் பழங்காசு நூற்றைம்பத்திரண்டரை. இக்காசால் ஒரு காசுக்கு ஆண்டுவரை பொலி நிறைமதி நாராயத்தால் இருகல நெல் ஆகவந்த நெல்லு மூந்நூற்றைங்கலம். இந்நெல்லால் இவர்கள் கொண்டுவந்து செலுத்தக் கடவதான ஒரு காசுக்கு நிறைமதி நாராயத்தால் பதின்கல நெல்அஃகம் ஆக ஸ்ரீ தூபம் சீதாரியினுக்கு வேண்டும் உறுப்பு அகில் உட்படக் கற்பூரமும் தேனும் நியதி அரைக்காணம் விலைபெற இடுவது. ஸ்ரீ கர்ப்பக்கிருகத்துக்கட்டும் மேற்கட்டிக்கு வெண்கூறை இணை ஏழரைக் காணம் பெற்றன ஒருமுறை ஆறுதிங்களுக்கு நான்கு அணையாக ஓராண்டு முறைக்கு வெண்கூறை எட்டணை. நாழித் தயிர் அமிதினுக்கு இருநாழி நெல் ஆகத் திருப்படிக்குப் பசுவின்றேய் தயிர் நியதி நாழி.

தட்டளி கொட்டிகளுக்குக் கொற்று நெல்லுத் திங்கள் நாற்கலனே பதின்குறுணி நாழி உரி ஆக ஓராண்டு பன்னிரண்டு திங்களுக்கு வேண்டும் நெல்லு நிறைமதி நாராயத்தால் ஐம்பத்தேழு கலம்.

இந்நாட்டு பிரமதேயம் தென்ரக்கு...இலூர்ச் சவையார் கையின் மேற்படி பொலியூட்டாக வைத்த நிறைகுறையாப் பழங்காசு அறுபது. இக் காசால் ஒருகாசுக்கு ஆண்டுவரை பொலி நிறைமதி நாராயத்தால் இருகல நெல் ஆக வந்த நெல்லு நூற்றிருபதின்கலம். இந் நெல்லால் இவர்கள் கொண்டுவந்து செலுத்தக் கடவன ஒருகாசுக்கு நிறைமதி நாராயத்தால் பதின்கல நெல் அஃகம் ஆக ஸ்ரீ உடையாடை இணை மூன்று காசு பெற்றன ஒரு முறை முத்திங்களுக்கு ஓரணை ஆக ஓராண்டு நான்கு முறைக்கு ஸ்ரீ உடையாடை நாலணை. இப்பரிசு செலுத்தாது குத்துக் காற்படில் இத்தேவர்க்கேய் பன்னிரண்டரைக் காசு தண்டமும் பட்டுச் செலுத்தாது விட்டமுதல் இரட்டியும் குடுப்பது.

அமித குணவள நாட்டுப் பிரமதேயம் அவனிபசேகரமங்கலத்துச் சவையார் கையில் மேற்படி பொலியூட்டாக வைத்த நிறை குறையாப் பழங்காசு அறுபது. இக்காசால் ஒருகாசுக்கு ஆண்டுவரை பொலி நிறைமதி நாராயத்தால் இருகல நெல் ஆகவந்த நெல்லு நூற்றிருபதின் கலம். இந் நெல்லால் இவர்கள் கொண்டுவந்து செலுத்தக்கடவன. ஒரு காசுக்கு நிறைமதி நாராயத்தாற் பதின் கல நெல் அஃகம் ஆக ஸ்ரீ உடையாடை இணை மூன்று காசு பெற்றன ஒருமுறை முத்திங்களுக்கு ஒரு அணை ஆக ஓராண்டு

நான்கு முறைக்கு ஸ்ரீ உடையாடை நாலணை. இப் பரிசு செலுத்தாது குத்துக்காற் படில் இத்தேவர்க்கேய் பன்னிரண்டரைக் காசு தண்டமும் பட்டுச் செலுத்தாதுவிட்ட முதல் இரட்டியுங் குடுப்பது.

குடநாட்டுப் பிரமதேயம் புளியிடைச் சவையார் கையில் மேற்படி பொலியூட்டாக வைத்த நிறைகுறையாப் பழங்காசு நூற்றிருபது. இக்காசால் ஒருகாசுக்கு ஆண்டு வரை பொலி நிறைமதி நாராயத்தால் இருகல நெல் ஆகவந்த நெல்லு இருநூற்று நாற்பதின்கலம். இந்நெல்லால் இவர்கள் கொண்டு வந்து செலுத்தக்கடவன ஒருகாசுக்கு நிறைமதி நாராயத்தால் பதின்கல நெல் அஃகம் ஆக ஸ்ரீ உடையாடை இணை மூன்று காசு பெற்றன. ஒருமுறை முத்திங்களுக்கு ஈரணையாக ஓராண்டு நான்கு முறைக்கு ஸ்ரீ உடையாடை எட்டணை. இப்பரிசு செலுத்தாது குத்துக்காற்படில் இத்தேவர்க்கேய் இருபத்தைந்து காசு தண்டமும் பட்டு செலுத்தாது விட்ட முதல் இரட்டியுங் குடுப்பது.

இந்நாட்டுப் பிரமதேயம் கீரனூர்ச்சவையார் கையின் மேற்படி பொலியூட்டாக வைத்த நிறை குறையாப் பழங்காசு இருநூற்று ஒருபத்து நான்கு. இக்காசால் ஒருகாசுக்கு ஆண்டுவரை பொலி நிறைமதி நாராயத்தால் இருகல நெல்லாக வந்தநெல்லு நானூற்றிருபத்தெண் கலம். இந்நெல்லால் இவர்கள் நியதிப்படி கொண்டுவந்து செலுத்தக்கடவன நாழி நெய்க்கு இருபதின் நாழி நெல் ஆக திருமஞ்சனம் ஆடியருளப் பசுவின் நறுநெய் நியதி நானாழி. ஒருகாசுக்கு நிறைமதி நாராயத்தாற் பதின்கல நெல் அஃகம் ஆகத் துலாச் சந்தனத்துக்கு ஒருகாசு ஆகத் திருமேனிபூசும் சந்தனக்குழம்புச் சந்தனம் நியதி முப்பலம். இப் பரிசு செலுத்தாது குத்துக்காற்படில் இத் தேவர்க்கேய் ஐம்பது காசு தண்டம்பட்டுச் செலுத்தாது விட்ட முதல் இரட்டியும் குடுப்பது.

*இந்நாட்டுப் பிரமதேயம் சடங்கவிக் குறிச்சி சவையார் கையின் மேற்படி பொலியூட்டாக வைத்த நிறை குறையாப் பழங்காசு தொண்ணூறு. இக்காசால் ஒருகாசுக்கு ஆண்டு வரை பொலி நிறைமதி நாராயத்தால் இருகல நெல் ஆக வந்தநெல்லு நூற்றெண்பதின் கலம். இந் நெல்லால் நியதிப்படி இவர்கள் கொண்டுவந்து செலுத்தக் கடவது ஒரு காசுக்கு நிறைமதி நாராயத்தாற் பதின்கல நெல் அஃகம் ஆகப் பதின்ஐங்கழஞ்சு கற்பூரத்துக்கு ஒரு காசு ஆகத் திருமேனிபூசும் திருச்சந்தனத்தோடு கூட்டி அரைக்கும் கற்பூரம் நியதி ஏழரைக் காணம். இப்பரிசு செலுத்தாது குத்துக்காற்படில் இத் தேவர்க்கேய் இருபத்தைந்து காசு தண்டமும் பட்டுச் செலுத்தாது விட்டமுதல் இரட்டியும் குடுப்பது.

இந்நாட்டுப் பிரமதேயம் கடுங்கோமங்கலத்துச் சவையார் கையின் மேற்படி பொலியூட்டாக வைத்த நிறை குறையாப் பழங்காசு பதினறு. இக்காசால் ஒருகாசுக்கு ஆண்டு வரை பொலி நிறைமதி நாராயத்தால் இருகல நெல் ஆக வந்த நெல்லு முப்பத் திருகலம். இந்நெல்லால் இவர்கள் நியதிப்படி கொண்டு வந்து செலுத்தக் கடவன ஒரு இளநீர்க்கு நாழி நெல் ஆகத் திருமஞ்சனம் ஆடி அருள இளநீர் வழுவை உட்பட நியதி இரு நாழிணுக்கு நாழி இளநீர்க்கு நால் இளநீர் ஆக நியதி இடும்இளநீர் எட்டு. இப்பரிசு செலுத்தாது குத்துக்காற்படில் இத் தேவர்க்கேய் ஐந்து காசு தண்டமும் பட்டுச் செலுத்தாது விட்ட முதல் இரட்டியும் கொடுப்பது.

பேரூர்—பட்டீசுவரர் கோயிலில் திருவாதிரைத்திருவிழா 23-12-61-ல் நடைபெற்றது.

சாயாவனம்—சாயாவனேசுவரர் கோயிலில் இயற்பகைநாயனார்த் திருவிழா 26-12-61 முதல் 30-12-61 வரை நடைபெற்றது.

புதுக்கோட்டை—சற்குரு மாரிமுத்து சுவாமிகளுக்கு 73 ஆவது குருபூசை விழா 23-12-61-ல் நடைபெற்றது.

திரிசூலம்—திரிசூலநாதசுவாமி என்னும் பிரம்மபுரி ஈசுவரர் கோயிலில் ஆருத்திராதரிசனம் 23-12-61-ல் நடைபெற்றது.

திருக்குடந்தை—நாகேசுவரசுவாமி கோயிலில் திருவாதிரை விழா, திருவெம்பாவைத் திருவிழா 14-12-61 முதல் 22-12-61 வரை நடைபெற்றன.

திருநாவுக்கரசு நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்]

(முன் தொடர்ச்சி)

நாயனாரது திருவவதாரத்தின் பயனாக, முதற்கண், வடதமிழ் நாட்டிற் சைவ வான் பயிர் தழைக்க வகை யுண்டாயிற்று. பின்னர், அலகில் கலைத்துறை தழைத்தலும், அருந்தவத்தோர் நெறியாகிய திருத்தொண்டு நிலைபெறுதலும் ஆகிய பயன்கள் உளவாக வேண்டுதலின் அவரது திருவுள்ளம், தாம் திருவருள் பெற்று இன்புற்ற திருவதிகைத் தலத்திலே திருத்தொண்டு செய்திருந்து, இறைவன் திருவடியை அடையும் வகையில் அமைந்திருக்கவில்லை; தம்மை உடையானாகிய சிவபிரான் பல இடங்களிலும் திருக்கோயில் கொண்டு அடியவர்க்கு அருள்செய்து விளங்கும் இடங்கள்தோறும் சென்று, அவனை வணங்கித் திருப்பதிகம்பாடி, உழவாரப் பணியாகிய திருத்தொண்டினைச் செய்தல் வேண்டும் என்று விரும்பியது.

"அப்பருக்கு எண்பத்தொன்று" என்னும் மரபின்படி நோக்கினால், நாயனார் சமண சமயத்தினின்றும் நீங்கிச் சிவபிரானது திருவருளைப் பெற்றுப் பல்லவ மன்னனையும் சைவனாகச் செய்து, திருவதிகையில் எழுந்தருளியிருந்தபொழுது, அவருக்கு ஆண்டு **எழுபதிற்குமேல்** இருக்கலாம். இத்துணை முதுமைப் பருவத்தில் அவர் பல நாட்டிற்கும் செல்லும் வழிச் செலவினை மேற்கொள்ளுகிறார்; என்னே அவரது மனத்திட்பம் !

இவ்விடத்து ஒன்றை நாம் நினைவு கூர்தல் வேண்டும்; அஃதாவது, இஞ்ஞான்று போல, அஞ்ஞான்று ஓர் இடம்விட்டு மற்றோர் இடம் செல்வதென்பது எளிதான செயலன்று; மலையும், யாறும் பலப்பலவாகக் குறுக்கிட்டு வழிகாணப்படுதலே அப்பொழுது அரிதாய் இருக்கும். அதனால், கட்டிளமையை உடையோர்தாமும் இடம் விட்டுப் பெயர்ந்து செல்லுதலை மேற்கொள்ள அக்காலத்துப் பெரும்பான்மையும் நினையார். இது சங்க காலத்துப்புலவர் தாம் பரிசில் பெறக் கருதிச் சென்ற வழிகளின் அருமையை அவற்றின் இயல்பு திரியாதவாறு எடுத்துக்காட்டும் சொல்லோவியங்களாலும், கோப்பெருஞ் சோழன் என்னும் சோழ மன்னனை, அவன்பால் பேரன்பு கொண்டு, அவனைக் காணப் பேரவாக் கொண்டிருந்த பிசிராந்தையார் என்னும் பாண்டியனாட்டுப் புலவர், அவனைக் காண இயலாமலே இருந்து அவனது இறுதிக் காலத்திற் சென்று கண்டார் என்னும் வரலாற்றினாலும் நன்கு பெறப்படும். நாயனாரது காலத்திலும் இந்நிலை மாறிவிட்டது என்று கருதுதற்கு இடமில்லை. இந்நிலையில் எழுபதாண்டு முதியோர் இடையுறாது செல்லும் வழிச்செலவினை மேற்கொண்டு செய்தார் எனின், அவ்வருஞ்செயலை என்னென்பது!

நாயன்மார்கள் இங்ஙனம் மெய்வருத்தம் பாராது, அந்நாள் பலவிடத்தும் சென்று, பல திருக்கோயில்களிலும் இறைவனை வணங்கிப் பதிகம் பாடியருளினமையாலன்றோ, இன்று அத்திருக்கோயில்கள் பலவும் நின்று நிலவித் தென்னாட்டைச் சிவனுறை நாடாகச் செய்து விளங்குகின்றன! அவர்தம் திருத்தொண்டின் நெறியில் ஒரு சிறிதாயினும் செல்லா தொழியினும், அவரது அருமை பெருமைகளை ஓர் இமைப்பொழுதேனும் உள்ளத்தில் நினைவு கூர்வார்தாமும் இக்காலத்து அரியாராய் இருக்கின்றனர்! அதனை எண்ணுங்கால் உளதாவது வருத்தம்! வருத்தம்!! நிற்க.

தம்பெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் பலவற்றிற்கும் சென்று, அவனை வணங்க வேண்டும் என்று ஆர்வங் கொண்ட நாயனார், முதலில் திருவதிகைக்கு அருகில் உள்ள தலங்களை வணங்குவாராய், அத்தலத்தினின்றும் புறப்பட்டுத் **திருவெண்ணெய்நல்லூர், திருஆமாத்தூர், திருக்கோவலூர்** முதலிய தலங்களை வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்து,

உழவாரத் திருத்தொண்டு புரிந்து கொண்டு, திருப்பெண்ணாகடத்தை அடைந்தருளினார்.

சிவபிரானது திருவடையாளங்களைப் பெறுதல்

அங்குத் தூங்கானைமாடமாய் அமைந்துள்ள திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானைத் தலையார வணங்கி, வாயார வாழ்த்தினார். வாழ்த்தும் பொழுது, தமக்கு உள்ள ஒரு குறைபாட்டினை நீக்கியருளுமாறு அப்பெருமானிடம் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும் என்னும் ஓர் எண்ணம் அவரது உள்ளத்தில் தோன்ற, அங்ஙனமே ஒரு திருப்பதிகத்தால் அப்பெருமானது திருமுன்பில் அவ்விண்ணப்பத்தினைச் செய்தருளினார். அவ் விண்ணப்பமாவது, "அடியேன் சமண சமயத்தில் அகப்பட்டுழன்ற இந்த உடம்போடு கூடி வாழ்தலைச் சிறிதும் பொறுக்கலாற்றேன்; அதனால், அடியேனது உயிரை இவ்வுடலிலே வைத்துக் காக்க உமக்கு விருப்பம் இருக்குமாயின், உம்முடைய திருமுத்திரையை இவ்வுடம்பிற் பொறித்து இதனைத் தூய்மை செய்து, உமக்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும்" என்பதே. அத் திருப்பதிகத்துள் இன்று நாம் பெறுவன, மூன்று திருப்பாடல்களே. அவை வருமாறு:

"பொன்னார் திருவடிக்
கொன்றுண்டு விண்ணப்பம்
போற்றிசெய்யும்
என் ஆவி காப்பதற்கிச்
சையுண் டேல்இருங்
கூற்றகல
மின்னாரும் மூவிலைச்
சூலம்என் மேற்பொறி
மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள்
தூங்கானை மாடச்
சுடர்க் கொழுந்தே."

"ஆவா சிறுதொண்டன்
என்நினைந் தான்என்
றரும்பிணிநோய்
காவா தொழியிற்
கலக்கும்உன் மேற்பழி
காதல் செய்வார்
தேவா திருவடி
நீறென்னைப் பூசுசெந்
தாமரையின்
பூவார் கடந்தையுள்
தூங்கானை மாடத்தெம்
புண்ணியனே."

"கடவுந் திகிரி
கடவா தொழியக்
கயிலையுற்றான்
படவுந் திருவிரல்
ஒன்றுவைத் தாய்பனி
மால்வரையில்
இடபம் பொறித்
தென்னை ஏன்று கொள்ளாய்இருஞ்
சோலை திங்கள்
தடவுங் கடந்தையுள்
தூங்கானை மாடத்தெம்
தத்துவனே."

இத்திருப்பதிகத்தை நாயனார் அருளிச்செய்தபொழுது, தூங்கானை மாடச் சுடர்க் கொழுந்தாகிய சிவபிரானது திருவருளால் சிவபூதம் ஒன்று ஒருவரும் அறியாதபடி வந்து நாயனாரது திருத்தோள்களில் சூலக் குறியையும் பொறித்துச் சென்றது. அவ் வடையாளங்கள் தம் திருத்தோள்களில் தோன்றுதலைக்கண்ட நாயனார், பெருமகிழ்ச்சியுற்று, தமக்குத் தம்பெருமான் செய்த திருவருளை நினைந்து, கண்களினின்றும் அருவி போல அன்புக் கண்ணீர் பாயக் கும்பிட்டு, விழுந்து வணங்கி, "இனி நான் உய்ந்துவிட்டேன்" என்று சொல்லி, அப்பெருமானது திருவடிகளை வணங்கித் திருத்தொண்டு செய்துகொண்டு, பல நாட்கள் அங்குத் தங்கியருளினார்.

அப்பால் நாயனார் திருநெல்வாயில் அரத்துறைக்கும், திருமுதுகுன்றத்திற்கும் (விருத்தாசலம்) சென்று வணங்கித் திருப்பதிகங்கள் அருளிச்செய்து, திருத்தொண்டு புரிந்தார். மற்றும் உள்ள தலங்களை வணங்கிக் கொண்டு, கிழக்குத் திசைநோக்கி, நிவாநதியின் (வெள்ளாறு) கரையே நடந்தருளினார்.

தில்லை வணக்கம்

அங்ஙனம் நடந்தருளுகின்றவர், தில்லைத் தலத்தில் அம்பலத்தில் ஆடும் பெருமானது திருவடிகளை வணங்கி, உயிர்க்கு உடம்போடு உளதாகிய தொடர்பின் பயனை அடைய நினைத்து, அங்ஙனமே பெரும்பற்றப்புலியூராகிய தில்லையை அணுகினார்.

எல்லையை வணங்கல்

அணுகிய பொழுது நாயனார், 'இது, காரணக் கடவுளர்காணும் காண்டற்கரிய எம்

பெருமான், இவ்வுலகத்தோருங் காணும்படி உருவத்திருமேனி கொண்டு, தொடக்கமும் முடிவுமின்றித் திருக்கூத்தியற்றியருளும் திருத்தலம் அன்றோ!' என நினைந்து, அதன் எல்லையிலே தமது திருமேனி மண்ணிற் பொருந்த விழுந்து வணங்கி எழுந்து, அம்பல வாணரைக் காணும் அவாமீதூர, வயல் வழியாக விரைந்து சென்றருளினர்.

சோலை வயல்களின் காட்சி

செல்லும்பொழுது, சோலைகளிலெல்லாம் களிப்புத் தங்கிய மயில்கள் நாடக மகளிர்போல எதிர் எதிராக நின்று நடனம் புரிதலையும், பொய்கைகளில் தாமரை மலர்கள் அவற்றின் முகம்போல விளங்குதலையும் கண்டு, இன்புற்றுச் சென்றார். அவ்வழியில் உள்ள வயல்களில் மூங்கில் அளவாக வளர்ந்து மூங்கிற்காடு என்று கருதும்படி நெருங்கியுள்ள கரும்புகள் முற்றிக் கணுக்கள் வெடித்து, முத்துக்களைச் சொரிந்தன; அவை நாயனரது திருவேடப் பொலிவைக் கண்டு அவை மனம் உருகிக் கண்ணீர் சிந்துவன போலக் காணப்பட்டன.

நந்தவனக் காட்சி

அத்தகைய வயல்களையெல்லாம் கடந்து, திருநகரைச் சூழ்ந்துள்ள திருநந்தவனத்தை நாயனர் அடைந்தருளினர். அங்கு மரக்கிளைகளில் இருந்து குயில்கள் இனிமையாகக் கூவின. அவை, "பிறவியில் வீழ்த்தும் வழியினின்றும் விலகி, வீட்டைவிக்கும் நெறியை அடைய விரும்புகின்றவர்களே, பிறவிதோறும் வினைகளைப் பெருக்கி, அவைகளால் மேலும் மேலும் கட்டுணும் நீவிர், அக்கட்டினை அறுத்து வீடுபெற விரும்பினல், இத்தலத்திற்கு வாருங்கள்" என்று அழைப்பன போல இருந்தன.

அந் நந்தவனம், நம் பெருமானுக்கு உதவும் பெருமையுடையது என்னும் கருத்தினல், நாயனர் அதனையும் பணிவு தோன்றக் கைகூப்பித் தொழுதுகொண்டு சென்றார். அங்கு முன்னைத் தவமிகுதியால் கைத்தொண்டு செய்யும் பேற்றையும் பெற்று, அதன்கண் உறைத்து நின்று உயர்வெய்திய, தமிழுக்குத் தலைவராகிய நாயனரது திருவடிவைக் கிளிகளும் நாகணவாய்ப் பறவைகளும் கண்டு 'இது நாம் என்றும் காணாத ஓர் அற்புதத் திருவடிவமாய் இருக்கின்றதே' என் அதிசயித்து அவர் எதிரே சென்று, தாம் அத்தலத்தில் முன்பே பழகியுள்ள "அரகர, சிவசிவ" என்பன போன்ற சிவநாமங்களைச் சொல்லி வாழ்த்தின. மேலும் அப்பறவைகள் சிவபிரானைத் துதிக்கும் வேத மந்திரங்களாலே நாயனரைத் துதிக்க, அவைகள் அங்கு அடைந்துள்ள தவப்பயனை நினைந்து, நாயனரும் அவைகளைத் தொழுது, தில்லைத் திருமதிலின் மேற்றிசை வாயிலை அணுகியருளினர்.

அடியவர் எதிர் கொள்ளல்

அப்பொழுது அல்லலைத் தருகின்ற பிறவியை நீக்கியருள்பவராகிய நடராசப் பெருமானுக்கு அடியவர்களாய் இருப்பவர்கள், நாயனரது வருகையை யறிந்து எதிர் சென்று வணங்கிஎதிர்கொண்டார்கள். நாயனர் அவர்களுக்கு எதிர் வணக்கம் செய்து, வாயிலைக் கடந்து திருவீதியினுள்ளே வலமாகச் சென்றருளினர்.

திருவீதிக் காட்சி

திருவுடையந்தணர்கள் இல்லங்கள் தோறும் வேதத்துள் சிவபிரானைத் துதிக்கும் மந்திரங்களே எப்பொழுதும் ஒலிப்பதால், அத்திருவீதிகள் சிவமணம் நீங்காது கமழும் நிலையினவாய் இருந்தன. அவைகளில் நவமணி மாலைகளும், மலர்மாலைகளும், உலகத்தைப் பல நிலைகளில் நின்று நடாத்தும் கடவுளர்களது முடிகள் ஒன்றோடொன்று தாக்கினமையால் உதிர்ந்த இரத்தினங்களும் குப்பையாய்க் கிடக்க, அவற்றைக் காற்றுக் கடவுள் திரட்டி அப்புறப்படுத்துவதையும், கடற் கடவுள் நீர் தெளித்துத் தூய்மை செய்வதையும், அவர்கள் செயல்கள் செம்மையாய் அமையவில்லை என்று கருதி, அடியார்கள் திருவலகிட்டு, நீர் தெளித்துத் திருத்துவதையும் நாயனர் கண்டு, தம்மை மறந்து பேரன்புடையவராய், கொடிகள் வானளாவிப் பறக்கும் அவ்வீதிகளையும் வணங்கிக்கொண்டு, திருக்கோயிற் கோபுர வாயிலை அடைந்தருளினர்.

திருவாயின்மாடத்தை வணங்கல்

தில்லைவாழ்ந்தணர்களது வேத முழக்கமும் அடியார்களது துதி முழக்கத்துடன் நீங்கதிம்

ருக்கின்ற எழுநிலைக் கோபுரத்தை, நாயனார் வணங்கி எழுந்து, திருக்கோயிலினுட் புகுந்தருளினார்.

திருமாளிகையை வலம் வருதல்

திருக்கோயிலினுள் தம்மை மறக்குமாறு அளவு கடந்து எழுந்த அன்பினால் உடம்பெங்கும் மயிர்சிலிப்பு உண்டாக வலமாகச் சென்று, பொன் வாயிலை அடைந்தருளினார்.

பொன்னம்பலத்தை யடைந்து வழிபடல்

அவ்வாயிலில் சென்றபொழுது, பெருமான் பேரின்ப நடனம் செய்தருளும் பொன்னம்பலம் நேரே விளங்கியது. அதனைக் கண்டவுடனே சென்று, பல்கால் விழுந்து வணங்கி எழுந்தார். அவரை யறியாமல் அவரது கைகள் தலைமேற் குவிந்தன. கண்கள் மழைபோல் நீரைப் பொழிந்தன. மனம் முதலிய அந்தக்கரணங்கள் அனலிடைப்பட்ட மெழுகுபோல் உருகின. உடம்பு பலமுறை தானே நிலத்தின்மேல் விழுந்து எழுந்தது. இவ்வாறு அம்பலவாணரது அருட்கூத்தினை நேரே கண்டு வணங்கினமையால், அவருக்கு உண்டாகிய அன்பின் பெருக்கு அளவிடமுடியாததாய் இருந்தது.

அத்தகைய அன்பிற்குக் காரணம், அறிவும் இன்பமுமே உருவாகிய அருளம்பலத்தை இங்குக் கருவி கரணங்களால் நேரே கண்டு பொருந்தும் வகையில் அப்பொன்னம்பலம் விளங்குவதையும், அதனுள், அயன்மால் முதலிய யாவராலும் அறிதற்கரிய பெருமான், அருட்டிரு மேனிகொண்டு அருட்டிருக் கூத்தில், எடுத்த திருவடியினால், ஆராவின்பமாகிய அருளமுதத்தினைப் பொழிதலையும் உணர்ந்த உணர்வேயாகும்.

அதனால், இங்ஙனம் பலகால் வணங்கி எழும்போது, பெருமான், நாயனாரை, 'என்று வந்தாய்!' என்று வினவும் குறிப்பைத் தனது திருநடனத்தினிடையே காட்டியருள, மேலும், அன்பும் இன்பமும் பெருகினவராய், திருவிருத்தப் பதிகங்களை அருளிச்செய்தார். அவற்றுள், "ஒன்றி யிருந்து நினைமின்கள்" என்னும் திருப்பாடலில், "என்று வந்தாய் என்னும் எம்பெருமன்றன் திருக்குறிப்பே" என தமக்கு இறைவன் காட்டியருளிய திருக்குறிப்பை அருளிச்செய்தார்.

பின்பு அவற்றுடன் அமையாது, "பத்தனாய்ப் பாட மாட்டேன்" என்னும் திருநேரிசைத் திருப்பதிகத்தையும் அருளிச் செய்தார். அதனுள், "அடியேன் இங்கு வந்தது உமது திருக்கூத்தினை வணங்குதற்கே யன்றி, வேறொன்றிற்காகவன்று" எனக் கூறியருளினார். இப்பொருள் தரும் தொடர், "அடியேன் இங்நிலவுலகிற்கு வந்தது, இத் திருகூத்தினைக் காணும் பேற்றினைப் பெறவேயாகும்" என்னும் கருத்தினையும் உட்கொண்டதாகும்.

கைத்தொண்டு புரிந்தருளல்

இங்ஙனம் அம்பலத்தாடும் பெருமானது அருட்கூத்தினைப் பல முறை வணங்கி, பல திருப்பதிகங்களைப் பாடியருளிய பின்பு, 'கைத்தொண்டுசெய்தல் வேண்டும்' என்னும் விருப்பத்தால், திருமுன்பில் வணங்கிப் புறத்தே எழுந்தருளித் திருக்கோயிலின் இடங்களிலும், திருவீதிகளிலும், அன்புக்கண்ணீரினால், திருமேனியில்உள்ள திருவெண்ணீற்றுப்பூச்சு நனைய, திருப்பதிகங்களை அருளிச்செய்து, தமது உழவாரப் பணியைச் செய்தருளினார். அவற்றுள் ஒன்றே, நாம் இன்று பெற்றுள்ள, "அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம். அதனுள் "தில்லைப் பெருமான், தனது திருக் கூத்தினைக் காணும்பொருட்டு, மனிதப் பிறப்பை இனியும் எனக்கு அருளுவானோ!" என்று ஆராமையால் அருளிச்செய்தார். "தில்லைத் திருக்கூத்தனைக் காண்பதாயின், மனிதப் பிறப்பும் வேண்டுவதே" என்றுதிரு விருத்தத்திலும் அருளிச் செய்தார்.

திருவேட்களம் வணங்கல்

இவ்வாறு, பல நாட்கள் தில்லையில் எழுந்தருளி யிருக்குங்கால், அண்மையில் உள்ள திருவேட்களத்து இறைவரை வணங்க ஆங்குச் சென்று வணங்கி, "நன்று நாடொறும் நம்வினை போயறும்" என்னும் அரியதிருப்பதிகத்தினைப் பாடித்திருத்தொண்டு செய்து, பின்பு, 'திருக்கழிப்பாலை' என்னும் தலத்தை அடைந்தார்.

திருக்கழிப்பாலையை வணங்கல்

அங்கு மணவாளநம்பியாய் எழுந்தருளியுள்ள இறைவரை வணங்கி, "வனபவள வாய் திறந்து வானவர்க்கும் தானவனே என்கின்றாளால்" என்னும் காந்தாரப்பண் திருப்பதிகத்தையும், "வண்ணமும் வடிவும் சென்று கண்டிலார்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகத்தையும் அகப்பொருள் வகையாக அருளிச் செய்து, மேலும் "ஊனுடுத்தி யொன்பது வாசல் வைத்து" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகத்தையும் அருளிச் செய்தார். இங்ஙனம் பல திருப்பதிகங்கள் இத்திருத் தலத்தில் வெளிப்பட்டமையால் நாயனார். இவண் அடைந்தமையைச் சேக்கிழார், "திருக் கழிப் பாலைதன்னில்—நாவினுக் கரசர் சென்று நண்ணினார் மண்ணோர் வாழ" எனக் குறித்தருளினார்.

பின்பு, நாயனார் அத்தலத்தை விட்டு நீங்கும் பொழுது மீளவும் தில்லைத் திருக்கூத்தனைக் காணும் அவா மீதூர, பனைக்கை மும்மத வேழ முரித்தவன் என்னும் திருக்குறுந் தொகைத் திருப்பதிகத்தை, "அம்பலக் கூத்தனை அடியேன் இனைப்பொழுதும் மறந்து உய்வனோ" என அருளிச் செய்து கொண்டே தில்லையம்பலத்தை யடைந்து, பெருமானது திருக்கூத்தினை வணங்கினார். பின்பு, மனம் உருக, கண்கள் அன்பு நீரைப் பொழிய, வாய்மலர் திருப்பதிகத்தினை வெளிப்படுத்த, கை உழவாரப் பணியைச் செய்ய, அத்தலத்தை விட்டு நீங்க மனமில்லாது, பலநாட்கள் அங்கே தங்கியருளினார் அந்நாட்களில் எழுந்தனவே, 'அரியானை அந்தணர்தம் சிந்தையானை" என்னும் பெரிய தாண்டகத் திருப்பதிகமும், செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா எறிக்கும் சென்னி என்னும் திருநேரிசைத் திருப்பதிகமும்.

*

கரூர்—கல்யாண பசுபதீசுவரசுவாமி கோயிலில் ஆருத்ரா தரிசன விழா 23-12-61-ல் நடைபெற்றது.

திருப்புகலூர்—அக்கினீசுவரசுவாமி கோயிலில் ஆருத்ரா தரிசன விழா 23-12-61-ல் நடைபெற்றது.

வலிவலம்—ஏகச்சக்கர நாராயணபெருமாள் 38 ஆவது ஆண்டு திருப்பவனி விலாச விழா 16-1-62-ல் நடைபெற்றது.

வடலூர்—திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்களில் தைப்பூச விழா 20-1.62 முதல் 23-1-62 வரை நடைபெற்றது.

குடந்தை—ஆதிகும்பேசுவரசுவாமி ஆலயத்தில் திருமுறை அர்ச்சனை 5-1-62 முதல் தொடங்கப் பெற்றது.

காரமணிக்குப்பம்—சுப்பிரமணியசுவாமி கோயிலில் மார்கழிமாதம் பூராவும் திருவெம்பாவை, திருப்பாவை பாசுரங்கள் ஒலிபெருக்கி மூலம் பரவச் செய்யப்பட்டது.

திருமயிலைக் கபாலீச்சரத்தில் திருமுறை அர்ச்சனை

28—12—61-ல் திருமயிலை ஸ்ரீ கபாலீசுவரர் கோயிலில் திருமுறை அர்ச்சனையை அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் B.A.,B.L. துவக்கி வைத்தார்கள். இசையரசு திரு M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள் திருமுறை ஓதினார்கள். திருமுறைப்பண் ஆராய்ச்சி மாநாட்டிற்கு வந்திருந்த ஓதுவார்களும் பங்கு கொண்டார்கள். அறநிலைய உதவி ஆணையர் திரு. T. H. விவேகானந்தம்பிள்ளை அவர்கள் B.A.L.T. யும் கலந்துகொண்டார்கள். தர்மகர்த்தக்குழுத்தலைவர் திரு. கு. அய்யா சுப்பிரமணிய முதலியார் அவர்கள் யாவரையும் வரவேற்றார்கள். திரு. ப. சை. அண்ணாமலை முதலியார் அவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு- P. B. அண்ணங்கராசார்யசுவாமிகள், காஞ்சிபுரம்]

மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய திருக்கடித்தானப்பதியில் நம்மாழ்வாருடைய ஈடுபாட்டை அனுபவித்தோம் கீழ். இப்போது திருவண்பரிசாரத் திருப்பதியை யனுபவிப்போமாக. மலைநாட்டுத் திருப்பதிகளில் யாத்திரை செய்ய விரும்புமவர்கள் திருக்குறுங்குடியிலிருந்து நாகர்கோயில் வழியாகச் செல்லுவதும், கோவை பாலக்காடு ஷோரனூர் வழியாகச் செல்லுவதுமாக இரண்டு படிகளுள்ளன. முந்தின வழியிற் செல்லுமவர்கட்குத் திருவண்பரிசாரமே முதன் முதலாகச் சேவிக்கத்தக்க திருப்பதியாகும். பிந்தினவழியிற் செல்லுமவர்கட்கு இத்திருப்பதி முடிவாகச் சேவிக்கத்தக்கதாகும்.

இதனைத் திருப்பதிசாரமென்றே அந்நாட்டினர் வழங்குவர். வண்பரிசாரமென்றே நம்மாழ்வார் பாடியருளினர். நம்மாழ்வாரொருவரே பாடிய தலமிது. திருவாய்மொழியில் எட்டாம்பத்தில் மூன்றாம் பதிகமாகிய "அங்குமிங்கும்" என்னும் பதிகத்தில் ஏழாம் பாட்டில் "வருவார் செல்வார் வண்பரிசாரத்திருந்த எம் திருவாழ்மார்வற்கு" என்றிருப்பதொன்றே இத்தலத்திற்குப் பாடலாகும். ஏனையபாட்டுக்களில் இத்தலத்தின் திருநாமம் பொறிக்கப்பட்டிலதாயினும் இப்பதிகம் பூர்த்தியாகத் திருவண்பரிசாரப்பதியையே மங்களாசாஸனம் செய்வதாகப் பூருவாசாரியர்களின் திருவுள்ளம்.

இப்பதிகத்திற்கு முன்னர் சுருக்கமான அவதாரிகை காட்டி, பிறகு அதனைச் சிறிது விவரிக்கிறோம். இப்பதிகத்திற்கு முந்திய பதிகத்தில் பத்தாம்பாட்டில் "ஓர் கோல நீல நன்னெடுங்குன்றம் வருவதொப்பான்" என்று எம்பெருமானுடைய திருமேனியழகைச் சிந்தனைச்செய்தார். சிந்தித்த அவ்வழகு ஆழ்வாருடைய திருவுள்ளத்தைவிட்டு அகலவில்லை. அவ்வழகுடனே திருவண்பரிசாரத் திருப்பதியெம்பெருமான் மானஸ ஸாக்ஷாத்காரத்திற்கு இலக்காயினன். அப்பெருமானுடைய ஸௌந்தரியத்தையும் ஸௌகுமார்யத்தையும் ஆழ்ந்து சிந்தனை செய்த ஆழ்வார் 'அந்தோ! எம்பெருமான் இத்தகைய வடிவுடனே இவ்விருள்தருமா ஞாலத்தில் உலாவுகின்றானே! வானோர்க்கும் மண்ணோர்க்கும் அருமருந்தான இத்திருமேனிக்கு யாரால் என்ன தீங்கு விளையுமோ! நித்திய சூரிகளும் முக்தர்களும் பரிந்து நோக்கவேண்டிய திருமேனியன்றோவிது! எழும்பூண்டெல்லாம் அசுரப்பூண்டான இந்நிலத்தே தலைகாட்டத்தகாத இத்திருமேனி உலாவுவதுஞ் செய்வதே! பரிவர் ஒருவருமிலரே!' என்று வயிறெரிந்து அஞ்சி நடுங்க, அதற்கு எம்பெருமான் 'ஆழ்வீர்! நீர் இப்படி அஞ்சவேணுமோ? நமக்குப் பரிவுடையார் குறையற்றிருக்கின்றார்களே, இங்கு முமுட்சுக்களும் முனிவரும், அங்கு நித்திய முக்தர்களும் உள்ளார்களென்பதை உணரீரோ? ஏதுக்கு வீணாக அஞ்சுகின்றீர்? அஞ்சவேண்டா' என்று சமாதானப்படுத்த ஆழ்வார் தாம் ஒருவாறு அச்சம் தீர்ந்தவரான படியை இப்பதிகம் தெரிவிக்கின்றது.

இதில் மூன்றாம் பாட்டில் "ஆளுமாளார் ஆழியுஞ் சங்கும் சுமப்பார்தாம், வாளும் வில்லுங்கொண்டு பின் செல்வார் மற்றில்லை" என்றதை நோக்குமிடத்து ஆழ்வார் பரிந்து அஞ்சினமை தெரியவரும். மேலே பத்தாம் பாட்டில் "கலக்கமில்லா நல்தவ முனிவர் கரைகண்டோர், துளக்கமில்லா வானவரெல்லாந் தொழுவார்கள்" என்றதை நோக்குமிடத்து ஆழ்வார் ஒருவாறு மனம் தேறினமை தெரியவரும்.

எம்பெருமான் அடியவர்களது ஆபத்துக்களையெல்லாம் அவலீலையாகப் போக்க வல்லவனாய் அஞ்சினார்க்குப் புகலிடமாயிருப்பவனென்பதை ஆழ்வார் அறியாதவரல்லர். நம்போல்வார்க்கு நேரும் தீங்குகளை அப்பெருமானைக் கொண்டு போக்கிக்கொள்ள வேண்டியது உரியதாயிருக்க அப்பிரானுக்கு யாரால் என்ன தீங்கு விளையுமோவென்று

அஞ்சுவது அறிவிலிகளின் காரியமேயன்றி அறிவிற் சிறந்தவர்களும் யதார்த்த ஞான நிதிகளுமான ஆழ்வார்களுக்கு உற்றதோ வென்று சிலர் சங்கிக்க நேரும். அன்னவர்கள் தெளியுமாறு தெரிவிக்கிறோமிங்கு. ஆழ்வார்க்கு எம்பெருமான் அருள் செய்தது ஞானம் மட்டுமல்ல; அன்பையும் அருள் செய்திருக்கின்றான். ஞானம் மிக மிக முற்றின நிலைமையே அன்பெனப்படும். ஞானம் கனியக் கனிய அது அன்பாகப் பரிணமிக்கு மென்க. அங்ஙனம் பரிணமிக்கு மளவான ஞானத்தையே எம்பெருமான் ஆழ்வார்க்கு அருள்புரிந்தனன். திருவாய்மொழி தொடங்கும்போதே "மயர்வற மதிநல மருளினன் யவனவன்" என்று இதனையே ஆழ்வாரருளிச் செய்தாராயிற்று.

அன்பு முற்ற முற்ற உண்மையுணர்ச்சி கலங்கத் தொடங்கும். அக்கலக்க மடியாக விளையுஞ் செயல்கள் பல்வேறு வகைப்படும். "காக்கு மியல்வினன் கண்ண பெருமான்" என்றோதப்பட்ட பகவானை ஸர்வரக்ஷகனாகக் கொண்டிருந்த கொள்கை மாறி அவனை நாம் ரக்ஷிக்க வேணுமென்று நினைக்கப்பண்ணும் அக்கலக்கம்.

வடமொழியில் மங்களாசாசன மென்றும், தென்மொழியில் பல்லாண்டு பாடுதலென்றும் வழங்கப்படுவதை அனைவருமறிவர். பல்லாண்டு பாடுதலாவது என்ன? அதன் கருத்து யாது? என்பதை ஆராய வேணும். ஒரு குறையுமின்றி நீடூழிவாழ வேணுமென்று கோருவதே பல்லாண்டு பாடுதலாம். மங்களாசாஸன மென்பதும் இதுவே தான். "குறையொன்றுமில்லாத கோவிந்தா" என்றும் "மங்கலாநாஞ்ச மங்கலம்" என்றும் புகழப்பட்ட பகவானிடத்தில் குறையையோ அமங்கலத்தையோ நினைப்பதற்கே இடமில்லையாயிருக்க, மங்களா சாசனம் (அல்லது) பல்லாண்டு பாடுதல் எங்ஙனே ஸம்பாவிதமாகும்? உணர்ச்சியில் கலக்கம் விளைந்தாலன்றி இது ஸம்பாவிதமாக வழியில்லை. உணர்ச்சியில் கலக்க மென்பது தீவினைப் பயனன்றோ வென்று நினைக்க வேண்டா; கருமபரவசர்களான நம் போலியர்க்கு விளையும் கலக்கம் ஊழ் வினைப் பயனே யாகும். மாஞானியர்க்கு விளையும் கலக்கம் அன்பு முதிர்ச்சியின் காரியமாகு மத்தனை. "சார்ந்த இருவல் வினைகளுஞ்சரித்து மாயப்பற் றறுத்து" என்றிருக்கு மாழ்வார்களுக்கு இக் கலக்கம் எப்படியுண்டாகும்? என்றே கலங்கி நிற்பவர்களுக்கு இன்னமும் உணர்த்துகின்றோம். 'நலமந்தமில்லதோர் நாடு' எனப் பட்ட ஸ்ரீ வைகுண்டத்தில் வாழும் நித்திய சூரிகளுக்கும் இத்தகைய கலக்கமுண்டென்பதைப் பல பிரமாணங்களினாலும் அறிகின்றோம். திருமழிசையாழ்வார் தம்முடைய திருவந்தாதியில் (10) "ஆங்கார வாரமது கேட்டு அழலுமிழும் பூங்காரரவு" என்றொரு பாசுரம் பாடியுள்ளார். இப்பாட்டில் 'ஆங்கு' என்றது பரமபதத்திலே யென்றபடி. அவ்விடத்திலே ஆரவாரமாவது 'ஹாவு ஹாவு ஹாவு' என்று நித்தியரும் முக்தரும் செய்யும் ஸாமகான கோஷம். இது ஆதிசேஷனுடைய திருச்செவியிற்பட்டதாம். இது ஸாமகான கோஷமென்பது அவனுக்குத் தெரியாமையில்லை. தெரிந்திருந்தும் எம்பெருமான் திறத்துப் பரிவினால் கலக்கமுற்றான்; நிலவுலகத்தே தீங்கிழைத்த அரக்கருமசுரரும் இவ்விடத்தும் வந்து நலியக் கருதிக் கூச்சலிடுகின்றார்கள் போலும்! என்று கலங்கிவிட்டான். அதனால் அவர்களை எம்பெருமானருகில் கிட்ட முடியாதபடி செய்திடுவோமென்றெண்ணி விஷத்தீயை உமிழ்ந்துகொண்டே யிருக்கிறானாம் அவ்வாதிசேஷன்.

பட்டர் என்னும் பேராசிரியரும் இத்தகைய நிகழ்ச்சியை வடமொழி சுலோகமொன்றினால் கூறியுள்ளார். "ஸ்நேஹாத் அஸ்தாநர க்ஷாவ்யஸநிபிரபயம் சார்ங்க சக்ராஸிமுக்கியை:..." என்பது ஸ்ரீ குணரத்ன கோசம். திருமழிசை யாழ்வாருடைய பாசுரத்தில் ஆதிசேஷன் கூறப்பட்டனன்; இந்த சுலோகத்தில் 'ஐம்படை' என்னும் பஞ்சாயுதாழ்வார்கள் கூறப்பட்டனர் என்பதுவே வாசி. அஞ்ஞானத்திற்கும் கலக்கத்திற்கும் நிலமல்லாத விடத்திற் செய்தியே இதுவானால் இந்நிலத்து நிகழ்ச்சியைப்பற்றிச் சொல்லவும் வேணுமோ?

இதிஹாஸ புராணங்களிற் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளிலும் சில காட்டுவோம். இராமபிரான் வனவாஸ மெழுந்தருளின போது குகனென்னும் வேடர் பெருமானை அனுக்கிரகித்தவன்று இராமன், தம்பி இலக்குமணன் பாங்காக அமைத்த இலைப்பள்ளியிலே சீதாபிராட்டியோடு சயனித்திரா நிற்க, இச்சேர்த்திக்கு என்ன தீங்கு விளையுமோ

வென்று அதிசங்கை கொண்ட இளையோன் முதுகிலிட்ட அம்பருத்தூணியும் கையிற் பிடித்த வில்லுமாய் நடையாடும் மதிள் போலே உலாவிக்கொண்டிருக்க, இதைக் கண்ட குகன் 'ஒரு தம்பி (பரதன்) தாயைக் கொண்டு பெருமாளை நாட்டிலிருந்து காட்டிலே துரத்தினன்; இத்தம்பி (இலக்கும ணன்) தனியிடத்தில் என்ன தீங்கு விளைக் கத்தேடுகிறனோ!' என்று இளையோன் பக்க லில் அதிசங்கை பண்ணி 'இவன் ஏதேனு மொரு தீங்கு செய்யில் இவனையே தீர்த்து விடக் கடவோம்' என்று தானும் கையும் வில்லுமாய்க்கொண்டு இளையோன் மீதே கண்ணுங்கருத்துமாய் நின்றான்; குகன் இங்ஙனே நிற்கிறபடியைக் கண்ட அவனது ஏவல் தொழிலாளர்கள் 'இவர்களிருவருமாகக் கூடிப் பெருமாளுக்கு என்ன தீங்கு விளைவிக்க நினைக்கிறார்களோ!' என்று இருவர் திறத்தும் அதிசங்கைகொண்டு தனித்தனியே கையும் வில்லுமாயிருந்து பெருமாளுக்குக் காவல் செய்தார்களென்று வான்மீகி முனிவர் கூறுகின்றார். இந்நிகழ்ச்சியை அம்முனிவர் எங்குக் கூறியுள்ளாரெனில்; நிகழ்ந்த விடத்துக் கூறிற்றிலர்; பிறகு பரதாழ்வான் சித்திரகூட மலையிலிருந்து பெருமாளை மீட்டுக் கொண்டுபோக வெண்ணிவந்த காலத்து அவனிடத்தே குகன் கூறுவதாக வைத்துப் பேசியுள்ளார்.

இங்கு ஆராயவேண்டிய விஷயங்கள் பல; இராமபிரானுடைய ஆற்றலை இளையோன் அறியாதவரல்லர்; அறிந்து வைத்தும் அதனை மறந்து அவற்குக் காவல் செய்யவொருப்பட்டனர். இராமபிரான்மீது இளையோனுடைய அன்பு மிகுதியைக் குகன் அறியாதவனல்லன்; அறிந்து வைத்தும் அவன் மீது அதிசங்கைகொண்டனன்; இவ்வளவேயுமன்றி அவனால் பெருமாளுக்கு ஒரு தீங்கு விளைந்திடுமென்றும் நினைத்தனன். குகனுடைய ஏவலாளர்கள் குகனது பரிவை நன்கறிந்திருந்தும் அவன்மீதும் அதிசங்கை கொண்டனர். இவ்வளவுக்கும் யாது காரணமென்று கூறவந்த பிள்ளை லோகாசாரியர் சீர் வசன பூடணத்தில், 'ஒருநாள் முகத்திலே விழித்தவர்களை வடிவழகு படுத்தும்பாடாயிற்று இது" என்றருளிச் செய்து போந்தனர்.

தண்டகாரணியம் புகுந்த இராமபிரானுடைய வடிவழகைக் கண்ட முனிவர்கள் ஞானிகளில் தலைவராயிருந்தும், இவனே ஸர்வரக்ஷகன் என்னுமிடத்தை யறிந்திருந்தும் இவ்வடிவழகுக்கு என்ன வாட்டம் வருமோவென்று கலங்கி மங்களாசாசனம் செய்தனரென்று காணநின்றோம். ஸ்ரீராமாயணத்தில் தொட்ட தொட்ட விடமெல்லாம் மங்களாசாசனமேயாகவன்றோ விருப்பது. ஆழ்வார்களில் வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் விட்டு சித்தன் பெரியாழ்வாரென்று திருநாமம் பெற்றது மங்களாசாசனத்தி லூற்றத்தாலேயன்றோ. மணவாளமாமுனிகள் உபதேசரத்தின மாலையில்,

"மங்களா சாசனத்தில் மற்றுள்ள வாழ்வார்கள்
தங்கள் ஆர்வத்தளவுதானன்றிப்—பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான்
பெற்றான்
பெரியாழ்வாரென்னும் பெயர்"

என்றருளிச் செய்திருப்பது காண்க.

எதிர்த்தலையில் அன்பு முதிர முதிர 'இவ்விஷயத்திற்கு என்ன தீங்கு வருகிறதோ!' என்னுங் கலக்கமும் அச்சமும் உண்டாவது அஸம்பாவிதமன்று என்பதை இவ்வளவும் விவரித்தோமானோம், திருவண்பரிசாரத்திலுறையும் திருவாழ்மார்பன் மீது நம்மாழ்வார்க்குண்டான பத்திப் பெருங்காதல் அபாயசங்கையை விளைத்திட, அந்த சங்கையே ஒரு பதிகமாக வடிவெடுக்கின்றதாயிற்று.

(தொடரும்)

திருவிடைமருதூர் : மகாலிங்கசுவாமி கோயிலில் தைப்பூசவிழா 8—1—62 முதல் 21—1—62 வரை நடைபெற்றது.

திருநெல்வேலி ; திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் திருவாதிரைத் திருநாள் 14—12—61 முதல் 23—12—61 வரை நடைபெற்றது. சிவநெறிக் கழகச் சார்பில் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

திருவெம்பாவை திருப்பாவை மாநாடுகள்

1—1—62	முறையூர்	மீனாட்சி சொக்கநாதசுவாமி கோயில்
2—1—62	திருப்பூவணம்	புஷ்பவனேசுவரர் கோயில்
,,	வி. சூரக்குடி	சொக்கநாதசுவாமி கோயில்
3—1—62	கோவிலூர்	கொத்தவாலீசுவரர் கோயில்
,,	திருப்பாச்சேத்தி	திருநோக்கிய அழகியநாதசுவாமிகோயில்
,,	பாகனேரி	நீலகண்டேசுவரர் கோயில்
4—1—62	திருவேகம்பேட்டை	ஏகாம்பரநாதசுவாமி கோயில்
,,	நெய்குப்பை	மனமோதகண்டேசுவரர் கோயில்
5—1—62	சக்கை	வீரசேகரசுவாமி கோயில்
,,	மானூர்	சுப்பிரமணியசுவாமி கோயில்
,,	திருவொற்றியூர்	வான்மீகநாதசுவாமி கோயில்
6—1—62	கானாடுகாத்தான்	சிவலோகநாதசுவாமி கோயில்
,,	கண்டிரமாணிக்கம்	அழகியகண்டவிநாயகர் கோயில்
8—1—62	மதுரை	நன்மைதருவார் கோயில்
,,	ஏ. சிறுவயல்	மும்முடிநாதசுவாமி கோயில்
9—1—62	மானாமதுரை	சோமநாதசுவாமி கோயில்
17—12—61	திருவாரூர்	தியாகராஜசுவாமி கோயில்
20—12—61	திருக்காட்டுப்பள்ளி	அக்கினீசுவரசுவாமி கோயில்
21—12—61 22—12—61	பாபநாசம்	சீனிவாசப்பெருமாள் கோயில்
27—12—61	அம்பாசமுத்திரம்	காசிநாதசுவாமி கோயில்
16—12—61 17—12—61 23—12—61	இராமநாதபுரம்	சொக்கநாதசுவாமி கோயில்
28—12—61	இராமநாதபுரம்	கோதண்டராமசுவாமி கோயில்
18—12—61	திருப்புல்லணை	ஆதிஜெகந்நாதப்பெருமாள் கோயில்
22—12—61	திருவுத்தரகோசமங்கை	மங்களநாதர் கோயில்
24—12—61	திருவாடானை	ஆதிரெத்தினேசுவரர் கோயில்
31—12—61	முதுகுளத்தூர்	சுப்பிரமணியசுவாமி கோயில்
1—1—62	கமுதி	மீனாட்சிசுந்தரேசுவரர் கோயில்
27—12—61	நயினார்கோயில்	நாகநாதர் கோயில்
6—1—62	பெருவயல்	இரணபலி முருகன் கோயில்
7—1—62	திருச்சுழி	திருமேனிநாதசுவாமி கோயில்
7—1—62	கண்ணங்குடி	பசுபதீசுவரர்கோயின்
8—1—62	பாலவனத்தம்	கைலாசநாதர் கோயில்
9—1—62	பிடாரனேந்தல்	வேதபுரீசுவரர் கோயில்
9—1—62	பாலையம்பட்டி	வேணுகோபாலசுவாமி கோயில்
10—1—62	பந்தல்குடி	கரியமால் அழகர் கோயில்
,,	தீர்த்தாண்டதானம்	சகலதீர்த்தமுடையார் கோயில்
11—1—62	திருமாலுகந்தான்கோட்டை	செஞ்சடைநாதர் கோயில்
12—12—62	தேவிபட்டணம்	திலகேசுவரர் கோயில்
13—1—62	இராசசிங்கமங்கலம்	கைலாசநாதர் கோயில்
14—1—62	சாலைக்கிராமம்	வரகுணேசுவரர் கோயில்
27—12—61	சிதம்பரம்	தில்லையம்மன் கோயில்
3—1—62	இளையாத்தங்குடி	கைலாசநாதசுவாமி கோயில்
2—1—62	பழனி	தண்டாயுதபாணிசுவாமி கோயில்
25—12—61	காஞ்சிபுரம்	தேவராஜசுவாமி கோயில்
28—12—61	அரியாக்குறிச்சி	வெட்டுடையார் காளியம்மன் கோயில்

25—12—62	சத்தியமங்கலம்	வேணுகோபாலசுவாமி கோயில்
7—1 —62	கோவிலூர்	மந்திரபுரீசுவரர் கோயில்
13—1 —62	விளநகர்	சுவர்ணபுரீசுவரர் கோயில்
12—1 —62	தென்காசி	காசிவிசுவநாதர் கோயில்
1—1 —62	திருப்பாதிரிப்புலியூர்	பாடலீசுவரர் கோயில்
7—1 —62 8—1 —62 9—1 —62	திருக்கடவூர்	அமிர்தகடேசுவரர் கோயில்
,,	சீகாழி	சட்டைநாதசுவாமி கோயில்
11—1 —62	பெருஞ்சேரி	வாகீசுவரர் கோயில்
8—1 —62	திருத்துறைப்பூண்டி	பவஔஷதீசுவரர் கோயில்
10—1 —62	திருவம்பர் & கோயில்	திருமாகாளம் கோயில்கள்
7—1 —62	பந்தணைநல்லூர்	பசுபதீசுவரர் கோயில்
5—1 —62	நாகப்பட்டினம்	சௌந்திரராசப்பெருமாள் கோயில்
8—1 —62	சிவாயம்	இரத்தினகிரீசுவரர் கோயில்
6—1 —62 7—1 —62	தேரழுந்தூர்	ஆமருவிப்பெருமாள் வகையருக் கோயில்கள்
7—1 —62	அறந்தாங்கி	விசுவநாதசுவாமி கோயில்
5—1 —62	திருநெல்வேலி ஜங்ஷன் கோயில்கள்	
6—1 —62	கீழ்வேளூர்	அட்சயலிங்கசுவாமி கோயில்
4—1 —62 5—1 —62	கும்பகோணம்	ஆதிகும்பேசுவரர் கோயில்
10—1 —62	திருவையாறு	பஞ்சநதீசுவரசுவாமி கோயில்
,,	நாகப்பட்டினம்	காயாரோகணசுவாமி கோயில்
11—1 —62	பழயங்குடி	அகத்திசுவரசுவாமி கோயில்
10—1 62—	வீரவநல்லூர்	பூமிநாதசுவாமி கோயில்
11—1 —62	குமாரவயலூர்	சுப்பிரமணியசுவாமி கோயில்
13—1 —62	திருவதிட்டகுடி	வைத்தியநாதசுவாமி கோயில்
11—1 —62	தூத்துக்குடி	சங்கரராமேசுரசுவாமி கோயில்
12—1 —62	திருவாஞ்சியம்	வாஞ்சிநாதசுவாமி கோயில்
27—12—61	திருமோகூர்	காளமேகப்பெருமாள் கோயில்
1—1 —61	அம்பாசமுத்திரம்	கிருஷ்ணசுவாமிவகையறுக்கோயில்கள்
,,	மூவலூர்	மார்க்கசகாயசுவாமி கோயில்
6—1 —62	திருவெண்காடு	சுவேதாரண்யேசுவரர் கோயில்
4—1 —62	கோட்டூர்	கொழுந்தீசுவரசுவாமி கோயில்
,,	மன்னார்குடி	இராசகோபாலசுவாமி கோயில்
,,	திருவாய்மூர்	தியாகராசசுவாமி கோயில்
,,	எட்டிகுடி	சுப்பிரமணியசுவாமி கோயில்
6—1 —62	நீடாமங்கலம்	சந்தான இராமசுவாமி கோயில்
3—1 —62	ரெட்டியார் சத்திரம்	கோபிநாதசுவாமி கோயில்
6—1 —62 7—1 —62	பெரம்பலூர்	மதனகோபாலசுவாமி கோயில்
2 முதல் 5-1-62 வரை	திருப்பனந்தாள்	அருணஜடேசுவரசுவாமி கோயில்
31—12—61	திண்டுக்கல்	காளகஸ்தீசுவரர் கோயில்
6—1 —62	சின்னமனூர்	பூலாநந்தீசுவரர் கோயில்
14—1 —62	தாராபுரம்	கன்னிகாபரமேசுவரி அம்மன் கோயில்

திருவிளமர்

மத்தக மணிபெற மலர்வதோர்
　　மதிபுரை நுதல்கரம்
ஒத்தக நகமணி மிளிர்வதோர்
　　அரவினர் ஒளிகிளர்
அத்தக அடிதொழ அருள்
　　பெறு கணனொடும் உமையவன்
வித்தகர் உறைவது விரிபொழில்
　　வளநகர் விளமரே

—திருஞானசம்பந்தர்.

சங்ககாலத்தில்திருவாரூர் சோழமன்னர்களுக்குத்தலைநகராய் இருந்தது. கறவைக்கு முறைசெய்த காவலனை மனுநீதிச்சோழன் செங்கோலோச்சியது இத்திருநகரத்தில்தான். அத்தகைய நகர் பரந்து விரிந்தபான்மையுடையதாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அந்தப் பெருநகரின் ஒரு பாங்கர் விளமர் என்னும் பகுதியும் அடங்கியிருந்தது. அது இப்போது விளமல் என்று வழங்கப்பெற்ற சிற்றூராக இருக்கிறது. திருஞானசம்பந்தர் தேவாரத்தில் 'வளநகர் விளமர்,' வியன்நகர் விளமர்', 'செழுநகர் விளமர்' என்று இப்பதியை ஒரு நகரமென்று வைத்தே பாடியிருக்கிறார். இந்த பாடல் பெற்றபதியான திருவிளமர் திருவாரூருக்குத் தென்மேற்கே 3 கல்தொலைவிலிருக்கிறது. பஸ்கள் திருவாரூரிலிருந்து இவ்வழியாகப் போகின்றன. திருவாரூரினின்றும் குதிரை அல்லது மாட்டுவண்டிகளில் சென்று இப்பதியை அடையலாம். இது ஓடம்போக்கியாற்றின் தென்கரையில் இருக்கிறது. அழகிய சூழ்நிலையில் கோயில் அமைந்திருக்கிறது. பழைய சிறு கோயில்.

இறைவன் திருக்கோயில்கிழக்கு நோக்கியிருக்கிறது. கிழக்கு வாயிலில் மொட்டை கோபுரமும், கிழக்கு உள்வாயிலில் ஒருசிறு கோபுரமும் இருக்கின்றன. கோயிலுக்கு எதிரில் கிழக்கே திருக்குளம் இருக்கிறது. இரண்டு பிரகாரங்கள் உள்ளன. மேற்கு உள்பிரகாரத்தில் விநாயகர், கஜலட்சுமி, முருகன் சந்நிதிகளும், வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுரர் சந்நிதியும், கிழக்குப் பிரகாரத்தில் பைரவர் சந்நிதியும் இருக்கின்றன. மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்க மூர்த்திக்கு பதஞ்சலி மனோகரர் என்று திருநாமம். முன் மண்டபத்தில் தெற்கு நோக்கி அம்பிகையின் சந்நிதியிருக்கிறது. தேவியின் திருப்பெயர் யாழினு மென்மொழியம்மை என்பது. தேவாரப் பாடலில் பயிலப் பெற்றுள்ளது.

கோயிலில் நாள்தோறும் ஒரு காலபூசைதான் நடைபெறுகிறது. வைகாசி விசாகத் திருவிழா உண்டு. கோயிலுக்கு எதிரிலுள்ள திருக்குளம் அக்கினி தீர்த்தம் என்ற பெயருடையது.

திருஞானசம்பந்தர் இப்பதிக்கென ஒரு திருப்பதிகம் பாடியருளியிருக்கின்றார். "அளியினம் விண்டிசை யுறுமலர் நறுமது விரிபொழில் விளமரே'' என்று இயற்கைச் சூழ்நிலையை எடுத்தோதுகிறார். ஒருபாடலில் "பண்டலைமழலை செய் யாழென மொழியுமை" என்று இறைவியின் திருநாமத்தைக் குறிக்கிறார். இத்தலத்தில் பதஞ்சலிமுனிவர் இறைவனை வழிபட்ட காரணத்தால் பெருமானுக்கு பதஞ்சலி மனோகரர் என்ற பெயர் ஏற்பட்டதென்று சொல்லப்படுகிறது.

இந்த கோயிலின் கர்ப்பக்கிரகச் சுவர்களில் தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப் பெறுகின்றன. முன் மண்டபச் சுவர்களில் கழுக்காணியம்மையின் வரலாற்றை ஓவியமாகத் தீட்டப்பெற்றிருக்கிறது. மாயூரத்திற் கருகிலுள்ள கழுக்காணிமுட்டம் என்ற ஊரில் ஒரு அம்மையார் வாழ்ந்து வந்தார். சிவனடியார்களுக்கு அமுதளிப்பதே தமது கடனெனக் கொண்டிருந்தார். இறந்த தன் மகனையும் மறைத்து வைத்துவிட்டு அடியார்க்கு உணவளித்தார் என்பது அவ்வூரில் வழங்கப்படும் வரலாறு. அக் கோயிலில் அதைக்காட்டும் சிற்பங்கள் உள்ளன.

தெண்கடல் புடையணி நெடுமதில் இலங்கையர்
　　தலைவனைப்
பண்பட வரைதனில் அடர்செய்த பைங்கழல்
　　வடிவினர்
திண்கட லடைபுனல் திகழ்சடை புகுவதோர்
　　சேர்வினர்
விண்கடல் விடம்மலி யடிகள்தம் வளநகர்
　　விளமரே

—திருஞானசம்பந்தர்.

ஒ ர த் தூ ர்

செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும் பூதூர் பகுதியில் ஒரத்தூர் என்ற சிற்றூர் இருக்கிறது. உரத்தூர் என்ற பெயராலும் வழங்கப்படுகிறது. சென்னை - விழுப்புரம் இருப்புப்பாதையிலுள்ள கூடுவாஞ்சேரி என்ற நிலயத்திலிருந்து மேற்கே நான்கு கல் தொலைவில் இவ்வூர் இருக்கிறது. வண்டிப் பாதைதான்; மாட்டுவண்டியிற் சென்றே இதை அடையமுடியும். இந்த ஊரில் சிவனுக்கும் திருமாலுக்கும் இரண்டு கோயில்கள் உள்ளன. வரதராஜபுரம் என்ற பேரும் இவ்வூருக்கு இருந்ததாம்.

சிவன்கோயில்: இது ஒரே பிரகாரமுடைய சிறு கோயில். கிழக்கு பார்த்த சந்நிதி. கோயிலுள் நுழைந்ததும் இடது பக்கம் சனிபகவான் சந்நிதி இருக்கிறது. கொடிமரம், பலிபீடம், நந்தி இவைகள் சந்நிதிக்கெதிரில் இருக்கின்றன. நந்தியின் முகம் சுவாமி பக்கமாக இருக்காமல் கிழக்கு நோக்கியிருக்கிறது. இவ்வகையில் திருவல்லம், யாத்தூர், மணிமங்கலம் முதலிய இன்னும் சில தலங்களில் பார்க்கலாம். கர்ப்பக்கிரகத்தில் மூலலிங்கமூர்த்தி எழுந்தருளியுள்ளார். அவர் திருநாமம் அகஸ்தீசர் என்பது.

மேற்குப் பிரகாரத்தில் விநாயகர், அம்பிகை, முருகன் சந்நிதிகள் இருக்கின்றன. அம்பாளின் திருப்பெயர் காமாட்சி என்று



சொல்லப்படுகிறது. பிரகாரத்தின் வட மேற்கு மூலையில் இராமநாதர், பர்வதவர்த்தினி சந்நிதிகளும் இருக்கின்றன. வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவரரும், பைரவரும் எழுந்தருளியிருக்கின்றனர். வடகிழக்கு மூலையில் ஒரு மண்டபம் இருக்கிறது. அதில் ஒரு சுரங்கம் இருக்கிறது.

கோயிலில் ஒருகால பூசை நிகழ்கிறது. தலவிருட்சம் வில்வமரம். கோயிலுக்கு வெளியில் வடக்குப் பக்கம் திருக்குளம் இருக்கிறது.

கர்ப்பக்கிரகத்தின் மேலிருப்பது கஜப் பிரஷ்ட விமானம்—யானையின் பின்புறம் போன்று அமைக்கப்பட்டிருக்கிறது. கர்ப்பக்கிரக அடிச்சுவர்களில் தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அந்தக் கல்வெட்டு விஜயநகர மன்னன் வீரப்பிரதாப அச்சுததேவ மகாராயர் ஆட்சியில் சாலிவான சகாப்தம் *1451* (*கி. பி. 1529*) விக்குருதியாண்டில் பொறிக்கப் பெற்றிருக்கிறது. அதில், "ஜயங்கொண்ட சோழமண்டலத்து இரண்டாயிர வேலிப்பற்று அல்லது செங்காட்டுக் கோட்டத்திலுள்ள உரத்தூரின் உட்கிராமமான பனைத்தாங்கல் என்னும் சிற்றூரை, திரு அகத்தீசுவரமுடைய தம்பிரானர் கோயிலுக்கு, செல்லப்பர் என்ற வீரநரசிங்கராய நாயக்க சாலுவதண்ணுயக்கரின் நன்மைக்காகத் தானமாக வழங்கப்பட்டது" என்று கூறப்பெற்றிருக்கிறது. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் திரு

நாமம் "திரு அகத்தீசுவரமுடைய தம்பிரானார்" என்று குறித்திருக்கிறது. சந்நிதிக்கு



வடபுறத்தில் ஒரு தனிக் கல்லில் ஒரு தெலுங்கு கல்வெட்டும் இருக்கிறது. சாலிவாகன சகாப்தம் 1735, கலியுகம் 4914 (கி. பி. 1813) ஸ்ரீமுக ஆண்டில் உரத்தூர் சிவவிஷ்ணு கோயில்களிலுள்ள மண்டபங்கள், கோபுரங்கள், நந்தவனங்கள், முதலியவற்றை அவனிகட்டல பட்டாபிராமுடு என்பவரால் திருப்பணி செய்யப்பெற்றதாக அக்கல்வெட்டு அறிவிக்கிறது. திருவுருவங்களும் பிரதிஷ்டை செய்ததாகவும் அதினின்றும் தெரிகிறது. கோயில் மதில்சுவர்கள், பிரகாரங்கள் முதலியன பழுதடைந்த நிலையில் இருக்கின்றன.



திருமால் கோயில்: அகஸ்தீசர் கோயிலுக்கு தென்மேற்கில் சிறிது தூரத்தில் விஷ்ணு கோயில் இருக்கிறது. அதுவும் கிழக்கு நோக்கிய சந்நிதியுடையதே. எம்பெருமானின் திருநாமம் பிரசன்னவெங்கடேசப் பெருமாள் என்பது. ஸ்ரீதேவி பூதேவியான உபய நாச்சியார்களுடன் கிழக்கே திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் பெருமாள் சேவை சாதிக்கிறார். கர்ப்பக்கிரக முன் மண்டபத்தில் அனுமானும், எதிரில் கருடாழ்வானும் காட்சியளிக்கின்றனர். தாயார் தனிச் சந்நிதியில்லை. வடகிழக்கு மூலையில் ஒரு மண்டபம் இருக்கிறது. இந்த மண்டபம், விமானம், கிழக்குவாயில், கிழக்கு மதில்சுவர் முதலியவை அண்மையில் சென்னை திரிலோகா இரும்புபெட்டி கம்பெனி உரிமையாளர் திரு. G. T. மாணிக்கநாயகர் அவர்களால் சுமார் 2000 ரூபா செலவில் திருப்பணி செய்யப்பெற்று பிலவ கார்த்திகை 12-ந்தேதி (27-10-1961) ல் மகாசம்ப்ரோக்ஷணம் செய்யப்பெற்றது. இன்னும் மற்ற மூன்று புற மதிற்சுவர்கள் பிரகாரம் முதலியவை கட்டப்பெற்று திருப்பணி செய்யவேண்டிய நிலைமையில் இருக்கிறது. இந்த கோயிலையும் சிவன் கோயிலையும் திருப்பணி செய்து நல்ல நிலைமையில் பூசை முதலியன நடைபெறச் செய்ய வேண்டியது ஊர்மக்கள், மற்ற ஆஸ்திகப் பெருமக்கள் முதலியவர்களின் கடமையாகும்.



சோளிங்கபுரம் : இலட்சுமிநரசிம்மசுவாமி கோயிலில் 7-ஆவது ஆண்டு திருப்படித் திருவிழா 1—1—62-ல் நடைபெற்றது.

ஆலயத்தின் தத்துவத் தெளிவு

ஆலயமென்பது, ஆ-லயம், லயம்-வரை, அதாவது பரமசிவனுடைய அருட்டிருமேனி யானது தோன்றி நின்று இலயிப்பதற்குரிய இடம் எனப்படும். அல்லது, உலகங்களின் இலயவரையுள்ள இடம் அதாவது உலகின், தோற்றம் திதி லயம் எவ்விடத்திலோ (எந் தப் பரமசிவனிடத்திலோ) அது ஆலயம் எனினுமாம். அல்லது ஆலயம் என்பது பரமசிவன் அருட்டிருமேனி கொண்டு தங்கு மிடமாம். இதுவே கோயில், கோ - பரம சிவன், இல் - அருள்செய்யுமிடம் எனப்படு கின்றது.

அற்றுகலினன்றே,

'திருக்கோயி லுள்ளிருக்கும்' எனவும், 'ஆக்கையாற் பயனென் அரன் கோயில் வலம்வந்து', 'கால்களாற் பயனென் கறைக் கண்டனுறை கோயில்' எனவும், 'காலேயும் மாலேயுங் கால்பெயர்த் திடுவது ஆலயம் வலம் வருதற்கேசால்பினின்' எனவும், 'திருக்கோயி லில்லாத திருவிலூரும்' எனவும், 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' எனவும், 'கண் ணுதல் ஆலயம் நோக்குங் கண்களே கண்கள்' எனவும், 'அத்தன் ஆலயம் அனேத் தும் வைகலும்' எனவும் நூல்கள் கூறுகின் றன.

இத்தகைய ஆலயம், சரீரத்தை விரித் துக் குறிப்பிடுவதால் சரீரப்பிரஸ்தார மென வும், இருதயத்தை விரித்துக் குறிப்பிடுவதால் இருதயப்பிரஸ்தார மெனவும் இருவகைப் படும். அதாவது, உடம்பின் பஞ்சகோச முதலானவற்றைக் காட்டுவதும், உள்ளத் தில், சொல்லும் பொருளுமாயுள்ள விதத் தைக் குறிப்பித்துக் காட்டுவதுமென ஆல யம் இருவகைத்தாமென்பதாம்.

இக்கருத்தையே,

'அறிந்தே யுயிராலயத்தி னபேதம் மறந் தான் மெய்ஞ்ஞானி மலமற்று' என்பதானும், 'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும் இலங்கு முயிருடலனைத்தும் மீசன்கோயில்' என்பதானும், 'உள்ளம் பெருங்கோயி லூனுடம்போராலயமாம்' என்பதானும், 'குறிகளு மடையாளமுங் கோயிலும் நெறி களு மவர்நின்றதோர் நேர்மையும்' என்ப தானும், மற்றும், பல்லாற்றானும் உண்மை நூல்களும் அறிவுறுத்துகின்றன.

ஆலயத்திலுள்ள கருப்பக்கிருகம் அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நான மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண் டபம், என்னும் ஆறு மண்டபங்களும் உடம்பிலுள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறுதாரங்களையும் உணர்த்து கின்றன.

ஆலயத்திற்குள்ள பிரகாரங்களுள், முத லாம் ஆவரணம், கண்ணுக்குப் புலப்படும் அன்னமய கோசத்தையும், இரண்டாம் ஆவ ரணம் கன்மேந்திரியங்களும் பிராணனுங் கூடி நிற்பதாகிய பிராணமய கோசத்தையும், மூன்றும் ஆவரணம், ஞானேந்திரியங்களும் மனதுங்கூடிய மனோமய கோசத்தையும், நாலாம் ஆவரணம், ஞானேந்திரியங்களும் புத்தியுங் கூடியுள்ள விஞ்ஞானமய கோசத் தையும், ஐந்தாம் ஆவரணம், அந்தக்கரண விருத்தியும் ஆனந்தமுங்கூடிய, ஆனந்தமய கோசத்தையும் (இது காரணதேக மெனப் படும்) குறிப்பிடுகின்றன.

ஏழு பிரகாரங்களும் உள்ளவைகளெ னில், அவைகள் தோல், இரத்தம், மாமிசம், மேதை, எலும்பு, மச்சை, சுக்கிலம் என்னும் எழுவகைத் தாதுக்களையுங் குறிப்பிடுகின் றன வென்பதைக் காண்க.

கதவுகள், மூடுங்கால் சிவலிங்கத் திரு மேனியை மறைப்பதாலும், திறக்குங்கால் சிவதரிசனம் நிகழ்தலானும், அதுபோல், கோபம், ஆசை, ஆணவம் என்பன மறைக் கில் ஆன்மலிங்கம், காணமுடியாது போத லின், அவித்தையோடு அவை நீங்கியவிடத்து ஆன்மலிங்கங் காணப்படலானும், மறைப்பை யும் திறப்பையுங் காட்டுகின்றன.

இராசசபை, தேவசபை, நிருத்தசபை, கனகசபை, சிற்சபை என்பன அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம்

ஆனந்தமயம் என்னும் ஐந்து கோசங்களையுங் குறிப்பிடுகின்றன.

தூபி அல்லது கும்பம், இது இருதய கமலமாய் விளங்குவது; இதனுடைய கீழிடம், பிருதிவிதத்துவம், மேல்நாளம், அன்பு முதலான இருபத்துமூன்று தத்துவங்களாம்; நாளத்திலுள்ள முட்கள் அமரேசன் முதல் சிகேதன் ஈருகிய எழுபத்திரண்டு புவனங்களாம்; எட்டிதழ்கள் எட்டுத் தத்துவங்களாம். அறுபத்து நான்காயுள்ளன கேசர வடிவங்களாம், ஈசுரம், சதாசிவம் என்னும் இரண்டு தத்துவங்கள். நாளமாம் பூ என்பவற்றின், நுனி, அடிமுடிச்சு மாயையாம். பொகுட்டு சத்தியாம். அப்பொகுட்டில் தோன்றும் ஐம்பத்தொரு வடிவம் சிவ தத்துவங்களாம். கலசங்கள் சத்திகளாம். இதனுல் இருதய கமலத்தில் பரமசிவன் திகழ்கின்ற வுண்மை குறிப்பிடப்படுகின்றது.

உடம்பின் பிரமரந்திர மத்திய கபாலத் துவாரமே உத்தர கோபுரவாயிலாம். காற் பெருவிரலின் முடிவும், கையின் நடுவிரல்களின் முடிவும், குதத்துவாரமும், தக்கண கோபுரவாயிலாம். புருமத்தியமே அந்தராள கோபுரவாயிலாம். உந்தியே பலிபீடமாம். இருதயம், துவசத்தம்பம், பஞ்சகோசம், அந்தக்கரணம், புருடன் என்றும், கண்டம் நந்தி என்றுமறிவர் சிவயோகியர்.

துவசத்தம்பம் சுழுமுனுநாடியாம்' இடைகலை பிங்கலைநாடிகள் இதிற் சென்று அசைவற்றுத் தம்பம்போல் நிற்குந் தன்மை வருதலின் அதற்கொப்பாயிற்று. குண்டலி சத்தி போன்றது துவசத்தம்ப மென்பாருமுளர்.

இதை,

ஆயபதிதான் அருட் சிவலிங்கம்
ஆய பசுவு மடலேறென நிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய வரனிலை யாய்ந்து கொள்வார்க்கே

லன்பதனுற் றெளிக.

திருவாசி, பிரணவடிவமாம். இதனுல், அனைத்தும், பிரணவத்தினின்று தோன்றியொடுங்கு மென்பதும், மற்றும், பிரணவம் எல்லாத் தேவர்களுக்கும் பிறப்பிடமாயும், பரசிவற்கு இருப்பிடமாயும், உள்ளதென்பதும் குறிப்பிடப்பட்டன.

இதை,

ஓச்காரமே நற்றிருவாசி யுற்றதனி
னீங்கா வெழுத்தே நிறைசுடரா—மாங்கார
மற்று ரறிவரணி யம்பலத்தா னடலிது
பெற்றுர் பிறப்பற்றுர் பின்

என்பதனுனும் பிறவாற்றுனு முணர்க.

தேவாலயத்தில் திருவலகிடல், மனத்தின்பால் உள்ள காமம் வெகுளி முதலான குப்பைகளையும், தொண்ணூற்றாறு தத்துவங்க ளென்னும் குப்பைகளையும், களைதலைக் குறிப்பிடுகின்றது.

இதை,

'காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக்
கிடந்ததை,
யரிதினகழ்ந்து போக்கி'

என்பதனுனும்,

'பொய்த்துறு குப்பை கிளைத்தொளி பொங்கு
முத்தை யளித்தென முத்தை தனக்கு'

என்பதனுனும், பிறவாற்றுனும் உணர்க.

திருமெழுக்கிடல், மேற்கூறிப் போந்தவாறே குப்பைகளைக் களைந்தவுடன், தத்துவ ஞானமென்னும் நறுஞ் சாணத்தைக் கொண்டு, அன்பென்னும் நீருடன் கலந்து மெழுகில், மலேலையந் திகழுமிடத்து தகராகாச வொளியாகிய சிவலிங்கம் இனிது விளங்கும் என்பதைக் குறிக்கின்றது.

இதை,

சின முதலிய மயல்தீர மாற்றுபு
வினைதபு வாய்மையா மெழுக்கை யன்பெனும்
புனலொடு விரவியே பூசி னல்லது
மனமெனு மனையிடை வராதி லிங்கமே

என்பதனுலும்,

பொருதிற னமையிருள் நிறத்து
மதமுடை யடுசினத்தை வகைக்கடாவும்
யாப்பவிழ்த் தகற்றி யன்புகொடு மெழுகி

என்பதனுனும், பிறவாற்றுனு முணர்க.

திருவிளக்கிடல், மனம் என்னும் தகழியில், விவேகமென்னும் நெய்யை வார்த்து, உயிர் என்னுந் திரியைப்போட்டு, பிராணனுகிய காற்றை நிறுத்தி, ஆணவமாகிய இருளை நீக்கி, சிவஞான ஒளியைப் பரப்புந் தன்மையைக் குறிப்பிடுகின்றது.

இதை,

உடம்பெனு மனையகத்துள் உள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
யிடம்படு ஞானத்தீயால் எரிகொள விருந்து நோக்கிற்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே

எனவும், 'ஞான விளக்கினை யேற்றி' எனவும், 'அருள் விளக்கேற்றித் துன்பவிருளைத் துறந்து முன்புற மெய்யெனும் விதானம் விரித்து' எனவும், பிறவும் கூறுமாற்றுனறிக.

திரைச்சீலைபோல், மாயையென்னுந் திரையே, சிவத்தை யறியவொட்டாமல் மறைத்திருக்கின்றதென்றுணர்ந்து, அதனை, அம்மாயாவியாகிய பரசிவனது திருவருளால் (வாளால்) கிழித்தெறிந்து விட்டு, ஞானக் கண்ணால் சிவமாகிய இலிங்கத்தை நாடி நோக்கல் வேண்டும் என்பதைக் குறிக்கின்றது திரைச்சீலை.

இதை, 'மாயப்படலங் கீறித்தூய ஞான நடனம் பெற்றனன்?' எனவும், 'மாயைத் திரையை நீக்கி நின்னை யாரறிய வல்லார்' எனவும், பிறவும் கூறுமாற்றுனறிக.

இதனாற் போந்த பொருள் என்னையோ வெனின்? தேவாலயங்களை தேவதைகளாகவே பாவித்து வழிபடல் வேண்டும் என்பதாம். எனவே, சிவாலயத்தைச் சிவமாகவே சிந்தித்துத் தெரிசித்து வழிபடல் வேண்டுமென்பது கொள்ளக்கிடந்தமை காண்க.

அற்றாகலினன்றே, "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்று கட்டளையிடுகின்றது சிவஞானபோதத் திருமறையும்.

(திருவொற்றியூர்த் தலபுராண சாரம் என்ற நூலில் காசி-வாசி சிவானந்தயதீந்தர சுவாமிகள் எழுதிய முன்னுரையினின்றும் வெளியிடப் பெற்றது.)

திருவெம்பாவை திருப்பாவை மாநாடுகள்

29—12—61	வடமதுரை	சௌந்திரராஜப்பெருமாள் கோயில்
11—1—62	தென்கரை	மூலநாதசுவாமி கோயில்
9—1—62	மதுரை	மதனகோபாலசுவாமி கோயில்
12—1—62	காரைக்குடி	கொப்புடைய அம்மன் கோயில்
11—1—62	சித்தாய்மூர்	சுவர்ணஸ்தாபனேசுவரர் கோயில்
,,	ஆத்தூர்	சோமநாதசுவாமி கோயில்
,,	கோயில்பட்டி	பூவணநாதசுவாமி கோயில்
10—1—62	மடவார்வளாகம்	வைத்தியநாதசுவாமி கோயில்
13—1—62	ஆழ்வார்திருநகரி	ஆதிநாதர்ஆழ்வார் கோயில்
12—1—62	திருவாழ்கொளிபுத்தூர்	மாணிக்கவண்ணசுவாமி கோயில்
,,	புதுக்கோட்டை தேவஸ்தானங்களில்	
10—1—62	இடும்பாவனம்	சத்குணநாதசுவாமி கோயில்
19—1—62	காட்டுமன்னார் கோயில்	வீரநாராயணப்பெருமாள் கோயில்
12—1—62	இராமேசுவரம்	இராமநாதசுவாமி கோயில்
25—12—61, 26—12—61, 27—12—61	சத்தியமங்கலம்	வேணுகோபாலசுவாமி கோயில்
6, 7, 8-1-62	வேளூர்	வைத்தியநாதசுவாமி கோயில்
27—12—61	அம்பாசமுத்திரம்	காசிபநாதசுவாமி கோயில்
10—1—62	சிதம்பரம்	அனந்தீசுவரர் கோயில்
11—1—62	சங்கரநயினர் கோயில்	சங்கரநாராயணசுவாமி கோயில்
7—1—62	மேலூர்	கல்யாணசுந்தரேசுவரர் கோயில்
11—1—62	திருமருகல்	இரத்னகிரிசுவரசுவாமி கோயில்
12—1—62	திருக்கண்ணபுரம்	சௌரிராஜப்பெருமாள் கோயில்
5—1—62	திருநெல்வேலி	நெல்லை சங்கீத சபையில்

ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

29-12-61	வடமதுரை சௌந்திரராஜப்பெருமாள் கோயில்	திருவெம்பாவை திருப்பாவை மாநாடு
30-12-61	திண்டுக்கல் காளகஸ்தீசுவரர் கோயில்	,,
2—1—62	பழனி, தண்டாயுதபாணிசுவாமி கோயில்	,,
3—1—62	ரெட்டியார் சத்திரம் கோபிநாதசுவாமி கோயில்	,,
4—1—62	மன்னார்குடி, இராஜகோபாலசுவாமி கோயில்	,,
,,	தஞ்சாவூர், தஞ்சாவூர் அரண்மனைக் கோயில்கள்	,,
5—1—62	கும்பகோணம், ஆதிகும்பேசுவரர் கோயில் திருமுறை அர்ச்சனைத் துவக்கவிழாவும்	,,
,,	சிக்கல், நவநீதீசுவரர் கோயில்	,,
,,	நாகப்பட்டினம் சுந்தரராஜப்பெருமாள் கோயில்	,,
6—1—62	திருவெண்காடு, சுவேதாரண்யேசுவரர் கோயில்	,,
,,	வைத்தீஸ்வரன் கோயில், வைத்தியநாதசுவாமி கோயில் திருமுறை அர்ச்சனைத் துவக்கவிழாவும்	,,
7—1—62	சீர்காழி, சட்டநாதசுவாமி கோயில் திருமுறை அர்ச்சனைத் துவக்கவிழாவும்	,,

திருநாவலூர்த் திருப்பணி

ஸ்ரீ சென்னமல்லீசுவரர் கோயில் அனுபூதிமண்டபத்தில் 27—1—62 மாலை 7 மணிக்கு மணலி திரு. S. இராமகிருஷ்ண முதலியார் B A. அவர்கள் தலைமையில், அறநிலைய அமைச்சர் திரு. M. பக்தவத்சலம் B.A.B.L., அவர்கள் திருநாவலூர்த் திருப்பணி விழாவைத் துவக்கிவைத்தார்கள். திருவாளர்கள் O. V. அழகேசன், ச. சச்சிதானந்தம் பிள்ளை B.A.L.T., K.M. பாலசுப்பிரமணியம் B.A.B.L , சரவண மாணிக்கவாசக சுவாமிகள் முதலியோர் திருநாவலூர்க் கோயில் திருப்பணி செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேசினார்கள். மணலி அறநிலையத்திலிருந்து மூவாயிரம் ரூபாய் நன்கொடை அளிப்பதாக மணலி திரு. S. இராமகிருஷ்ண முதலியார் அவர்கள் வாக்களித்தார்கள்.

திருமயிலைக்கபாலீச்சரத்தில் 28-1-62 மாலை 7 மணிக்கு உயர்மன்ற நடுவர் திரு. R. சதாசிவம் B A., M.L. அவர்கள் தலைமையில், திருவாளர்கள் கு. அய்யா சுப்பிரமணிய முதலியார், G. M. முத்துசாமி பிள்ளை I.A.S. (Retd), G. கலியாணம் M.A., K. M. பாலசுப்பிரமணியம் B A.,B L., ப. சை. அண்ணாமலை முதலியார், கூனம்பட்டி சரவண மாணிக்கவாசகசுவாமிகள் முதலியவர்கள் சுந்தரமூர்த்திசுவாமிகளின் பெருமையை எடுத்துக்கூறி திருப்பணிக்குப் பொருள் உதவுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

பத்மனாபபுரம் குரூப் சூப்பிரண்டெண்ட் அலுவலகத்திலிருந்து வெளியிடும்

விண்ணப்பம்

இந்த குரூப்பைச் சேர்ந்த மண்டைக்காடு தேவஸ்தானத்தில் 1962 மார்ச்சு 4-ஆம் தேதி ஞாயிறன்று திருக்கொடியேற்றமும் ஷை மாதம் 9-ம்தேதி வெள்ளியன்று வலியபடுக்கையும் ஷை மாதம் 13-ம் தேதி செவ்வாயன்று கொடையும் நிகழுமாதலால் மெய்யன்பர்கள் வருகைதந்து சிறப்பிக்கும்படி வேண்டப்படுகிறது.

இடம்: பத்மனாபபுரம்
தேதி: 12-1-1962

நல்லகுற்றாலம்பிள்ளை
சூப்பிரண்டெண்ட்.

செய்திகள்

விளநகர்: வரதராசப்பெருமாள் கோயிலில் 8—12—61 முதல் 18—12—61 வரை பகல் பத்து, இராப்பத்து விழா நடைபெற்றது.

செட்டிகுளம்: ஏகாம்பரேசுவரர், தெண்டாயுதபாணி சுவாமி கோயிலில் அருள் நெறி திருக்கூட்டத்தின் 5-ஆவது ஆண்டுவிழா 6—1—62-ல் நடைபெற்றது.

பாகனேரி: விண்ணவண்ணப்பெருமாள் கோயிலில் 18-12-61 முதல் 27-12-61 முடிய ஸ்ரீவைகுண்ட ஏகாதேசி உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீமுஷ்ணம்—நித்தீசுவரசுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 17-1-62-ல் நடைபெற்றது.

தருமபுரி—திருமுருகப்பெருமான் கோயிலில் திருத்தேர்ப் பெருவிழா 22-1-62-ல் நடைபெற்றது.

திண்டிவனம்—திண்டிரினீசுவரசுவாமி கோயிலில் 22-12-61-ல் ஆருத்ரா தரிசனம் நடைபெற்றது.

திருவேடகம்—ஏடுகநாதசுவாமி கோயிலில் 30-12-61-ல் அஷ்டபிரதட்சண உற்சவம் ஐந்து வெள்ளி வாகனங்களில் பஞ்சமூர்த்தி சுவாமிகள் புறப்பாடு நடைபெற்றது.

மன்னார்குடி—இராசகோபாலசுவாமி கோயிலில் 4-1-62-ல் ரோகிணி மண்டபத் திறப்புவிழா நடைபெற்றது.

திருப்புடைமருதூர்—நாறும்பூநாதசுவாமி கோயிலில் 12-1-62 முதல் 22-1-62 வரை தைப்பூசவிழா நடைபெற்றது.

காட்டுமன்னார் கோயில்—வீரநாராயணப்பெருமாள் கோயிலில் இராசகோபுரத் திருப்பணித் துவக்கவிழா 20-1-62-ல் நடைபெற்றது.

திருச்சேறை—சாரநாதப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 13-1-62 முதல் 21-1-62 வரை நடைபெற்றது.

அரசலூர்—தாயுமானசுவாமி கோயிலில் தைப்பூச விழா 21-1-62-ல் நடைபெற்றது.

தண்டலைச்சேரி—நீணெறிநாதசுவாமி கோயிலில் அரிவாட்டநாயனார் பக்தோற்சவம் 19-1-62-ல் நடைபெற்றது.

சென்னிமலை—சுப்பிரமணியசுவாமி கோயிலில் தைப்பூச ரதாரோகண விழா 13-1-62 முதல் 26-1-62 வரை நடைபெற்றது.

திருப்பரங்குன்றம்—ஆண்டவர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயிலில் தெப்பப் பெருவிழா 7-1-62 முதல் 17-1-62 வரை நடைபெற்றது.

பழயங்குடி—சண்முக சுப்பிரமணியர் ஆலயத்தில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 26-1-62-ல் நடைபெற்றது.

சிறுவாச்சூர்—மதுரகாளியம்மனுக்கு சிறப்புப் பூஜைகள் 3, 4, 5-2-62 தேதிகளில் நடைபெறும்.

திருக்கடம்பந்துறை—திருக்கடம்பந்துறையில் 21-1-62-ல் தைப்பூச மகோற்சவம் நடைபெற்றது.

பாபநாசம்—இராமலிங்கசுவாமி தேவஸ்தானம் 108 சிவாலயத்தில் 16-12-61 முதல் 6-2-62 வரை கோளறுபதிகம் பாராயணம் நடைபெறும்.

பேட்டவாய்த்தலை—மத்யார்ச்சுனேசுவரசுவாமி கோயிலில் தைப்பூச விழா 11-1-62-ல் நடைபெற்றது.

மயிலாப்பூர்—கபாலீசுவரர் தெப்பத்திருவிழா 20—1—62ல் நடைபெற்றது. 21, 22—1—62ல் சிங்காரவேலர் தெப்பத்திருவிழாநடைபெற்றது.

திருப்புகலூர்—அக்கினீசுவர சுவாமி கோயிலில் தைப்பூசவிழா 20—1—62ல் நடைபெற்றது.

திருநாங்கூர்—சுப்பிரமண்ய மூர்த்தியின் 19ஆவது ஆண்டு தைப்பூச விழா 21—1—62ல் நடைபெற்றது.

இராமேசுவரம்—இராமநாத சுவாமி தேவஸ்தானத்தின் இரண்டாம் பிரகாரம் திருப்பணி ஆரம்பவிழாவை அகில இந்திய இந்து அறநிலைய குழுத்தலைவர் டாக்டர் திரு சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் 26—1—62ல் நடத்திக் கொடுத்தார்கள். சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ. பி. எல். அவர்களும், மதுரை துணைஆணையர் திரு ஏ. சக்கரை, பி. ஏ. பி. எல் அவர்களும் அவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

அழகர்கோயில்—அழகர்கோயில் தேவஸ்தான ஆலய ஊழியர் குடியிருப்பு மனைக்கு சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் இந்திய இந்துமத அறநிலையக் குழுத்தலைவர் டாக்டர் திரு சி. பி. இராமசாமி அய்யர் அவர்களால் 28—1—62ல் அடித்தளக் கல்நாட்டப் பட்டது.

சென்னையில்—திருநாவலூர் ஆலய திருப்பணி பிரசார தொடக்கவிழாவை சென்னை மல்லீசுவரர் சென்னை கேசவப்பெருமாள் கோயில் பரம்பரை தர்மகர்த்தர் திரு மணலி எஸ். இராமகிருஷ்ண முதலியார், பி. ஏ., அவர்கள் தலைமையில் சென்னை அறநிலைய அமைச்சர் திரு எம். பக்தவத்சலம், பி. ஏ. பி. எல்., அவர்களால் 27—1—62ல் ஆரம்பிக்கப்பெற்றது.

ஆயக்குடி—ஸ்ரீசோளீசுவர சுவாமி கோயில் பராமரிப்பு, நிர்வாகம் வகையறாக்களை பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேஸ்தானத்தில் ஒப்புக்கொள்ளும் வைபவம் 26—1—62ல் நடைபெற்றது.

சிறுவாச்சூர்—ஸ்ரீமதுரகாளி அம்மன் கோயிலில் ரூ. 30,000 செலவில் திருப்பணி செய்யத் திட்டமிட்டிருப்பதால் அன்பர்கள் அனுப்பும் நன்கொடையை காரியதரிசி, மதுர காளியம்மன் திருப்பணிக்கமிட்டி, சிறுவாச்சூர், பெரம்பலூர் தாலுகா, திருச்சிமாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

வைத்தீசுவரன் கோயில்—வைத்தியநாதசுவாமி கோயிலில் பிரமோற்சவம் 28—1—62 முதல் 6—2—62 முடிய நடைபெறும்.

பழமலை—பழமலை நாதப்பொருமானுக்கு மாசிமகத்திருவிழா 10—2—62 முதல் 21—2—62 வரை நடைபெறும்.

திருஞானசம்பந்தர் அருளிச் செய்த

கோளறுபதிகம்

வேயுறு தோளிபங்கன் விடம்உண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

[மூங்கிலைப் போன்ற தோள்களையுடைய உமாதேவியாரைப் பாகமாக உடையவரும், நஞ்சுண்ட திருநீலகண்டரும் ஆகிய சிவபெருமான் மிக இனிய வீணையை மீட்டி, குற்றமற்ற சந்திரனையும் கங்கையையும் திருமுடிமேல் அணிந்து என் உளத்தில் புகுந்து உறைகின்றான். ஆதலின் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகிய ஒன்பது கோள்களாலும் துன்பம் இல்லை; அவை அடியவர்களுக்கு மிக்க நன்மையைச் செய்யும்.]

இப்பதிகத்தின் ஏனைய பத்துப்பாடல்களிலும் திருஞானசம்பந்தர், "பயணத்திற்கு ஆகாதென விலக்கப்பட்ட பன்னிரண்டு நட்சத்திரங்கள், திருமகள், துர்க்கை, வெற்றிமாது, பூமகள், திசைதெய்வங்கள், எமன், அக்கினி, காலதூதர்கள், கொடிய நோய்கள், அசுரர்கள், இடி, மின்னல், பஞ்ச பூதங்கள், சிங்கம், புலி, யானை, பன்றி, பாம்பு, கரடி, வெப்பு நோய், நளிர்சுரம், வாதம், பித்தம், வினைகள், இலங்கையரசன் முதலிய அரக்கர்கள், பிரமன், திருமால், தேவர்கள் முதலிய யாவராலும், இறைவன் என் உளத்தில் புகுந்து உறைகின்ற காரணத்தால், தீங்குகள் உண்டாகா; இது நமது ஆணை" என்றருளியிருக்கின்றார்.

அடியவர் திருநட்சத்திரங்கள்

பிலவ—மாசி

சைவம்

12உ—எறிபத்தநாயனார்
19உ—காரிநாயனார்
23உ—கோச்செங்கட்சோழநாயனார்

வைணவம்

5உ—குலசேகர ஆழ்வார்



திருமாகாளம் இராஜகோபுரமும் திருக்குளமும்



திருமாகாளம் வசந்தமண்டபம்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34. Printed at Paari Achakam, 127, Broadway, Madras-1.